

# சுடுமணல்

சுப்ரபாரதிமணியன்



காவ்யா

T
891.481 03
M 314 C

T
891.481
03
M314C

Library IIAS, Shimla
T 891.481 03 M 314 C
00089980

CHUDUMANAL
(Tamil Novel)

SUBRABHARATHI MANIYAN
(c) Author

First Edition December 1992

Published by LAKSHMI SUNDARAM

KAAVYA
16, 17th E Cross
Indiranagar
Bangalore-560038

wrapper Design : Veera Santhanam

Printed at Jennyram press
Madras-600 094

Price Rs.15.00

T
891.481 03
M 314 C

Acc. No. 89980
Date 15-7-98
SIMLA

# கவனம் தேவை

அரசியல்வாதிகளின் சித்து விளையாடல்களுக்கு வலுவான ஆயுதங்களாக ஒவ்வொரு பிரதேசத்திலும், ஒவ்வொரு விதமான பிரச்சினை மேலோங்கி நிற்கிறது. இதில் மண்ணின் மைந்தர்கள் பிரச்சினை உலகமெங்கும்வெடித்துக்கொண்டிருக்கிறது.

சுரண்டலையும், அடிமைப்படுத்தும் அடக்குமுறையையும் எதிர்த்து உலகமெங்கும் உரிமைப் போர் நடத்துகிற மண்ணின் மைந்தர்கள் ஓர்புறம்.

தனது இனத்தையே சுரண்டிக் கொழுத்த வருகிற போது, அதற்கு இடையூறாக வருகின்றவற்றை எதிர்நோக்க, தனது சுரண்டலுக்குள்ளாகும் இனத்தாரையே ஆயுதமாகவும். கேடயமாகவும், ஆக்கிக் கொள்ளும் பொறுக்கி அரசியல் வாத வேசித் தன்மைகள் இன்னொருபுறம்.

தான் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு, தண்டிக்கப்படலாம் எனும் போது, அறிவை மழுங்கடிக்கும் உணர்வுப் பூர்வ விபரீதங்களைக் கையாண்டு. அப்பாவி பொதுமக்களை சேதப்படுத்தித் தப்பித்துக் கொள்ளும் வெறிநாய் வக்கிரவாதிகளிடமும், தரகு பேர சுய நலமிகளின் இடையறாத சாகசங்களிலும் சிக்கித் தவிக்கும் தேசங்களில் நமது இந்தியா மென்மேலும் ஆழ்ந்து கொண்டிருக்கிறது.

அறிவுப்பூர்வமாய் பேசுவதைக் காட்டிலும் உணர்வுப் பூர்வமாய் அணுகுவது ரொம்பவும் ஆபத்தான சமாச்சாரம். ஓர் சமூகப் பொறுப்பு வாய்ந்த படைப்பாளி தவிர்க்க இயலாத போது, அதுவும் நியாயத் தேடுதலின் இக்கட்டில்தான் இதில் இறங்க வேண்டும்.

கரணம் தப்பினால் மரணமாகிற இந்த பயன்பாட்டுக் கருவியை சுப்ரபாரதிமணியன் துணிச்சலாகக் கையிலெடுத்துள்ளார். எக்கணமும் சாதி, மதம். இனம், மொழி, நீர் என ஏதேனுமொரு பிரச்சினை பற்றியெரியும், நீருபூத்த நெருப்புறங்கும் சூழலில் பல ஆண்டுகளாக வாழ்ந்தனுபவித்த காயங்களையும், தழும்புகளையும் அடையாளம் காட்டும் ஓர் சாட்சிமை இந்நாவலெங்கும் மேலோங்கியுள்ளது.

கணந்தோறும் பயந்து மூச்சடக்கி மூச்சடக்கிபட்ட அவஸ்தைகளின் வாக்குமூலத் தோம்புதலாகவும் இந்நாவலின் பல இடங்களை உணர முடிகிறது.

வேலையின்மை என்பது மனிதத்துவ மேலாண்மையை; இளைய சமூகத்தின் தன்னம்பிக்கைகளை; உன்னதமான உறவுகளை; காதல் சங்கீதங்களை நசுக்கி நாசமாக்குகிறது என்பதையும், இந்நாவல் மிக எளிமையாகவும், பொய்மையின்றியும் பேசுகிறது.

சிகரம் நோக்கிய கனவுகளின் ஆத்மா, படுபாதாளத்தில் சாந்தியடையும் அவலட்சனத்தை வாரி வழங்கிவரும் நடைமுறை வாழ்வின் எதாாத்தத்தை ஆணியடித்துச் சொல்லும் இந்நாவல், அதிலிருந்து மீளவொரு மார்க்கமுண்டு எனும் நம்பிக்கை நோக்கிய சிந்தனைக்கு எள்ளளவும் இடந்தராமல் போயிருப்பது திடுக்கிடச் செய்கிறது.

இளந்தலைமுறையின்—படிப்பறிவும், செயல் திறனும், சிந்தனா திறனுமுள்ள படைப்பாளிகள், நிதர்சனமான பிரச்சினைகளைக் கையிலெடுத்து உணர்வுப் பூர்வமாய் வெளிப்படுத்த நேர்கையில் சாட்சியம் தருவதோடு கடமையை முடித்து விடுகின்றனர்.

காரியங்கள் குறித்த காரணங்களைத் தோண்டிப் பார்ப்பதும், பாதிப்பவர்களின் நியாயங்களை ஓர் கணம் எண்ணிப் பார்ப்பதும், இவற்றிற்கான நிவாரணங்களை தேடிக் காண்பதும்—தங்களதுபணியல்ல—அது தங்களுக்குத் தேவையும் அல்ல என்பதாக அவர்கள் தீர்மானித்துள்ளனரோ எனப்படுகிறது.

'சுடுமணல்' போன்ற எரியும் பிரச்சினைகளின் மீது கட்டப்படும் நாவல்களுக்கு, எதிர்காலம் குறித்த ஆரோக்கியமான எதிர் பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் உருவாக்க வேண்டிய கடமை உள்ளது. ஆனால் அந்தரத்தில் தொங்கும் ஆபத்தான சூழலில் நாவல் முடிகிறது.

வாசகனை பரிதவிக்கச் செய்யும் நிலையில் முடிவுறும் படைப்புகள், தொடர்ந்து பேசப்படுவதன் மூலம் வெற்றி பெறக்கூடும். ஆனால், மனித மன இயல்புகளை, ஓர் அச்சத்தின் பயங்கரத்துக்குள்ளேயே புதைய வைத்துவிடும் என்பதை சுப்ரபாரதி மணியன் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

**பொன் விஜயன்**

# மணலில் இறங்கும் முன்...

□

சுப்ரபாரதிமணியன் கைதேர்ந்த கதைக்காரர்; பத்திரிகை ஆசிரியர்; விமர்சகரும் கூட. தெலுங்கு நாட்டில் வாழ்ந்துகொண்டு தமிழில் 'கனவு' காண்கிறார். :பிழைப்பதற்காகத் தமிழ்நாட்டை விட்டு விட்டுப் பிறமாநிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களின் பிரச்சனைகளை இவர் தம் கதைகளில் வெகு நேர்த்தியாகவும் எதார்த்தமாகவும் சொல்லிக் கொண்டு வருகிறார். சமீபத்தில் சிறு கதைக்காகக் 'கதா விருதி'னைப் பெற்றுள்ளார்.

'சுடுமணல்' இவரது புதிய நாவல். தமிழன் இன்று தமிழனாகத் தமிழகத்திலும் சரி பிறமாநிலங்களிலும் சரி வாழ முடியாமல் வதைபடுவதை எதார்த்தமாக சித்தரித்திருக்கிறார். ஒட்டிக் கொள்ளவும் முடியாத வெட்டிக் கொள்ளவும் முடியாத வேதனையான வாழ்க்கை. தமிழன் தனது சொந்தநாட்டிலேயே அகதியாகிப் போன அவலம், மொழிஇனம் போன்ற காரணங்களால் எழும் கலவரங்களுக்கிடையில் சிக்கித் திணறி கண்பிதுங்கும் கோரம்; பிழைக்கவந்தவனென பிறரும் பிழைக்கப் போனவன் என்று தமிழகமும் ஒதுக்கும் - ஒடுக்கும் கொடூரம்; தமிழன் தன்னைத் தமிழன் என்று சொல்லிக் கொள்ள முடியாத-தலை தூக்க முடியாத அவமானம்; இன்றைய தினத்தில் தமிழகத்தில் அல்லாத தமிழர்கள் படும்பாட்டைச் சுடச்சுடத் தருகிறார். ஒரு காலத்தில் தமிழர்கள் திரைகடல் ஓடி

யும் திரவியம் தேடினர். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று மனம் திறந்து பேசினர். உழைத்துப் பிழைக்க ஊர்விட்டு ஊர்போயினர். வானத்தில் பறந்து திரிஞ்சா ஆயிரம் கூரைகளில் சோறு என்று எண்ணினர். அதற்காகத் தேயிலைத் தோட்டங்கள், காப்பித் தோட்டங்கள், கரும்புத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள், சுரங்கங்கள், அணைக்கட்டு கள், தொழிற்சாலைகள் என உலகின் சகல பாகங் களிலும் வியாபித்தனர். காட்டை நாடாகவும் கல்லைப் பொன்னாகவும் மண்ணைப் பொருளாக வும் மாற்றினர். ஆனால் அவர்களின் வாழ்வு மட்டும் இன்று கேள்வி குறியாயிற்று. 'விம்மிவிம்மி விம்மிவிம்மி அழுங்குரல் கேட்டிருப்பாய் காற்றே' என்ற பாரதியின் வார்த்தைகள் சுப்ரபாரதி மணி யனிடம் கதையாகி உள்ளது.

மொழி, இன, மத வெறி இன்று அக்னி காற் றாகச் சுழன்றடிக்கும் போது அதில் அரசியல்வாதி கள் பலர் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்பாவி மக்கள் அஸ்திவாரங்கள் இழந்து அஸ்தியாகின்றனர். அச்சாம்பாலைப் பூசிக் கொண்டு சாமியாடுவதும் சாமியாராகுவதும் நம் தேசியக் கோவிலில் திருவிழாக்கள் ஆகிவருவது தொடர்கிறது. இது தடுத்து நிறுத்தப்படாவிட்டால் இனி தமிழர்கள் மட்டுமின்றி இந்தியர்கள் அனை வருக்குமே விமோசனம் இல்லாமல் போய்விடும். அதோடு இந்தியாவும் சுதந்திரமும் அர்த்தம் இழந்து நிற்கும்.

—**காவ்யா**

# (1)

கேஸ் ஸ்டவ்கள் வெடித்துச் சிதறி மரணம் விளைவிப்பது பெண்களை மட்டுமேதானா, வேலையில்லாத இளைஞர்களின் தற்கொலைக்குமான உபாயமாகி விடவில்லையே என்றிருந்தது மகேந்திரனுக்கு தீக்குச்சியைக் கொளுத்தினான். ஸ்டவ் நாக்குகளைத் துருத்திக் கொண்டு எரிந்தது இளம் சிவப்புநாக்குகள்.

இந்த இளம் சிவப்பு நாக்குகளுக்குள் அகப்பட்டுக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். உடலைக் கரியாக்கி இம்சைகளுக்கெல்லாம் சவால் விடலாம். இனி என்னை நீங்கள் எதுவும் செய்ய முடியாது என்று சிரித்து வைக்கலாம். ஆனால் அதற்கான தைரியம் தனக்கு இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டான்.

லட்சுமி இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாள், அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்றால் அவன்தான் சமையல்வேலை செய்யவேண்டியிருக்கும். ஒரு வகையில் பழகிப்போய்விட்டது. வேலையில்லாதவனுக்கு இதைவிட பெரிதாய் என்ன இருக்கிறது என்று அம்மா கேட்டதில்லை. அவள் மனதில் இப்படியொரு எண்ணம் பதிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவன் சமைப்பதை அவள் ஆட்சேபித்திருப்பாள். அம்மாவிற்கு நோய் என்று வந்தபோது அவன் சமையலறைக் காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். பிறகு நீடித்து விட்டது.

பல வருஷங்கள் இந்த நிலைமை அவனுக்கு வேதனையையேத் தந்தது. ஓடிப்போய் அம்மாவை எழுப்பலாமா. உச்சமாய் காலால் எட்டி உதைத்து உன் வேலையை நீ

பார் என்று சொல்லலாமா. ஊர் கூடிவிடும். துரத்தப்பட லாம். இனியொரு அடிமை வாழ்க்கைக்கு பிறகு தயாராக வேண்டியிருக்கும். அதற்கு வீட்டிற்குள் அடைபட்டு இப்படி இருப்பதே ஆறுதலானது.

மாடிவீட்டுப் பெண்ணின் அரற்றல் ஓயாது கத்திக் கொண்டிருக்கும் பறவையின் கூக்குரல் போல் கேட்டுக் கொண்டே இருந்தது. அவளின் பெண்களை தண்ணீர் பிடிக்க எழுப்புகிற சப்தம். இனி அவளின் குரல் இரவு வரை இப்படி ஏதோ வொன்றிற்கானதாக ஒலித்துக் கொண்டே இருக்கும். எதிர்த்த, பக்கத்துவீட்டுக் குரல்கள்போல. ஆனால் எல்லாக் குரல்களிலுமே எரிச்சல் மிகுந்திருப்பதாய் பட்டது.

சமையலறையில் இருக்கிறவரை நாலு சுவர்களையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், கல் சுவர்கள் நகரத்து மனிதனின் இதயத்தை போன்ற திடம்தான். கொலைக் குரல் பக்கத்தில் கேட்டாலும் சாவகாசமாக இருக்கச் சொல் லும் சுவர்கள். சமையல் அறையில் காற்று வர என்று ஜன்னல் எதுவுமேயில்லை. பக்கத்து பாத்ரூமிலிருந்து ஒரு வகையான நாற்றம் வந்து கொண்டிருந்தது. அழுக்கான பல பெண்களை ஓரிடத்தில் உட்கார வைத்தமாதிரி வாசம். முகர முகர சுவர்களைப் பொடியாக்கி காற்று வர வழி செய்ய வேண்டும் போலிருந்தது.

பால்காரியின் குரல் ஒவ்வொரு வீட்டு வாசல் கதவு களுக்கு முன்னும் ஒலித்துக் கொண்டு தேய்ந்தது. ஒரே வகையான அழைப்பு. சலிக்காத அழைப்பு. கதவு திறக்கப் படாத போதும் அந்த அழைப்பு இன்னுமொருமுறை எனக் கிளம்பும் மீண்டும் அதே அழைப்புகள். அந்த அழைப்பு களிலேயே அவள் உயிர் வாழ்கிறாள் என்று நினைத்திருக் கிறான் மகேந்திரன்.

புருஷன் செத்துப் போன பெண்கள் எல்லாம் இட்லி சுட்டு விற்கிறவர்களாக சினிமாக்கள் சொன்னபோது, நிஜத்

தில் அவர்கள் பால்பாக்கெட் போட்டு ஜீவிக்கிறார்கள் என நினைப்பதுண்டு. சீதம்மாவிற்கு இரண்டு புருஷன்கள். இரண்டு பேரும் செத்துப் போய்விட்டார்கள். சீதம்மா நோய் வாய்ப்பட்டாலோ, வரமுடியாவிட்டாலோ பால் பாக்கெட் கொண்டு வரும் சாந்தலட்சுமி கூட விதவைதான். சீதம்மா அடிபட்ட வாத்து நொண்டிக்கொண்டு கால்களை விரித்து நடப்பதுபோல நடப்பாள். பேப்பர்போடுகிற வேலையில்லாத இளைஞர்களை அவனும் பார்த்திருக்கிறான். பால் பாக்கெட் போடும் வேலையில்லாத இளைஞர்களும் இருப்பார்கள். நொண்டி வாத்துக் கிழவிகளை விட அவர்கள் இன்னும் முன்னதாகவே அழைப்புக் குரல்களுடன் காலை நேரத்து பால் பாக்கெட்டுகளைக் கொண்டுவரக் கூடும். தானும் அப்படி ஒரு இளைஞனாகி இருந்தால் இப்படி சமையல் கட்டுக்குள் அடைந்து கிடக்க வேண்டியதில்லை என்றிருந்தது.

கலவையான ஒலிகள் தொடர்ந்து கொண்டிருந்தன. இயந்திர இரைச்சல் விலங்குகளின் உறுமல் போல் கேட்கத் தொடங்கி விட்டது. பாத்திரங்களை நகர்த்தும் சப்தம் அலைகளாய் எங்கிருந்தோ பரவிக் கொண்டிருப்பதாய் பட்டது. பாத்ரூம் கதவைத் திறந்தான். குழாயில் நீர் சொட்ட ஆரம்பித்தது.

பக்கத்து வீட்டு சமையலறை ஜன்னல் தெரிந்தது. இன்னொரு திசையில் லெட்ரின். இதைமீறி வானம் தெரியாமல் அடைபட்ட மேற்சுவர்கள். சமையலறை ஜன்னலை ஊடுருவிப் பார்த்தான். ஒரே டப்பாவை மேலும். கீழுமாய், தொடர்ச்சியாய் அடுக்கி வைக்கப்பட்டிருப்பது போல பல டப்பாக்கள். இவை தவிர எந்த மனித முகமும் அங்கு தென்பட்டதில்லை. நீட்சியான சமையலறையின் ஒரு பகுதியாக அது இருக்க வேண்டும். ஒரு மூலைப் பகுதியாக இருக்கவேண்டும். அவன் அம்மா ஒரு இளம் தம்பதி அந்த வீட்டிற்கு குடிவந்ததாக ஆறு மாதம் முன் சொன்னாள். ஆனால் யாரும் இதுவரை அறிமுகமான

தில்லை. ஒரு இளம் பெண்ணின் முகத்தை அந்த ஜன்னல் வழியே அவன் எதிர்பார்த்து தினமும் பார்ப்பான். அந்த முகம் இதுவோ, அதுவோ என்று கற்பனைத்ததும் பார்த்ததுண்டு. ஆனால் எதுவும் தென்பட்டதில்லை என்பது அவனுக்கு வருத்தமே தந்திருக்கிறது.

ஜன்னலில் பெண் முகம் தெரிகிற அன்றைக்கு அவனுக்கு வேலைக்கு ஆர்டர் வரும் என்று நினைந்திருந்தான். அப்படி நினைப்பது அவனுக்குச் சந்தோஷத்தைத் தந்திருக்கிறது எப்போதும். இதை யாரிடமாவது சொன்னால் சிரிப்பார்கள். ஆனால் அவன் சந்தோஷமான எதிர்பார்ப்புடன்தான் தினமும் அந்த ஜன்னலைப் பார்ப்பதுண்டு. அவர்கள் வீட்டு பாத்ரூம் சுவர் அப்பெண்ணின் சமையலறையின் வெளிச்சுவரின் ஒரு பகுதி. லெட்ரின் ரூம் பக்கத்து இரு வீட்டு சுவர்களால் ஆனது. முன்வாசல் பக்கம் கூட பக்கத்து வீட்டுச் சுவர்தான். இப்படி இதுதான் வீடு என்றில்லாமல் பக்கத்து வீடுகளின் சுவர்களும், வேயப்பட்ட மேல்சுவருமாக அந்த வீடு அமைந்திருப்பது அவனுக்கு ஆச்சர்யத்தையேத் தந்தது.

சுவர்களைப் போல் ஒருவரை ஒருவர் போர்த்திக் கொள்ள மனிதர்கள் இல்லாமல் போய்விட்டனர் என்றிருந்தது. போர்த்திக் கொள்ளவென்று அம்மாவும், அப்பாவும் விரித்திருக்கும் வலைகள். நடைபாதைகள் முழுக்க வலைகள். வலைகளில் நடப்பது மிருதுவாகத்தான் சில சமயம். ஆனால் வலை என்று தெரிந்தே நடக்க வேண்டியிருக்கிற தினப்படிகள். நினைக்க அவனுக்கு அலுப்பாகவே இருந்தது.

அவன் அப்பா எழுந்திருக்கிறார் என நினைத்தான். சிறு பெட்டிக் கடையைத் திறக்கிற ஆயத்தம் போல் இருக்கும் அவர் எழுந்திருப்பது. அவர் அவனைப்பார்த்ததும் தினமும் கேட்கும் கேள்வி ''சமையல் வேலையெல்லாம் முடிஞ்சுதா'' என்பதுதான். இன்றைக்கும் அதைத்தான் கேட்பார் என நினைத்தான்.

# (2)

தாறுமாறான வாகன நடமாட்டத்தை மீறி வீதியின் அடுத்த முனைக்கு எப்படி வந்தோம் என்று ஆச்சரியப் படுவது போல் வாகனங்களைப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தான் மகேந்திரன். முதல்உலா கிளம்பியாயிற்று. மூன்று மணி நேரங்கள் முதல்உலாவிற்கென்று. எங்காவது நின்று கொண்டும், நடந்தபடியும் பொழுதைக் கழிப்பான்.

ஜீப்லி பஸ் ஸ்டேண்ட் பெஞ்சுகளில் ஒன்று அவனுக் கானது என்பது போல் காத்திருக்கும். காலை நேரத்து அவசரத்தில் எல்லோருமிருப்பார்கள். அவர்களையெல்லாம் பார்த்து சிரிப்பது போல் எவ்வித பரபரப்புமின்றி அவன் உட்கார்ந்திருப்பான். அவசரத்திலும் பெண்கள் அழகாக இருப்பது அவனுக்கு எப்போதும் ஆச்சர்யம் தரும். பரபரப் பில் அவர்கள் முகம் அடையும் ஒருவித இளஞ்சிவப்பு எப் போதைக்குமாக அவர்கள் முகத்தில் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைப்பதுண்டு.

மகேந்திரனுக்கு பெஞ்சொன்றின் ஓரம் கிடைத்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் பரபரத்துக் கிளம்பிப்போக முழுக்க அவனுக்கு என்றாகி விடும். பார்வையைச் சுழலவிட்டபடி பெண்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். நெருக்கிக் கொண்டும் ஏறும் இறங்கும் ஆண்கள். நிதானத்தை வேறு எங்கும் காண்பிக்க முடியா விட்டாலும் பஸ்ஸில் காண்பிக்க முயல்பவர்கள் போல் பெண்கள். இவை தினம் தினம் பார்ப்பது என்றாலும், வேறு வழியில்லாமல் பார்த்துக் கொண்டிருக்க நினைத் திருக்கிறான்.

பரீட்சை காலம். மாணவ, மாணவிகள் முகத்தில் வழக்கமாக இருக்கும் குதூகலம் மறைந்து போய் விட்டிருந்தது. எதையோ கூர்ந்து கவனிக்க விரும்புகிறவர்கள் போல நெற்றியில் சுருக்கங்கள். கைகளில் விரித்த நிலையில், திறந்த நிலையில் புத்தகங்கள். இவர்களின் குதூகலத்தை ரசித்தவனுக்கு இவர்களின் அமைதியைப் பார்க்கையில் வருத்தமாகத்தான் இருந்தது. இதையெல்லாம் கடந்துதான் தானும் வந்திருக்கிறோம் என்பது ஆச்சர்யமான விஷயமாக அவனுக்கு இருந்திருக்கிறது.

இன்றைக்கு அவள் நல்ல சிவப்புப் புடவையில் வந்திருக்கிறாள். இந்தப் பெண்ணை தினமும்தான் பார்க்கிறோம். பார்க்க முடியாத தினங்களில் அலைக்கழிப்பு. அவள் பார்வையை வீசிவிட்டு போவது கூட இல்லை. என்றாலும் அவளைப் பார்ப்பதில் ஒரு பரவசம். இயல்பாய்விரியும் முகம். துளிர்ப்பாய் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது என நினைத்தான்.

பப்ளிக் டெலிபோன் பூத் முன்பு கியூ இருந்தது. முடமான பெண்ஒருத்தி விசித்திரமான கியூவைப் பார்ப்பது போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். எண்களை சுழட்டித் தருவதோடு அவளின் வேலை முடிந்தது என்பது போல எங்கெங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். பேசுகிறவர்களின் பேச்சிலோ, பரபரப்பிலோ அவள் மனம் இல்லாமல் தாறுமாறாய் திரியும் ஜனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மசூதியிலிருந்து நாலைந்து புறாக்கள் தடதடத்து பறந்து சென்றன. வாகன பரபரப்பிற்கு மத்தியில் புறாக்களைப் பார்ப்பது சந்தோஷம் தந்தது. மசூதியைச் சுற்றி எப்போதும் சில புறாக்கள் பறந்து கொண்டிருக்கும். அவை ஏதோ வசியத்துள் சிக்கி இருப்பது போல மசூதியின் எல்லைக்குள் திரியும். பிறகு மசூதிக்குள்ளேயே இறங்கி விடும். மசூதியின் மேல் எல்லையை வரைந்து யாரோ

வலைபோட்ட மாதிரி அவற்றின் இயக்கம் அவனுக்கு தட்டுப்பட்டிருக்கிறது. பிள்ளையார் கோவிலை பிரிக்கிற கோல்டன் பேக்கரி. பேக்கரி இல்லாவிட்டால் இரண்டும் ஒரே கோவில் என்று பார்வையில் படும் என்பது ஒரு வகையில் சந்தோஷம் தந்தது. புறாவொன்று பிள்ளையார் கோவில் கோபுரத்தில் உட்கார்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு சட்டென யாரோ மிரட்டின மிரட்சியில் பறந்து மசூதியின் கூம்பு மேல் உட்கார்ந்தது. நகரம் கலவரப்படும்போதெல்லாம் இந்தப் புறாக்கள் காணாமல் போயிருக்கின்றன என நினைத்தான்.

பின்பாலத்தில் ரயிலொன்று தடதடவென்று ஓடி மறைந்தது. தினமும் அந்த நேரத்திற்கு ஓடி மறையும் இரயில் அது. இன்ஜினிலிருந்து கடைசிப்பெட்டி வரைக்கும் ஒரு நாளாவது பார்த்துவிட வேண்டும் என்று நினைத்ததுண்டு. ஆனால் முடிந்ததில்லை. இன்ஜினிலிருந்து இரண்டு மூன்று பெட்டிகளைப் பார்க்க முடிந்திருக்கிறது. அதன்பின் மனம் எங்கோ தவறி யாரையாவது பார்க்க நேரிட்டிருக்கிறது. இன்ஜினிலிருந்து கடைசிப் பெட்டி வரை பார்க்கிற நாள் கூட தன் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நாளாக இருக்கும் என்று பலதரம் அவன் நினைத்ததுண்டு.

விபூதி அணிந்திருந்தான் அந்த இளைஞன். அவனின் உடையும், அவனைச் சுற்றி நாலைந்து பேர் எப்போதும் இருப்பதும் அவனை மகேந்திரனுக்கு கவனத்தில் நிறுத்தியிருக்கிறது. இன்றைக்கு மற்றவர்களும் அவனைப் போலவே விபூதி அணிந்திருந்தார்கள் மெல்லிய சிரிப்பொலி அவர்களிடமிருந்து வந்தது. பிறகு பரிட்ச்சை ஞாபகம் வந்தவர்கள் போல் கைகளில் இருந்த புத்தகங்களைப் பார்த்துக் கொண்டார்கள். இப்படியொரு பரிட்ச்சை காலம் தனக்கு மீண்டும் வரப்போவதில்லை என்ற எண்ணம் அவனின் முகத்தை இறுக வைத்தது.

படபடவென்று கூட்டம் கலைந்து ஒரு வித அமைதி வந்து விட்டது. இந்த அமைதியை ரசிக்க வேண்டும். இதன் ஒழுங்கை மனதில் கொண்டு வந்து விடவேண்டும். பரபரப்

பும், அமைதியும், பரபரப்பும்... பரபரப்பு மட்டும் இல்லா விட்டால் இந்த அமைதியை ரசிக்க முடியாது என நினைத் தான்.

கண்களை மூடி நிதானித்துக் கொண்டு கண்களைத் திறந்தான். மாயம் போல் கூட்டம் மறுபடியும் நிறைந்து விட்டது. ஆச்சர்யமாகவே இருந்தது. அந்த சிறு கும்பல் இன்னும் அப்படியே இருந்தது. சிரிப்பும் பேச்சும் கேட்டுக் கொண்டே இருந்தது. இளம் சிவப்பு கலர் சட்டைகள் அணிந்த இருவர் அந்த கும்பல் பக்கம் வந்து நின்றனர். பார்வையைச் சுழலவிட்டபடியே இருந்தனர். கும்பல் சட்டென பரபரத்து விலகியது. ஒரு இளைஞன் மட்டும் தனித்திருந்தான். சிவப்பு சட்டைக்காரன் தலைக்கு மேல் உயர்த்தினத் துப்பாக்கி மகேந்திரனின் கண்ணில் பட்டது.

அவன் ஓடிக் கொண்டிருந்தான். ஜனங்கள் தீயினுள் அகப்பட்டுக் கொண்ட பறவைகளின் அரற்றலுடன் ஓடிக் கொண்டிருந்தார்கள். பஸ்கள் அங்கங்கே மலைத்தபடி நின்றிருந்தன. தூரம் கடக்காமல் ஒரே இடத்தில் நிற்பது போல இருந்தது. கனவில் ஓடுவது போல அவன் ஓடிக் கொண்டிருந்தான். எவ்வளவு தூரம் ஓடிவந்திருக்கிறோம் இன்னும் பாதுகாப்பான இடத்திற்கு வரவில்லை என்ற நினைப்பில் ஓடிக் கொண்டிருந்தான். கடைகளை மூடிக் கொண்டிருந்தார்கள். எலுமிச்சை பழக் கூடை கவிழ்ந்து சிதறி அவனின் கால்களில் தட்டுப்பட்டுப் போனது. கேயார் பள்ளி சந்து அவனுக்கு ஆறுதல் தந்தது. நடமாட்டம் அதிக மில்லை அங்கு. அவன் அப்படி தலைதெறிக்க எதற்காக ஓடு கிறான் என்பதை ஆச்சர்யமாய் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

அங்கே ஜனங்கள் நிதானத்துடன் இருப்பது போல் பட்டது. துப்பாக்கி துப்பாக்கி என்று ஏதோ சப்தமிட்டு அவர்களைப் பரபரப்பாக்க நினைத்தான். ஆனால் வாயிலி ருந்து சப்தம் எதுவும் வராது என்று தோன்றியது. ஜேம்ஸ்

பள்ளி வீதி அமைதியாக இருந்தது. செய்தி மெல்லப் பரவி அடைபடும் வீடுகளின் பரபரப்பு கதவுச்சத்தத்தை கேட்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

வீட்டுக் கதவை படபடவென்றுத் தட்டினான். மூச்சி ரைத்துக் கொண்டிருந்தது. அவனின் மூச்சு கதவில்பட்டு விசுவரூபித்துக் கொண்டிருந்தது. அவனின் அம்மா அப்போதுதான் துக்கத்திலிருந்து எழுந்தவள் போல் இருந் தாள். ''என்னாச்சு'' என்றாள். அவன் சாய்வு நாற்காலி யில் உட்கார்ந்து கொண்டு வாயை அகல திறந்து வைத்துக் கொண்டான். விபத்துக்குள்ளான வாகனம்போல் உடம்பைத் தளர்த்தினான். லட்சுமி காலடியில் உட்கார்ந்தாள். அவனின் மார்ப்புப்பகுதியில் கைகளை வைத்துத் தடவி னாள். அவனுக்கு ஆறுதலாக இருந்தது. இப்படி அவள் உட்கார்ந்து எவ்வளவு நாட்களாகின்றன. ஆறுதலாய் நிதானித்துப் பார்த்து நாட்களாகி விட்டன. அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான். ''என்னாச்சு...''

''இவ்வளவுதானா... தினமும் நடக்கறதுதானே...''

# (3)

மகேந்திரன் இப்படியொருக் காட்சியை தினமும் மனதில் நிகழ்த்திப் பார்த்திருக்கிறான். பலதரம் கையில் துப்பாக்கி. தெருவில் நடந்து போகிற யாரையாவது வீழ்த்த வேண்டும். ரத்த வெள்ளம். இதையெல்லாம் கண்டு கொள்ளாதது போல ஜனங்களின் நடமாட்டம். ஆனால் இன்றைக்கு மனக்காட்சி நிகழ்வானதை பார்த்தபோது இவ்வளவு அதிர்ச்சிக்குள்ளாகியிருக்க வேண்டாமே என்றும்

திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டான். அப்படி சொல்லிக் கொள்வது உறுத்தலாகத்தான் அவனுக் கிருந்தது.

லட்சுமி கண்களை மூடிக்கொண்டிருந்தாள். தூக்கமா, தூக்கமற்ற விழிப்பின் இடைநிலையா என்பது போல் கிடந்தாள். அவள் கூட இதை சாதாரணமாக எடுத்துக் கொண்டது ஒருவகை அதிர்ச்சியாய் மனதில் உறைந் திருந்தது. ''அம்மா ஏன் அப்படிச் சொன்னாள்?'' தினம் தினம் நடப்பதுதான். எங்கெங்கோ நடப்பதாய், நகரத்தின் வெவ்வேறு தெருக்களில் நிகழ்வதாய் கேள்விப்பட்டது. செய்திகளாய் வந்து சேர்வது. பக்கத்துத் தெரு என்ற அதிர்ச்சி கூட அம்மாவிற்கு இல்லாதது பயமளித்தது.

நகரமே இப்படித்தான் பிணங்களின் மத்தியில் சாவகாசமாய் இயங்கிக் கொண்டிருக்கிறது. அம்மா தானும் ஒரு பிணமாக தன்னை நினைத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டாளோ என்று அவனும் பல சமயங்களில் நினைத்த துண்டு. அவனின் சிறு தவறுகளுக்கெல்லாம் பதறுவாள் முன்பு. இப்போது சாதாரணமாக எடுத்துக் கொள்ள ஆரம் பித்து விட்டாள். அம்மாவை எழுப்பி ஏன் இப்படியாகி விட்டாய் என்று கேட்க நினைத்தான். தலையைக் குலுக்கிக் கொண்டான். அப்படியொரு காட்சியை தலைக் குள்ளிலிருந்து தூக்கி எறிய ஆசைப்படுவதுபோல தலை குலுங்கி நின்றது. செத்துப் போனவன் தலையில் ஓட்டை விழுந்து ரத்தம் சிதறியது. அப்படியொரு சாவை அவனும் கூட பல சமயங்களில் நினைத்துப் பார்த்ததுண்டு. சினிமாவின் பிம்பங்கள் மனதில் அக்காட்சிகளை பதித் திருந்தன. வாய்க்குள் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொண்டு செத்துப் போவது இன்னொரு வகை. இரண்டா வது தனக்கு மிகவும் பிடித்திருப்பதாய் சொல்லிக் கொண் டான்.

கதவை படபடவென்று யாரோ தட்டினார்கள். கதவின் அதிர்வை உடம்பு முழுக்க வாங்கிக் கொண்டவன் போல்

அவன் உடம்பு உதற ஆரம்பித்தது. தன்னைப் போலவே மூச்சிரைக்க ஓடிவந்தவர்களாக இருக்குமோ, அல்லது அக்காட்சியின் சாட்சியாகத் தான்இருந்ததை கண்டு பிடித்து அவனைத் தேடி வந்திருப்பார்களோ. எழுந்து கதவைத் திறக்கவில்லை. படபடவென்று சப்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. மகேந்திரன் கண்களை இறுக மூடிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்து கிடந்தான்.

லட்சுமி கதவைத் திறந்தாள்: ''நீங்கதானா...'' பேக்கரி தாமோதான் நின்றிருந்தான். ''ஏதாச்சும் வேலை இருக்கா''. தாமோதரன் உள்ளே வந்தான்.மகேந்திரனின் அருகில் உட்கார்ந்து கொண்டான். ''தம்பிக்கு என்னாச்சு'' ''யாரையோ சுட்டுட்டாங்களாமா. பாத்துட்டு வந்து செகச்சு உக்காந்திருக்கான்''. மகேந்திரன் கண்களைத் திறந்தான்.

தாமோதரனின் முகத்து மயிர்கள் அடர்ந்திருந்தது. கறுப்பு நிறமான பொருள் எதையோ ஒட்ட வைத்தது போல இருட்டியிருந்தது. வயதிற்குரிய முகச்சுருக்கங்கள். கண்கள் உள்ளிடுங்கி இருந்தன. தலை மயிர் பரபரத்து ஒன்றிலி ருந்து மற்றவை விலகி நிற்பது போல இருந்தது. முள்ளம் பன்றியின் மேல்பரப்பு போல் தலை இருந்தது.

''என்ன அதெ நீ பாத்தியா...பொணத்தெ எடுத்துட்டுப் போயிட்டாங்க. இப்ப எல்லாம் நார்மலாயிருச்சு. பத்து நிமிஷம் பஸ் ஓடலே. அப்புறம் மாமூல். செத்துப் போனவன் ஸ்டூடண்ட் லீடராமா. காலேஜ் ஸ்டூடண்ட் மத்தியிலெ சங்கம் கட்டறதிலெ நான் பெரிசா நீ பெரிசான்னு பிரச்னை. சுட்டுட்டான். இப்போ நார்மல் ஆகிப்போச்சு...'' சீக்கிரம் சகஜ நிலைமையாகிவிட்டது என்பதை நினைக்கிறபோதே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.பட்டப்பகலில் நகரத்தின் மத்தியில் நடந்திருக்கிறது. எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு விட்டு நகரம் ஓடிக் கொண்டேயிருக்கிறது இயல்பாய். செத்துப் போனவனுக்கான அழுகை என்று எந்த மூலையிலிருந்து

வந்திருக்கும். அவனின் அரற்றல் யாருக்கும் கேட்டிருக்காதா. செத்துப் போவதென்பது இதுதானா. நாளையச் செய்தித் தாள்களில் சிறு செய்தி அவ்வளவுதான். தான் செத்துப் போனால் இதெல்லாம் கூட இருக்காது. வலிந்து சாவை வரவழைத்துக்கொண்டால் செய்தியாவோம். இல்லையெனில் சாதாரணப் பிணம். அவ்வளவுதான். தாமோதரனின் முகம்இருட்டும் வயசுவரைக்கும் இருந்தாலும் இதேதானே என்பது பற்றின எண்ணங்கள் மனதில் வந்தது மகேந்திரனுக்கு.

''வீட்டுக்கு ஒண்ணும் வாங்க வேண்டாமா. ரேஷன்லே பாமாயில் நாளைக்கு வந்தாலும் வரும்னாங்க.''

''பாம் ஆயில் வந்தா வாங்கணும்.''

தாமோதரன் வீட்டிற்கு ஏதாவது சாமன்கள் வாங்கிக் கொண்டு வந்து தருவான், பணமோ, சாப்பாடோ எது கொடுத்தாலும் வாங்கிக்கொள்வான். கொடுக்கிற எட்டணா, ஒரு ரூபாயில் அந்த தினத்தைக் கடத்தி விடுவான். இப்படி பல வீடுகளில் போய் பேச்சுக் கொடுப்பதும் ஏதாவது வேலை செய்வதுமாக அவனின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

''இப்பிடியேத்தா சக்கரம் ஓடுது'' என்று சொல்லிக் கொள்வான் தாமோதரன். பேக்கரியில் ரொம்ப நாள் வேலை செய்து வந்தான். அப்புறம் ஹோட்டல்களில். உடம்பின் வலு கெட்டுப்போன பின்பு சிறுசிறு வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான். பேக்கரியில் வேலை செய்த போது குடித்துவிட்டு எங்காவது கிடப்பான்... அவனைத் தூக்கிக் கொண்டு போய் ஜாக்கிரதையாகப் படுக்க வைப்பது, போதையும், மயக்கமும் தெளிகிறவரை அவனிடம் யாராவது காவல் இருப்பது இதெல்லாம் பேக்கரி ஆட்களுக்கு தொந்தரவு ஆகிவிட்டது. அலுப்பின் உச்சமாய் வெளியேற்றி விட்டார்கள். இப்போது கூட கொஞ்சம் காசு கைகளில் அதிகமாகத் தென்பட ஆரம்பித்தால் எங்காவது

ரோட்டின் மூலைகளில்தான் கிடப்பான். ''என்னை சாவு கொண்டு போக மாட்டிங்குதே'' என்று உரக்கக் கத்தின வாறு மார்பில் அடித்துக் கொள்வான்.

மகேந்திரனும் தன் நிலையும் இதுதான் என்று தெரிந் திருந்தான். தாமோதரனுக்கு கை நீட்டக் கூச்சம் போய் விட்டது. இன்னும் கூச்சமும், தன்மானமும் உடம்பில் மொத்தமாய் ஒட்டிக் கொண்டிருப்பதாய் மகேந்திரன் நினைப்பதுண்டு. ஒருவகையில் தாமோதரனாகிவிடுதல் சுலபமும், தப்பித்தலுமாகும் என்பதை அவன் உணர்ந்து மிருந்தான். அப்படி ஆவது தற்கொலைக்குச் சமமானது என்றும் தெரிந்திருந்தாள்.

''நீ கண்ணாலெ பாத்தியா. அப்பிடியொரு சாவைப் பாக்கறது கூட பெரிய பாக்யம்தா. அதைவிட அப்பிடி செத்துப் போறது எவ்வளவு பெரிய பாக்யம். அப்பிடி செத்துப் போறதுக்குன்னு எத்தனையோ பேர் காத்திட்டிருக் காங்க. நானுந்தா'' சிரிக்க ஆரம்பித்தான் தாமோதரன். பாசிபிடித்த தரைபோல் அழுக்காய் இருந்தது அவனின் பற்கள். பற்கள் விழுந்து போன சீப்பு போல அவனின் இடைவெளிகளாளான பற்கள். ஒருவகையான நாற்றம் அவன் வாயிலிருந்து வந்தது. தாமோதரனையேப் பார்த்துக் கொண்டிருந்தான். இப்படியொரு அருவருப்பு தோற்றம் கொண்டவனுடன் பேசுவது கேவலம் என்பது போல திடீரென முறைத்துப்பார்த்தான். இவன் விரும்பும் சாவை நாமே இவனுக்கு வழங்கினால் சந்தோஷப் படுவானா கழுத்தை தன் இளம் பலத்தால் அமுக்கி மூச்சைத் திணறடித் தால் போதும். அவன் விரும்புவது கிடைத்து விடும். அவன் அதை விரும்புவதாகச் சொல்வது வெறும் வாய் வார்த்தை கள் மட்டும்தானோ. வாழ விரும்பவில்லையென்றால் இந்த மனிதர்களுக்கு மத்தியில் எதற்கு உலவிக் கொண்டிருக்க வேண்டும். வெறும் காற்றை உள்வாங்கிக் கொண்டு எங் காவது மூலையில் கிடக்கலாம். அடங்கிப் போகலாம். ரேஷனுக்கும், பால் கார்டு வாங்கி வரவும் போய் எட்டணாக்

களை சம்பாதிப்பதில் இவனின் நியாயம் இருப்பது பொய்யானது. இவன் வாழத்தான் விரும்புகிறான் தன்னைப் போலவே. அவன் முகத்தை கூர்ந்து பார்த்துக் கொண்டே நினைத்துக் கொண்டிருந்தான் மகேந்திரன்.

தாமோதரன் குழந்தைகளுடன் மிகவும் பிரியமாக இருப்பான். அவர்களுக்கு சிறு மேஜிக் செய்து காட்டுவான். உள்ளங்கையில் இருக்கும் காசு சட்டென மறைந்து விடும். ஸ்வெட்டருள் கைகள்புதைந்து விடும். சீப்புகளை ஜீரணித்து விடுவான். குழந்தைகள் அவன் செய்வதை கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும். அவை கைகொட்டிச் சிரிப்பதை பார்த்தபடியே அதில் அமிழ்ந்து போவான். காசுகளை அவன் மறைத்து வைத்துவிடுவதுதான் குழந்தைகளுக்கு எப்போதும் ஆச்சர்யம் தந்திருக்கிறது.

பேக்கரியில் இருக்கிறவரை அறை என்ற பெயரில் ஒரு இடம் தாமோதரனுக்கு இருந்து கொண்டே இருந்தது. அந்த அறையில் படுக்கை என்ற பெயரில் சில வஸ்துகள் இருக்கும். இரு பெண்களைக் கொண்ட போட்டோ ஸ்டேண்ட் ஒன்று. அந்த இரு பெண்களும் ஒருவரே என்பான் தாமோதரன். தன் மனைவி இருபத்தைந்து வயதிலும், சாவதற்கு ஆறு மாதங்கள் முன்பும் என இருபத்தைந்து வயது போட்டோ அழகாக இருக்கும். வர்ணமும் இடப் பட்டிருக்கும். அப்போது வர்ணப்படங்கள் இருந்திருக்குமா என்றக் கேள்வியை மகேந்திரன் பலமுறை தனக்குள் கேட்டுத் கொண்டிருக்கிறான். பின்னால் வர்ணங்கள் இடப் பட்டிருக்கலாம் என நினைத்ததுண்டு.

ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர் தாமோதரன். அவரின் பேச்சில் முன்பெல்லாம் துல்லியத்தன்மையும் இயல்பும் இருக்கும். இப்போது குறைய ஆரம்பித்துவிட்டது. வாயிலிருந்து வரும் ஆங்கில வார்த்தைகள் தடைசெய்யப் பட்டவை போன்று அரை குறையாக நின்றுவிடும்.

இளம்பெண் படம் வேறு யாரோ ஒரு பெண்ணுடைய தாக இருக்கலாம் என மகேந்திரன் நினைத்ததுண்.

மனைவி இறந்தபின் இப்படியொரு பெண்ணுடன் தொடர்பு இருந்திருக்கலாம். தாமோதரனின் காசு கரைந்து போக அவள் விலகிப் போயிருப்பாளா. அல்லது அவர் சொல்வது நிஜமாகக் கூட இருக்கலாம். அவன் அறைக்கு மகேந்திரன் போன போதெல்லாம் சிகரெட் குடித்திருக்கிறான். அவன் அறைக்குப் போவதன் அர்த்தமே சிகரெட் குடிக்கத்தான் என்பது போல் அது நடந்திருக்கிறது. அந்த அறையி லிருந்து தாமோதரன் வெளியேற்றப்பட்ட பின்பு தாமோத ரனுக் கென்று அறை எதுமில்லாமல் போய் விட்டது. ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவரின் வாழ்க்கையா இப்படிப் போய்விட்டது. என்று சில சமயம் நினைத்துப் பார்க்கையில் ஆச்சர்யமாக இருக்கும் மகேந்திரனுக்கு.

''பொணத்தெ எடுத்துட்டுப் போயிட்டாங்களா.''

''போயிட்டாங்க''

''ரொம்ப ரத்தமா கெடந்துச்சு''

''ரத்தந்தா''

# (4)

விறுவிறுவெனக் கிளம்பினான். இரண்டு மணி நேரத் திற்கு முன் எவ்வளவு பரபரப்பு அடைய வைத்தது அச் சம் பவம். இப்போது நிதானம். மூடப்பட்டிருந்த கடைகள் திறக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கடைகளுக்கும் முன்பு சில மனிதர்களை கட்டளை போட்டு நிறுத்தி வைத்த மாதிரி

மனிதர்கள் இருந்தார்கள். வானத்திலிருந்து பூக்களைக் கொட்டிவிட்ட மாதிரி மனிதர்கள் அடர்த்தியாய். இவர்களுக்கு மரண பயம் என்பதே இல்லையா. கபாலம் சிதற செத்துக் கிடந்தவனின் அவலம் தங்களுக்குமானது என்று யாரும் நினைக்கவில்லையா. அவன் கபாலம் சிதற என்ன காரணம் என்று சிந்திக்க நேரமில்லையா, அவனைப்போல் யாருக்கும் இதைப் பார்க்க மறுபடியும் வர வாய்ப்பு என்று எதுவும் அமையாமல் போய்விட்டிருக்கும் என நினைத்தான்.

ஜுப்லி பஸ் ஸ்டேண்ட் எப்போதும் போல் இருந்தது. நிராகரிக்கப்பட்ட இடம் என்பது போல ஒரு பகுதி வெற்றிடமாக இருந்தது. மகேந்திரனுக்குப் படபடப்பாக இருந்தது. அருகில் சென்று எட்டிப்பார்த்தான் இரத்தக்கறைகள். சிதறல்கள். ஒரு ஆள் அல்லது பிணம் விழுந்து கிடந்ததன் அடையாளமாய் சாக்பீஸ் வரை வெளிக் கோடுகள். அவன் பிணமான கணத்தின் உடம்பு விரவிக் கிடந்த பரப்பைக் காட்டிக் கொண்டிருந்தது. அந்த வெளிக் கோடுகளுக்குள் தன்னைப் பொருத்திப் பார்த்தான். சரியாகத் தான் அடைபடும் இந்தக் கோடுகளுக்குள் இன்று அடைபட்டிருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான். அதை சந்தோஷம் என்று மனது சட்டென தீர்மானித்துக் கொண்டது குறித்து ஒரு நிமிஷம் வருத்தம் ஏற்பட்டது.

மறுபடியும் ஓடலாமா. ஓடஓட விபரீதம் ஏதோ நடந்தது போல வீறிடலாமா. ஒரே ஓட்டம். எல்லோரின் கவனமும் அவன் மேல் திரும்ப வேண்டும். செய்யலாம். இன்னொரு கொலை நிகழ்ந்தமாதிரி வதந்தி பரப்பலாமா. ஓட ஆரம்பித்தான். ஏதாவது கத்த வேண்டும் என்று தோன்றியது. வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. ஓட்டத்தின் வேகம் சீரானது. மெல்ல நடக்க ஆரம்பித்தான் தன் செய்கை தெரிந்தவர்களுக்கு அதிர்ச்சியூட்டி இருக்கலாம். தெரிந்தவர் யார் இருப்பார்கள். சிலர் இருக்கக் கூடும். வெறுமனே தெரிந்தவர்கள் முகமும், விலாசமும் தெரியும். அவ்வளவு

தான். அதற்குத் தெரியாமலேயே போய் இருக்கலாம். ரயில்வே யூனியன் கட்டிடத்தின் பின்னால் இருந்த மரங்கள் நிழலைப் பரப்பி இருந்தது. நிழல் நிச்சயம் ஆசுவாசப்படுத்தும் என்று நினைத்தபடியே நின்றான்.

# (5)

நிழல் மட்டும் இல்லாவிட்டால் செக்ரட்டேரியட் வரைக்கும் நடப்பது வெகு சிரமமானதாக வெங்கட்டய்யாவிற்குஇருக்கும். மரங்கள் தொடர்ச்சியாக இருக்கும்தெற்குப் பக்கமே எப்போதும் அவர் நடப்பார், சொல்லி வைத்த மாதிரிபஸ்ஸ்டாப் முனையிலிருந்து செகரெட்டேரியட் வாசல் வரைக்கும் அங்கங்கே மரங்கள். ஒரு மரத்தின் நிழல் இன்னொன்றின் தொடர்ச்சிக்கானதாகஇருக்கும், தொடர்ச்சியாக நிழல் இல்லாமல் வெயில் பட்ட மண் ஒருவகையான வாசத்துடனும் இருப்பதாக வெங்கட்டய்யாவிற்குத் தோன்றும்.

ஆலமரங்கள், வேப்பமரங்கள் தரும் குளிர்ச்சி எப்போதைக்கும் மனதை நிறைத்திருக்கிறது. இங்கெல்லாம் அவற்றைப் பார்க்க முடிந்ததில்லை. பூக்களில் ஏதேதோ வர்ணங்களைப் பூசிவிட்டது போல மரங்கள். அவற்றின் நிழல் கூட மேல் பூச்சாகவே இருந்திருக்கிறது. இந்த நிழல் இல்லாவிட்டால் பெட்ரோல் காற்றில் ஆசுவாசப் படுத்திக் கொள்வது சிரமமாக இருக்கும். மரங்களை தலையில் கட்டிக் கொள்வது போன்ற வசதி இருந்தால் எவ்வளவு எரிச்சல் குறைந்திருக்கும் என நினைத்தார் வெங்கட்டையா. ஏன் இப்படி மூச்சிறைக்கிறது என்று அவர்

மீது அருவருப்பாகவும் இருந்தது. செக்ரக்ட்டேரியட் கேட்டை கையில் பிடித்ததும் இந்த மூச்சிரைப்பு நின்று விடும் என்ற எண்ணமும் மனசில் வந்தது.

கேட் பிரமாண்டமானதாக நின்றிருந்தது. நாலைந்து ஆட்களைத் தோளில் நிற்க வைத்தமாதிரி உயரம். அதன் திடம் வெங்கட்டய்யாவிற்கு அவர் அப்பாவை நினைவுக்குக் கொண்டு வரும். சிறுசிறு வடிவங்களை கம்பிகளில் செதுக்கி இருப்பார்கள். எங்கு கையை வைத்தாலும் ஏதாவதொரு வடிவம் தட்டுப்படும். கேட் அருகில் கூட்டமிருந்தது. தான் தான் லேட் என்று நினைத்திருந்தார். ஆனால் இவ்வளவு பேர் இருப்பது ஒரு வகையில் ஆறுதல் தந்தது. ஒரு வகையில் சந்தோஷமாகவும் உணர்ந்தார். தன் செக்‌ஷனுக் குரிய ஆட்கள் இருந்து விட்டால் இன்னும் நன்றாக இருக்கும் என நினைத்தார். ஆனால் எதற்கு இந்த நீண்ட கியூ. வருகையாளர்கள் நேரம் பிற்பகலில் தானே. கியூவில் நின்று கொண்டிருந்தவர்களைக் கவனித்தார். எல்லோரும் அலுவலக ஆட்கள்தான். அப்படியென்றால் தானும் கியூவில் தான் நிற்க வேண்டியிருக்கும். சட்டென உள்ளே சென்று விட முடியாது. கியூவில் நின்றார். தனக்கு முன்னால் நின்றிருந்தவர் 'பானைக்' குதப்பி பற்களைக் காட்டிக் கொண்டிருந்தார். சிவப்புக் கறை பிடித்தப் பற்கள். அலுவலகச் சுவர்கள் இப்படித்தான் இருக்கும், அரசாங்க அலுவலகச் சுவர்களென்றால் இப்படித்தான் இருக்கும் என்பது போல அவை இருக்கும். இதற்குள் அகப்பட்டுக் கொண்ட மிருகம் போலத்தான் தானும் என் நினைத்துண்டு அவர். கியூ நீண்டு கொண்டே இருந்தது. ஏதாவது விபரீத மாய் நடந்திருக்க வேண்டும். இல்லையெனில் விபரீதமாய் நடக்கப் போவதாய் செய்தி வந்திருக்க வேண்டும். ஏதாவது முக்கிய அரசு விருந்தாளியின் வருகையா. அப்படியானால் போஸ்டர்கள் அவற்றைக் காட்டி இருக்கும்.

''க்யா சாப், என்ன விசேசம் இன்றைக்கு...''

பானை, ரசித்து விழுங்கினார். வெங்கட்டய்யாவின் முகத்தை தீர்க்கமாய் மனதில் உள்வாங்கிக் கொள்வது போலப் பார்த்தார்.

''குண்டு வெடிக்கப் போகுதாமா அதுதா...''

''டெயிலி ஏதாச்சும் இப்பிடி போன் கால் இருந்திட்டே இருக்கே...''

''முந்தா நாள் ரயில்வே ஸ்டேஷன்லே வெடிச்சதே...'' கியூ மெல்ல நகர ஆரம்பித்திருந்தது. ரேஷன் கடைக்குச் சென்று ரொம்ப நாளாகிவிட்டது. மற்றபடி கியூ வேறு எங்கும் இல்லை. மற்றெல்லா இடங்களிலும் தள்ளியும், பலத்தை உபயோகித்தும் முன்னேறுவதுதான். ரேஷன் கடைக்கு தாமோதரன்தான் பெரும்பாலும் போவான். அவன் இல்லாவிட்டால் மகேந்திரன். மகேந்திரனால தான் ஆபீஸ் வருவதற்கு இவ்வளவு தாமதம். அவனுக்கு ஒரு வேலை கிடைத்திருந்தால் இவ்வளவு மோசமாகி இருக்காது. தன்னைத்தானே நிதானப்படுத்தி இருப்பான் என நினைத்தார். அவன் இன்று அம்மாவுடன் சண்டை. வாய் வார்த்தைகள் இருவரையும் சிரமப்படுத்தி யிருந்தன, என்றாலும் வாய் வார்த்தைகளின் உச்சத்தில் இருவரும் இருந்தது வெங்கட்டயாவிற்கு சங்கடம் தந்தது. மெல்லிசன அவரின் குரல் அங்கே அமுங்கிப்போய் விட்டது. நீண்ட நாள் தங்கி விட்ட விருந்தாளி போல லட்சுமி நினைக் கிறாள். மகேந்திரன் தன் மேல் வீண் பாரமெல்லாம் ஏற்றப்படுவதாய் நினைக்கிறான். ஒவ்வொருவரும் தங்களைத் தளர்த்திக் கொள்வதைத் தவிர வேறுவழி யில்லை. ஆனால் இறுக்கம் தொடர்வது அவருக்கு எப் போதும் பயம் தந்திருக்கிறது. மகேந்திரனை வெளியே எங்காவது அனுப்பிவிடலாமா? வேலை கிடைத்து வெளியில் போனால் அவனுக்கும் ஆறுதலாக இருக்கும். உன்இருப்பு எங்களை சங்கடப்படுத்துகிறது என்று வெளியில் தள்ளி

No. 89980

விடுவது கஷ்டம். ஆனால் லட்சுமி அவனை நிராகரிப்பது சங்கடமாகவே இருந்திருக்கிறது.

லட்சுமி ஏன் இப்படி ஆகிப்போனாள் என்ற வருத்தம் அவருள் தினமும் எழுந்து சங்கடப்படுத்தும். மகேந்திரனைச் சமைக்கச் சொல்லிவிட்டு அவள் படுத்துக் கொண்டிருப்பது, வேலையில்லாதவன் என்பதால் அவன் இதையெல்லாம் செய்ய வேண்டும், தாங்கிக் கொள்ள வேண்டும் என்று லட்சுமி ஏன் எதிர்பார்க்கிறாள். தான் செய்ததெல்லாம் போதும். அலுத்துவிட்டது என்பதின் உச்சமா. இந்த அலுப்பு தனக்கும் வந்து விட்டால் யாரையாரையோ சங்கடப்படுத்த வேண்டி இருக்கும். இயல்பாய் இருந்தே பல வருஷங்கள் ஆகிவிட்டன என்பது ஞாபகம் வந்தது.

'கேட்' முனையை இறுகப் பிடித்தபடி ஒவ்வொருவராய் உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்துப் புன்னகைத்தார். அவனின் முகம். இறுகியிருந்தது. இறுக்கத்தைத் தளர்த்திவிட்டால் எல்லோரும் தப்பித்து விடுவார்கள் என்பது போல இருந்தான். அடையாள அட்டையை சோதித்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்ததும் திக்கென்றது. பர்ஸ் இல்லாமல் கிளம்பிவிட்டதை பஸ்ஸிலேயே தெரிந்திருந்தார். வெறுமனே கியூவில் நிற்பதை விட்டு திரும்பிப் போய்விடலாம். எதற்கும் கொஞ்சநேரம். காத்திருக்கலாமே என்ற எண்ணமும் மனதில் வந்தது.

''ஐடெண்டி கார்டு ப்ளீஸ்...''

''இல்லே...''

''ஐடென்டி கார்டு இல்லாமெ எதுக்கு இங்க வர்ர''

''மறந்து போச்சு.''

''மறந்தா வரவேண்டியதில்லை போலாம்.''

''இல்லே... மறந்திருச்சு.''

''வீணா மத்தவங்க நேரத்தை வீணாக்காதே.,

''சாரி. மறந்திட்டன்''

''சரிதான் போய்யா...''

வெங்கிட்டய்யா நின்று கொண்டே இருந்தார்.

''ரெக்ருட்மண்ட் செக்ஷன்.போன்பண்ணிவிசாரியேன். வெங்கட்டய்யா பேரு. ஸ்டாப் நம்பர் 3298.''

''முடியாது. அதுக்கெல்லா அவகாசமில்லை. நெலமை ரொம்ப மோசம்.''

''ஒருதரம் போன் பண்ணுங்களே''

''கார்டு இல்லாமெ வந்து பிராணனை வாங்கறியே.'' வாட்ச்மேனின் வலதுகை வெங்கிட்டய்யாவின் சட்டையைப் பிடித்தது. தளர்ந்த கை பிடித்த இடத்து சட்டைச் சுருக் கத்தையேப் பார்த்துக் கொண்டிருந்தார். முகம் தொங்கிப் போய் விட்டது.

ஸ்கூட்டரொன்று பக்கத்தில் வந்து நின்றது. கந்தசாமி அவரின் சுருங்கினச் சட்டையையும், முகத்தையும் பார்த் தான்.

''என்னாச்சு வெங்கட்டய்யா''

''ஐடென்டிகார்டு கொண்டு வர்லே''

''நெலமை கொஞ்ச மோசந்தா. அதுதா ஐடென்டி கார்டு கேக்கறாங்க வாட்ச்மேன் குருவையா... போகச் சொல்லு. நம்ம பிரண்ட்தா.''

''செரி சாப்...''

''கந்தசாமி ரொம்ப நன்றி.''

''பரவாயில்லே. அப்புறம் நம்ம கூட பேசறப்போ உள்ளூர் பாஷையே பேசு. நம்ம பாஷை வேண்டா. நெலமை செரியில்ல அதுதா.''

கந்தசாமிக்கு மனதார சொன்ன நன்றி வார்த்தை முடிவதற்குள், அவன் சொன்னது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இங்கு வந்து முப்பது வருஷமாயிற்று. உள்ளூர்

பாஷையும் கலப்படமாகிவிட்டது. ஆனால் நம்ம ஊர்க்காரர் கள் என்று தெரிந்தால் கலபமாக தமிழ் பேசுவார். கந்தசாமி அப்படி சொன்னதில் வருத்தம் இருந்தாலும், அவர்கூட அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்திருக் கிறார் பலமுறை.

உள்பாதை நீண்டு கொண்டிருந்தது. புல்வெளிகளையும் மரங்களையும் தாண்டிப் போவது உன்னதமாகப்படும். இன்னைக்கு எதையும் கவனிக்க மனமின்றி நடந்து கொண்டிருந்தார். கந்தசாமியை செக்ரட்டேரியட்டின் ஒவ்வொரு செக்‌ஷன் அலுவலர்களுக்கும் நன்கு தெரியும். வட்டிக்குப் பணம் கொடுப்பான். வசூலிக்கவென்று எங்காவது அலைந்து கொண்டிருப்பான். எப்போது கேட்டாலும் தருவான். வெங்கிட்டய்யாவே பல முறை வாங்கியிருக்கிறார். பணத் தேவை என்றால் கந்தசாமிதான் மனதில் வருவான். இந்த வாட்ச்மேன் கூட அவனிடம் பணம் வாங்கியிருக்கக்கூடும். அந்த விசுவாசத்தில் கந்த சாமியின் வார்த்தையை வெகுவாக நம்பி அனுமதித்தான். இல்லையென்றால் வீட்டிற்குத் திரும்பிப் போக வேண்டி யிருக்கும். மகேந்திரன், லட்சுமி இறுக்கங்களுக்கு இடையே இன்னுமொரு இறுகியக் கல்லாக உட்காரவேண்டியிருக்கும். வீட்டை பத்திரமானதாகவும், சுதந்திரமானதாகவும், எண்ணும் உணர்வு இல்லாமல் போய்விட்டது. குறுக்கிக் கொண்டு படுக்க மட்டும் ஆகிப்போயிற்று வீட்டை அற்புதப் பொருளாக ஆக்க முடியாதா? பள்ளிக் குழந்தை பள்ளி முடிந்தவுடன் போகிற பரபரப்பு, ஆர்வம் வீட்டின் மேல் இனிமேல் வராதா? வீடு பாதுகாப்பாய் இல்லையென்றால் வேறு எங்கு போய் முடங்கிக் கொள்வது. அவருக்கு விடை எப்போதும் கிடைத்ததில்லை. இந்தக் கேள்வியை மற்றவர் களிடம் சொன்னால் சிரிப்பார்களா? இல்லை நாங்களும் உன்னைப் போலத்தான் என்பார்களா? இதையெல்லாம் கேட்டு பதிலைப் பெறுவதற்கும் ஆளில்லாமல் போய் விட்டதை தினம்தினம் உணர்வதாகப் பட்டது.

நான்காம் மாடியை அடைந்தார். சுற்றிலும் ரோடுகளும், வாகன இரைச்சலும் கண்ணில் பட்டன. ஜனங்களின் நெருக்கத்தை இவ்வளவு தூரம் வந்தபின்பும் உணர முடிந்தது. இவ்வளவு நெருக்கத்து மத்தியில் தன் அடையாள அட்டையைக் கேட்டு தன்னை யார் என்று கேட்டது சரியென்றே பட்டது. ஒவ்வொருவரும் ஏதேதோ அடையாளங்களை சுமந்தபடிதான் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என நினைத்தார்.

## (6)

மல்லியைப் பார்த்தால் ஆறுதலாக இருக்கும் என நினைத்தான் மகேந்திரன். இப்போதெல்லாம் அவள் கண்ணில் படுவதேயில்லை. அவனைக் கண்டு ஏதோவொரு வகையில் பயப்படுகிறாள் என்பது மட்டும் தெரிந்தது. வேலையில்லாதவனோடு சகவாசம் வைத்துக் கொள்வதென்பது ஏதோவொருவகையான கௌரவக் குறைவு என்ற எண்ணம் மனதின் ஓரத்தில் எங்காவது அவளுக்கும் வந்திருக்ககூடும் என அவன் நினைப்பதுண்டு.

சென்ற அவனின் பிறந்தநாளின் போது அவளைச் சந்தித்தது மறக்கமுடியாதது என்று அவளிடம் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறான் அவன். அன்றைக்கு பதினோரு மணி டெலிவரியின் ஒரு தபால் மகேந்திரனுக்கு வந்தது. மல்லியின் கையெழுத்து என்றதும் பரபரப்பாகப் பிரித்தான். பிறந்த தின வாழ்த்துக் கடிதம். பன்னிரெண்டு மணி அளவில் பப்ளிக் கார்டனில் நேரில் பிறந்த தின வாழ்த்துச் சொல்லக் காத்திருப்பேன் என்ற வாசகங்கள்.

பரவசமடைந்தான். எங்கோ பறப்பது போல இருந்தது. ஏதாவது வாங்கிக் கொண்டு போனால் நன்றாக இருக்கும். லட்சுமி படுத்துக் கொண்டிருந்தாள். எழுப்பினால் எரிச்ச லடைவாள். வேறு வழியில்லை என்று மெல்ல தொட்டு உலுக்கினான்.

''அம்மா, பத்து ரூபா இருந்தா தாயேன்.''

''எதுக்கு...''

''வேணும்''

''எதுக்குன்னு சொன்னாத்தா தருவன்''

''வேணும்மா...சினிமா பார்க்க, காபி சாப்புட, ஸ்வீட் வாங்கன்னு ஏதாச்சம் ஒண்ணு.காரணம் சரியா சொல்லித்தா ஆகணுமா...''

''ஆமா. சொன்னாத்தா தருவன்''

''இன்னிக்கு என் பொறந்த நாள் பாரு. ஏதாச்சும் வாங்கிக்கறேன்''

கண்களில் கரகரவென்று நீர் சுரக்க ஆரம்பித்து விட்டது லட்சுமிக்கு.

''உனக்கு ஒண்ணும் பண்ணிக் குடுக்க முடியலெ பாரு.. இன்னிக்குப் பாத்து இந்த ஒத்தைத் தலை நோவு இம்சை பண்ணுது...''

''பரவாயில்லம்மா.''

''ஏதாச்சும் ஒரு இம்சை என்னோட இருந்துட்டே இருக்குது. இதுதா உன்னெ வீட்டு வேலைக்காரனாக் கிடுச்சு. இப்பிடியொரு நாள்லே எதுவும் பண்ணிக் குடுக்க முடியாமெப் போச்சு. உங்கப்ப ஞாபகம் வச்சிட்டிருந்தாரா? நீயாச்சும் ஞாபகப்படுத்தி இருக்கலாமே. ஒரு நிமிஷம் சந்தோஷப்பட்டிருப்பார்.'' சுவற்றைப் பிடித்துக் கொண்டு எழுந்தாள். அவனின் நெற்றியில் முத்தமிட்டாள். இடுப்பில் செருகி இருந்த துணிப்பையிலிருந்து இருபது ரூபாய் எடுத்துத்தந்தாள். மீண்டும் நெற்றியில் முத்தமிட்டாள்.

அம்மாவின் தொடுகையை உணர்ந்து பல வருஷங்களாகி விட்டன என்பது ஞாபகம் வந்தது. அவளின் உடம்பு சூடு நெற்றியில் இறங்கி உடம்பை பரவசப் படுத்திக் கொண்டிருப்பதாய் நினைத்தான். அவள் உடம்பு இப்படிக் படுத்துக் கொண்டே இருப்பதால் வெதுவெதுப்பாகவே இருப்பதாக நினைத்தான். அம்மா இப்படி தினம் ஒரு தரம் தோளைத்தட்டியோ, கை குலுக்கியோ, முத்தமிட்டோ தன்னை உயிர்ப்பித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இதற்கானச் சந்தர்ப்பங்கள் இல்லாமல் போய்விட்டதா அல்லது இதெல்லாம் கூட இயல்பாய் அமையாமல் போய் விட்டதா என்பது குறித்த வருத்தம் வந்தது.

''அம்மா...மல்லி கிரிட்டிங் அனுப்பியிருக்கா''

''அடே...உம் பிரண்டு உன்னை மறக்கலே போலிருக்கு. அவளுக்கு ஒரு வேலை கிடச்சிருச்சு கிரிட்டிங்அனுப்ப மனசிலே தெம்பு இருக்கு. உனக்கு எப்ப அமையுமோ''

''மல்லியைப் பாத்துட்டு வர்ரன்''

லட்சுமியிடம் மல்லி அனுப்பிய கிரிட்டிங் கார்டை கொடுத்தான். சிறு காகிதச் செய்தியைக் கையில் வைத்துக் கொண்டான்.

பப்ளிக் கார்டன் விரிந்து கிடந்தது. பச்சைபுற்களும், மரமுமாக குளிர்ந்திருந்தது. சிலர் தூங்கிக் கொண்டிருந் தார்கள். இவர்களின் உடம்பைத் தொட்டால் சில்லென்று இருக்கும். பச்சைப்புற்கள் உள்வாங்கியிருந்த ஈரம் இவர் களின் உடம்பிலிருக்கும். இங்கே பல தினங்கள் இந்த ஈரத்தை உள் வாங்கினபடி அவனும் படுத்துக் கிடந்திருக் கிறான். இப்போதெல்லாம பஸ் பிடித்து வர வாய்த்த தில்லை. ஆனால் மல்லி இன்றைக்கு வரச் சொன்னது குறித்து சந்தோஷம் அவனுக்கிருந்தது.

அந்த மரத்தில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். என்ன மரம் என்று யோசித்துப் பார்த்தான். தென்னை மரத்தை போல உயரமாக இருந்தது. ஈச்சமரமாக இருக்

கலாம் என நினைத்தான். கார்டன் கேட் பார்வையில் படுமாறு உட்கார்ந்திருந்தான்.

சிறு கேக் பொட்டலம் கையிலிருந்தது. நான்கு வாங்கினது அதிகம் என நினைத்தான். இரண்டு வாங்கி யிருக்கலாம். அல்லது பத்து சாக்லெட்டுகள் போதும். மீதப் பணத்தை சினிமாவிற்காக செலவழித்திருக்கலாம். பரவாயில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டான்.

இருபது நிமிஷங்களுக்கு மேலிருக்கும் அல்லது வாட்ச் இல்லாமல் வானத்தையும், புற்களையும் பார்த்துக் கொண் டிருப்பதால் நிமிஷம் யுகமாகத் தெரிகிறதா. கடிதத்தை எப்போதோ போஸ்ட் செய்திருப்பாள் மல்லி. இன்றைய தினத்தை மறந்து போயிருப்பாளா. எப்படியும் இன்னும் கொஞ்ச நேரம் காத்திருக்கலாம் என்று நினைத்தான். புல்லில் வந்து உட்கார்பவர்கள் கொஞ்ச நேரத்தில் சாய்ந்து விட்டிருந்தனர். அவனும் சாய்ந்தான். ஈரம் அதிகமாகவே இருப்பதாகப் பட்டது. சட்டையை வீணாக்கிவிடும் போலி ருந்தது.

பரபரப்பாக இருந்தது. மல்லிக்கு வேறு அவசர வேலைகள் இருந்திருக்குமோ. அலுவலகத்தில் 'பர்மிஷன்' கிடைக்காமல் போயிருக்குமோ. என்னவாக இருந்தாலும் அவள் நிராகரித்திருக்க வேண்டாம் என்று பட்டது. போகிற வருகிறவர்களிடமெல்லாம் நேரம் கேட்டாயிற்று. அவள் சொன்னதிற்கு ஒரு மணி நேரமும் அதிகமாகிவிட்டது. இனி மேல் வரமாட்டாள் இந்தக் கேக்குகளை தனியே தின்பது என்பது இன்னும் துக்கமானது. அவனிடம் கடிதம் இன்று வராமலேயே இருந்திருக்கலாம். அல்லது ஒரு நாள் தாமதமாக வந்திருக்கலாம். சரியான நேரத்தில் வந்த சந்தோஷம் சட்டென ஓடிப்போய்விட்டது, திரும்பத்திரும்ப வாசலையேப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உள்ளே வரும் ஆட்டோக்களில் உட்கார்ந்திருப்பவர்களில் அவள் உருவம் இருந்தது. சட்டென எழுந்து ஏமாந்து உட்கார்ந்து அலுத்துப்போய் விட்டது, கண்களை மூடி மரத்தில் சாய்ந்து கொண்டான். கண்களைத் திறந்தான்.

''பிறந்த நாள் வாழ்த்து செல்றதுக்கு முன்னாடி சாரி சொல்றது சங்கடமாத்தா இருக்கு.''

'பரவாயில்லே. கடைசியா வந்திட்டியே...''

மியூசியம் அருகில் நடந்தார்கள். அங்கங்கே சிறு கும்பல்கள் மரத்தடிகளில் இருந்தன. வெயில்படும் புல்வெளியில் எங்காவதுதான் உட்கார வேண்டும். நடந்து கொண்டே இருந்தவர்கள் மியூசியத்துள் நுழைந்தார்கள்.

மின்சாரத்தடங்கல் இருந்தது. கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டிருந்த இறந்து போன 'மம்மி, சடலம் இருட்டில் கரித்துண்டு போலக் கிடந்தது. சிறு சிற்பங்கள் வைக்கப்பட்டிருந்த பேழைகள் இருட்டி இருந்தன. யாரோ சிற்பக் கோடுகளை. ஒழுங்கமைப்புடன் வரைந்துவிட்டுப் போனது போல இருந்தன.

''இதிலெ என்ன பாக்க...போலாம்.''

''வந்ததுக்கு ஒரு சுத்து சுத்திடலாம்.''

மெல்லிசான இருட்டில் இரு உருவங்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் வாட்ச்மேன்.

கைப்பையிலிருந்து எடுத்த சாக்லெட்டை பிரித்தாள் மல்லி. பிறந்தநாள் வாழ்த்துக்கள் என்றாள். அவன் வாயில் சாக்லெட்டை திணித்தாள். சாக்லெட்டை வாங்கி பாதியை அவளுக்கும் தந்திருக்கவேண்டும் என்று எண்ணம் சாக்லெட் உமிழ் நீருடன் கலக்கையில் வந்தது. வருத்தமாக உணர்ந்தான். அவனின் உதட்டில் முத்தமிட்டாள். பூரிப்பாகஇருந்தது. கைகளிலும் கன்னத்திலும் முத்தமிட்டிருக்கிறாள். உதட்டில் முத்தமிடுவது முதல் முறை. இதை ஒரு பரிசாகவே அவன் அவளிடம் கேட்டிருக்கிறான். பேனா ஒன்றை எடுத்துத்

தந்தாள். அதன் மரக்கலர் நிறம் அவனுக்குப் பிடிந்திருந்தது. எதுவும் சொல்லாமல் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளின் கண்கள் மின்னிக் கொண்டிருந்தன. வாட்ச்மேனின் கைத்தடி எங்கோ பட்டுச் சப்தம் உண்டாக்கியது. அவனின் தலை தெரிந்தது. நகர ஆரம்பித்தார்கள்.

''ஏதாச்சம் வாங்கணும்ன்னு நெனச்சேன். கைக்குட்டைக் குடுத்தா பிரிவு வரும்ன்னு சொல்லுவாங்க. பர்ஸ வாங்கலாமுன்னு நெனச்சேன். நீ சம்பாதிக்கிற காலத்திலே கொடுத்துட்டாப் போச்சுன்னு பேனா வாங்கினன். இதிலெ நெறைய பரிட்ச்சைகள் எழுதணும். பாஸ் பண்ணணும்.'

''நிறைய அப்ளிகேஷன்ஸ் பில்அப் பண்ணனும்.'' மல்லி சிரித்தாள். அவள் அலங்காரம் அவனை வெறித்துப் பார்க்கச் செய்தது. புருவங்கள் அழகாய் வெட்டி இருந்தாள். மூக்குத்தி பளபளந்துக் கொண்டிருந்தது.

''அடுத்த வருஷம் பர்ஸ் பிரசண்ட் பண்ணுவேன்''

''அப்போ அதுக்குள்ள எனக்கு வேலை கெடச்சிரும் கறியா...''

''நிச்சயமா...''

''உன்னோட நம்பிக்கைதா சந்தோஷம் தருது...''

அடுத்த ஆண்டு பிறந்ததினத்தின் போது மல்லியின் வாழ்த்துக் கடிதம் வருமா? வாழ்த்துக் கடிதம் வந்தாலும் சந்திப்போம் என்ற தகவல் இருக்காது. வெறுமனே வாழ்த்துக் கடிதம். இந்த ஒரு ஆண்டுக்குள் சந்திப்பது ரொம்பவும் குறைந்து போய் விட்டது. அவளின் அலுவலக வாசலில் போய் நிற்பதும் குற்ற உணர்வாக இருந்தது. அவனைப் பார்த்து அவள் திடுக்கிட்ட பொழுதுகள்தான் அதிகம். அவளின் கறுத்த முகத்தை பார்க்க துயரமாகவே

இருந்தது அவனுக்கு. அவளின் நிலை அவனுள் பதிந்தது. தூரமிருந்து அவளைப் பார்ப்பதே ஆறுதல் என்று பட்டது.

அடுத்த பிறந்தநாள் அன்று அவளைப் பார்த்து கைக்குட்டையைப் பரிசளித்து விடலாம். பிரிவின் அடையாளம் என்று சொல்லிவிடலாம். அல்லது அவள் பரிசளித்தாலும் கைக்குட்டைதான் பரிசளிப்பாள் என்பதாய் திடமாய் நம்பினாள்.

# (7)

தாமோதரனின் கையிலிருந்த பேனா உள்ளங்கைக்குப் போனது. சிதறலாய், ஓடுவது போல ஓடியது. இன்னொரு கை தொடாமல் உள்ளங்கையிலேயே நின்றது. அந்தரத்தில் ஒரு கையை நிறுத்தினபோதும் பேனா விழாமல் நின்றிருந்தது. குழந்தைகள் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''இப்ப ரெட்டிகாரு எம் பேனா எப்பிடி நிக்குதுண்ணு காட்டணும்'' ரெட்டி எழுந்தான். அவனின் இளம் கையில் பேனாவை வைத்தான். அது சரசரவென நழுவி கீழே விழுந்தது குழந்தைகள் சிரித்தனர். ரெட்டிக்கு முகம் கறுத்தது.

''ரெட்டி சின்னபையன் பாரு...ரோசினி நீ பண்ணே'' அவள் பாவாடையைச் சுருட்டிவிட்டுக் கொண்டாள். நாக்கை வாயிலிருந்து முன் நீட்டி துருத்தினாள். கண்களை அகல விரித்துக் கொண்டாள். பேனாவை திருப்பித் திருப்பிப் பார்த்து உள்ளங்கையில் வைத்தாள். அது உருண்டு தரையில்விழுந்தது. திண்ணையில் உட்கார்ந்திருந்த சுதாகர்

அவன் பிடிக்கிற கதியில் வலது கையை நீட்ட திண்ணையிலிருந்த சரிந்து விழுந்தான். தாமோதரன் பதறிப் போய் சுதாகரை வாரி எடுத்துக் கொண்டான். சுதாகர் அழ ஆரம்பித்தான்.

இப்படி யாராவது அழ ஆரம்பித்தால் மாஜிக்கோ, விளையாட்டோ முடிந்துவிட்டது என்று அர்த்தம். குழந்தைகள் கலைய ஆரம்பித்திருந்தனர். சுதாகர் தாமோதரன் மடியில் சுகம் கண்டவன் போல் உட்கார்ந்திருந்தான். தாமோதரன் அவன் தலையைக் கோதினான்.

''என்ன இப்பிடி விழுந்துட்டே, பூதம் கையிலிருந்த மலையைக் கவழ்த்தின மாதிரி''

''உம் அப்புறம்...''

''மலை கவிழ்ந்து போச்சு.''

''கவிழ்ந்தா என்னாகும்.''

''ஜனங்களெல்லாம் தாறுமாறா விழுந்துட்டாங்க. தண்ணித்தொட்டி ஏரிகள்ல இருந்த தண்ணியெல்லா கவிழ்ந்து போச்சு. அது வேறொரு லோகம் போல ஆகிப் போச்சு. எங்க பார்த்தாலும் மரங்களெல்லா தலை கீழாக் கெடக்குது. மனுஷங்களும் மரங்களோட மரங்களாக் கெடக்கறாங்க''

''எப்பிடி சாப்பிடுவாங்க, குளிப்பாங்க அப்புறம்''

''எல்லாமே தலைக்கீழா ஆகிப் போனப்புறம் எதுக்கு சாப்பாடும், குளிக்கறதும்.''

''ச்சீ...ச்சீ. அப்பிடி கூட இருக்க முடியுமா''

''இருக்கர்ரதுதானே நானெல்லா இல்லியா, தலை கீழாகிப் போன வாழ்க்கைதானே. இப்பிடி இருக்கறதிலெ சொகம் ஒண்ணும் இல்லீன்னாலும், அதது பாட்டுக்குப் போயிட்டிருக்கு.'

''செரி...''

''இன்னொரு கதை நீ சொல்லு...''

''செரி... ஒரு ஊர்ல ஒரு பூதம். அது ஒரு மலையை தலைகீழாக் கமித்தி, எல்லாரும் கீழே வுழுந்துட்டாங்க...,,

''தாத்தா இவன் நீங்க சொன்னதையே திரும்பச் சொல்றான்.''

''சொல்லட்டும்''

''வேணாந்தாத்தா புதுக் கதைன்னா சொல்லு...''

''நா வேற மாஜிக் சொல்லித் தரணம்ன்னு நெனச்சேன். குட்டிப்பையன்தா கீழே வுழுந்துட்டானே. அதுதா சொல்லலே. அவன் வுழுந்தப்புறம் சொல்றதும் நல்லாயில்லே. இன்னொரு நாள்''

''என்ன மேஜிக்...''

''மாயமாப் போறக் கொக்கு.''

''கொக்கே கொண்டுட்டு வரப் போறியா தாத்தா அதுக்கு...''

''ஆமா...''

''கொக்கெ எங்க மறைப்பே''

''சட்டைக்குள்ள''

''சட்டைதா கிழிசலா இருக்கே. மறைக்க முடியுமா?''

''ஆமாமா. அதுவுங் கஷ்டந்தா. ஏதாச்சும் சின்ன சாமானெ மாயம் பண்ணவா.''

லட்சுமி வந்து கதவு ஓரத்தில் நின்றிருந்தாள். குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வீதி சுலபமாக கண்களில் அடைப்பட்டுப் போனது. வீட்டோரத் திண்ணைகள், மூடப்பட்ட கதவுகள். எல்லோரும் ஏதோ வொருவகையானத் தூக்கத்தில் இருப்பார்கள் என

நினைத்தாள். ஏதோ சைகை செய்தால் போதும் என்பது போல் நொடியில் வந்து திண்ணைகளிலும், கதவோரத்திலும் நின்று விடுவார்கள். அந்தச் சமிக்ஞைக்கானவள் தானில்லை என்பது மட்டும் அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது. இப்படி அவள் வந்து நிற்பதைக் கூட சிலர் அபூர்வமாக கவனிப்பார்கள் என நினைத்தாள்.

தாமோதரன் அலுத்துப் போனவர் மாதிரி சுவற்றில் சாய்ந்து கொண்டான். கண்களை மூடி இருந்தான். களி மண் பொம்மையை அங்கங்கே சிதைத்து விட்ட மாதிரி இருந்தது அவன் உருவம். ஆழ்ந்து தூங்குவது போலிருந்தது. சட்டெனக் கண்களைத் திறந்து பரக்கப் பார்த்தான். லட்சுமியைப் பார்த்து சிதைந்த பற்களின் வழியே புன்னகையை ஒட்ட வைத்தான்.

அந்தப் புன்னகை ஒரு விதத்தில் அவன் முகத்தில் உறைந்து விட்டால் நன்றாக இருக்கும் என நினைத்தாள் லட்சுமி. அது புன்னகை என்று சுலபமாகக் கண்டு பிடிக்காதபடி மயிர்கள் அடர்ந்த, ஒடுக்கு விழுந்து போன முகத்தின் ஒரு ஓரத்தில் புன்னகை என்று தெரிகிறவிதமாய் இருந்தது. தாமோதரன் வாய்விட்டு இயல்பாய் சிரிப்பது அபூர்வம். சிரிக்கிறான் என்றால் குடித்திருக்கிறான் என்று அர்த்தம். குடித்திருக்கிறபோது வாயை அகலத் திறந்து உறக்கச் சிரிப்பான். பற்கள் விழுந்துபோன கடைவாய் மயிர்களைச் சிலிர்க்க வைத்துக் கொண்ட பிராணி போல இருப்பான். சோளக் கொல்லை பொம்மையை புறங்கையால் தள்ளி விட்டது போல எங்காவது கிடப்பான்.

''என்ன சாப்புடறியா.''

கண்களை விழித்தான் தாமோதரன். முந்தின கணத்தில் அவனுடன் விளையாடிக் கொண்டிருந்தக் குழந்தைகளைத் தேடுவதுபோல கண்களைச் சுழலவிட்டான்.

''என்ன தாயி.''

''சாப்படறியா''

''செரி..''

திண்ணையிலேயே சம்மணமிட்டு உட்கார்ந்தான். கைகளைச் சட்டையில் துடைத்துக் கொண்டான்.

''இங்கியா... வேண்டாம் உள்ள வந்து உக்காரு''

''பரவாயில்லே தாயி. இங்கியே இருக்கட்டும்.''

''திண்ணையிலே உக்காந்து சாப்புட கூச்சமா இல்லையா.''

''கூச்சமெல்லாம் போச்சுத் தாயி.''

''ஒவ்வொரு பாத்திரமா திண்ணைக்கு கொண்டுட்டுவர எனக்கு சங்கடமா இருக்கும்.''

''சாதமும், கொஞ்சம் பருப்பும் பேப்பர் மேல போட்டு குடுங்க போதும்.''

இலைக்கிழிசல் இருந்தது. சாதத்தையும், பருப்பையும் போட்டு அவன் முன் கொண்டு வந்து வைத்தாள். பரபரத்து சாப்பிட ஆரம்பித்தான். பசியின் பரபரப்பை கண்முன் பார்ப்பது கோரமாகத்தான் இருந்தது அவளுக்கு.

# (8)

ஏரியின் வலப்புறம் இருந்த சிலைகள் நொறுங்கியிருந்தன. குதிரை ஓட்டுபவன் போல,வாளைச் சுற்றுபவன், புஸ்தகத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டவன், கைத் தடியை வீசி நடப்பவன், மண்டியிட்டபடி வாத்யக் கருவியை வாசிப்பவன், பேசிக் கொண்டிருப்பவன், அரியணையில்

அமர்ந்திருப்பவன். எத்தனை சிலைகள், எல்லா சிலைகளையும் நொறுக்கி இருந்தார்கள்.

''எதற்காகச் சிலைகளை நொறுக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.''

''இவையெல்லாம் எதற்கு.''

''ஆதர்சம், எழிச்சி...''

''இவர்களா ஆதர்சம் தரப் போகிறார்கள். இவர்களின் ஆண்மை எந்த நல்ல காரியத்தை செய்திருக்கிறது. நடக்கிற போக்கில் எல்லாம் நடக்கின்றன. இவர்கள் அங்கங்கே வந்து போகிறார்கள்.''

''வந்து போகிறவர்களுக்கென்று உருவங்களா''

''வெறும் உருவங்கள் என்றால் பயவாயில்லை, ஆராதிக்கும் உருவங்கள் என்றாக்கி விட்டார்களே. இவர்களே பீடம் அமைத்துக் கொடுத்து, பீடத்தில் உட்கார்ந்து கொண்டு ஆராதனை செய் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு...'' அந்த இளைஞனின் கையில் சுத்தியில் இருந்தது. அவன் ஓங்கி ஓங்கி சிலையைத் தட்டினான். ''இந்தக் கைகள் எத்தனைக் கைகளை முறித்திருக்கும். இந்தக்கைகள் எத்தனை வாய்களை அடைந்திருக்கும். அந்தக் கால்கள் எத்தனை பேர்களை எட்டி உதைத்திருக்கும். எத்தனை காலன் ரத்தம் குடித்தது இந்த வயிறு. தலையில் சூடிய கிரீடங்கள்எத்தனை, கையில் ஏந்திய செங்கோல்கள் எத்தனை. எல்லாம் அழகாய். நீ பார் நீ பார் என்று,''

சிலைகளை உடைப்பது சுலபமானதல்ல என்று அறிந்தவன் போல், பலதலைமுறைக் கோபத்தை உள் வாங்கிக் கொண்டு கைகளை வீசினான்.

சிதறி விழுவதைப் பார்க்கச் சந்தோஷமாக இருந்தது அவனுக்கு. துகள்களாய் அவை சிதறும் வரை ஓங்கி அடிக்க வேண்டும் போலிருந்தது. சிலைகளற்ற புல்வெளிகள்

என்பது எவ்வளவு ரம்மியமாக இருக்கும் என்பதை அவன் நினைத்துப் பார்ப்பது போல் பார்வையை ஓடவிட்டான். குறுக்கீடற்ற புல் வெளிகள். எதிர் ஏரிக்காற்று தழுவித் தழுவி உடம்பைப் புல்வெளியில் கிடத்திப் போகும். மெல்லத் தழுவி நீயார் என்று கேட்டுப் போகும். உன்னைத் தழுவி எத்தனை நாட்கள் என்று கேட்டு நழுவும்.

சட்டெனக் காற்றை உள்ளிழுத்துக் கொண்டு கமறலுடன் வாயைத் திறந்தான் அந்த இளைஞன். இருமல் தொடர்ச்சியாய் வந்தது. குடலைப் புரட்டி வாய்க் குப்பக்கம் கொண்டு வந்தது போல இருந்தது. தழுவின காற்றா இப்படி கமறலையும், மூச்சுத் திணறலையும் சுமந்து வந்தது? ஏரி கரி பூசினது போலத் தெரிந்தது. தூர மிருந்து வந்த கழிவுக் கால்வாய்கள். ஏரியைத் தொட்டுத் தழுவி இருந்தன. நீண்ட மாடிகளின் விளக்கு வெளிச்சக் கழிவுகள் ஏரியில் விழுந்து கிடந்தது.

> காற்றைக் கைகளால் தடுத்துப் பார்த்தான். கைகள்தாறுமாறாய்அலைந்து காற்றைத்தழுவின. ஆனால் மூச்சை அடைக்கிறக் காற்று தொடர்ந்து கொண்டே இருந்தது.காற்று என்றதும் சந்தோஷம் கொள்ளும் மனம் இப்போது பயப்பட்டது. மூச்சை அரித்து, நுரையீரல்களை ஓட்டையாக்கி... பெரிய சுவர்கள் எழுப்பித் தடுத்துவிட வேண்டும் போலிருந்தது.

சிலைகளின் சிதைந்த ரூபங்களைப் பார்த்தபடியே நகர்ந்தான் மகேந்திரன். சிதைந்த பாகங்களுடன் தன் உடம்பை ஒட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. சிதைந்த கைகள் வலிமையான தந்தங்களைப் போல ஒட்டிக் கொண்டன. தலைகள் எங்கும் பொருத்திக் கொள்ள முடியாததுதான் என நினைத்தான். ஒவ்வொரு சிலை களிலிருந்தும் ஒவ்வொருப் பகுதியை எடுத்து மாட்டிக் கொண்டான். விசித்திர ரூபமாய் இருந்தது. சிலைகளை

உடைத்த இளைஞன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் உடைப்பதற்குள் இவற்றை உலுக்கிப் போட்டுக் கொள்ள வேண்டும். உடம்பை உலுக்கி சிலைகளின் பாகங்களை விடுவிக்க எண்ணினான். அவை உதிராமல் தத்தளித்தபடி நின்றிருந்தன. மகேந்திரன் உடம்பு துணுக்குகளாய் சிதறுமாறு உடம்பைக் குலுக்கிக் கொண்டிருந்தான்.

# (9)

கடைகள் அடைபட்டுக் கிடந்தன. ஜனங்களின் நடமாட்டம் ரொம்பவும் குறைவாய் இருந்தது. வாகனங்களை அங்கங்கே கட்டிப் போட்டிருந்தார்கள். பெரிய கருங்கற்களைக் குவித்தது போல வாகனங்கள் நின்றிருந்தன. வாகனங்கள் அற்ற வீதி கவர்ச்சிகரமாய் இருப்பதாய் பட்டது. வீதிகளின் நீட்சியைச் சுலபமாகக் காண முடிந்தது. அங்கங்கே போலீஸ்காரர்கள் தென்பட்டார்கள்.

மனிதர்களைச் சுலபமாகக் கட்டுப்படுத்தி வீட்டிற்குள் அடைத்துவிட்டார்கள் என நினைத்தான் மகேந்திரன். இப்படி மனிதர்களை எப்போதும் அடைத்துவிட்டால் நன்றாக இருக்கும். வீதிகளாவது ஒழுங்கமைப்பாக இருக்கும். நெரிசலுடன் பார்த்து அலுத்துப்போய் மனிதர்களில்லாமல் பார்ப்பது சந்தோஷம் தந்தது அவனுக்கு.

பந்த் என்று யாராவது அழைப்பு விடுத்தால் இப்படி முடங்கிப் போய் விடுகிறார்கள் மனிதர்கள். விபரீதமாய் ஏதோ நிகழப் போகிறது என்று எல்லோரும் காத்திருக்கிற

சந்தர்ப்பம். ஏதாவது நிகழ்ந்தால் செய்தியாகிறது. சில நாட்கள் பேசிக் கொள்ள ஒரு விஷயம். இல்லாவிட்டால் 'சப்' கொட்டிக் கொண்டு நகர்ந்து விடுகிறார்கள். இன்றைய தினத்து செய்தியை உண்டாக்குகிறவனாக அவன் இருப்பான் என நினைத்தான்.

என்ன செய்யலாம்? ஜேம்ஸ் வீதி குடிதண்ணீர் தொட்டியின் மேல் ஏறி நின்று தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டலாமா? வேலை கொடுக்க அரசாங்கம் ஒத்துக் கொண்டாலும், தரமாட்டார்கள். குடிதண்ணீரில் விஷம் கலந்ததாய் சொல்லலாமா? ரயில்வே பாலத்தின் மேல் ஏறி நின்று கொண்டு உரக்கச் சத்தமிடலாமா? போய் வந்து கொண்டிருக்கும் போலீஸ் வாகனங்களை நிறுத்தி கெக்கலிக்கலாமா? எதுவாக இருந்தாலும் குற்றம்தான். உடம்பு காயப்பட்டுப்போகும். ஆனாலும் ஏதாவது செய்யத்தான் வேண்டும். தன் இருப்பை மற்றவர்களுக்கு எப்படிக் காட்டுவது என்று புரியவில்லை. ஒருநாள் சமைக்காமல் இருந்தால் தான் இல்லை என்பது வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரிந்துவிடும். மற்றவர்களுக்குத் தன் இருப்பு கவனம் கொள்ளவேண்டிய விஷயமில்லை. ஏதாவது செய்யவேண்டும் என்பது மட்டும் அவனின் மனதில் இருந்தது.

அன்றைய பந்த் வழக்கம் போல தண்ணீர் பிரச்சினைப் பற்றினது. என் பிரதேசத்து நீர் உனக்கு எதற்குத்தர வேண்டும் என்று எதிர்ப்பு, தரவேண்டிய அவசியமில்லை என்று காட்டுவதற்கான பந்த். இந்த பந்த் மட்டும் வெற்றிகரமாக நடந்துவிட்டால், இந்த பிரதேசத்துத் தண்ணீர் வேறு பிரதேசத்திற்குத் தரவேண்டிய அவசியமில்லை என்று நிருபணம் ஆகிவிட்ட மாதிரிதான் என்று போஸ்டர்கள் சொல்லின. அறை கூவல் விட்டன. விதவிதமானப் போஸ்டர்களில் சிரித்துக் கொண்டிருந்த மனிதர்கள் தங்களை கோபம் கொள்ளச் செய்யவேண்டாம் என்று எச்சரிப்பது போல இருந்தன போஸ்டர்கள். போஸ்டர்களில் சிரித்

துக் கொண்டிருப்பதாலேயே இவர்கள் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள் என்றுபட்டது மகேந்திரனுக்கு.

ஜுப்லி வீதி முக்கில் நிறையப் போலீஸ்காரர்கள் தென் பட்டார்கள். மந்திரி ஒருவனின் வீடு அங்கிருந்தது. அவ ரைக் கொல்லப் போவதாய், கொல்ல தாங்கள் இலக்குவைத் துள்ளவர்களின் பட்டியலில் ஐந்தாவதாய் அந்த மந்திரி இருப்பதாய் தீவிரவாதிகள் சொன்னதால் அந்த மந்திரியின் வீடு எப்போதும் போலீசாரால் சூழப்பட்டிருந் தது. தெருக்களில் வாகனங்கள் இல்லாமல் இருப்பது போல அந்த வீடு போலீஸ்காரர்களால் சூழப்படாமல் இருந் தால் பார்க்க அழகாகவே இருக்கும் என நினைத்தான். போலீஸ்காரர்களால் சூழப்படாமல் இருப்பது அர்த்தமற்ற தாகக் கூட ஆக்கி விடும் என நினைத்தான்.

அந்த வீதியின் வீடுகள் நல்ல ஒழுங்கமைப்புடன் இருந் தன. மரங்களும், கொடிகளும் வீடுகளை மறைத்துக் கொண்டிருந்தன. நாய் குரைப்புச் சத்தங்களும், ஏதோ வொருவகையானஇசையும் மாறிமாறிக்கேட்டுக்கொண்டிருப் பது போல இருந்தது. மரங்களுக்கு மத்தியில் மனிதர்கள் தென்படுவார்கள் என நினைத்தான். யாருமில்லை. பந்த் இவர்களையும் வீட்டிற்குள் கட்டுப்படுத்திவிட்டது போலி ருந்தது.

அவனின் முதுகில் ஓங்கி யாரோ தட்டியது போலிருந் தது. சற்று வலித்தது. துப்பாக்கி அவனின் கண்களில் முதலில் பட்டது, ''க்யா...க்யா...இங்க என்னடா பண்றே'' போலீஸ்காரனின் குரல் உருதுவில் பிசிறடித்தது. முரட்டுத் தனமாகவும் இருந்தது, ''சும்மாதா நடந்திட்டிருக்கேன்''

''சும்மாதான்னா வீட்லியே உக்காந்திட்டிருக்கா லாமே''

மூன்று போலீஸ்காரர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களில் ஒருவன் மகேந்திரனின் மார்பில் கைவைத்தான். உடம்பு கூசியது. சற்று விலகி நின்று கொண்டான். பின்

னால் இருந்த போலீஸ்காரன் அவனின் தோளிலிருந்து கைகளை இறக்கி புட்டம் வரைக்கும் கொண்டு சென்றான். அவனின் பேண்ட் பாக்கெட்டுகளைத் துழாவினான். முன் னால் ஊர்ந்த கை உயிர் நிலையைத் தொட்டு அமுக்க முயன்றது. அவனுக்கு ஒவென்று கத்த வேண்டும் போலி ருந்தது.

''எதுக்கு அலையறான் தெரியுமா... சும்மாவாம்'' சொல்லிவிட்டு ஒருவன் உரக்கச் சிரித்தான். அவனின் இந்தி வார்த்தைகளை நீட்டி முழக்குவது போலிருந்தது. அவனே உடனே தெலுங்கில் ஏதோ சொன்னான். எல்லோ ரும் சிரித்தார்கள்.

''சும்மா இப்பிடி சுத்தறதுக்கு வீட்லேஉக்காந்து பண்ண லாமே'' அந்த வார்த்தையை மகேந்திரனும் பல சமயங் களில் நண்பர்களுடனான பேச்சில் சொல்லியிருக்கிறான். ஆனால் இப்போது அருவருப்பாக இருந்தது. சிரிப்பினூடே சொல்லும் வார்த்தைகள் இப்படி விபரீதமாய் அர்த்தப்படுவ தாய் முதன்முதலாக நினைப்பதாகத் தோன்றியது.

''பந்த் நாள்லே என்ன உலா வேண்டிக் கெடக்குதாம். போடா.''

தோளில் கை வைத்துத்தள்ளினான். மகேந்திரன் தடு மாறினபடி கொஞ்ச தூரம் போய் நின்றான். திரும்பிப் பார்த்தபோது அவர்களில் ஒருவன் மட்டும் மகேந்திரனைப் பார்த்துக் கொண்டிருக்க மற்றவர்கள் வேறு திக்கில் நகர்ந்து கொண்டிருந்தார்கள். தலை குப்புறக் கவிழ்ந்து விட்டது போலிருந்தது. உடம்பின் அணுக்களில் தேங்கியிருந்த வலி முகத்திற்கு வந்து விட்டதாய் உணர்ந்தான். எதிரில் வரும் யாரையாவது குத்திச் சாய்க்கவேண்டும் போலிருந்தது. அறைந்து தள்ளிவிட மனிதர்கள் கிடைக்காத துயரநாள் என்றிருந்தது. அப்படியே மனிதர்கள் தென்பட்டாலும் அவர்களை அறைகிற மனவக்ரம் தனக்குச் சட்டென வந்து சேருமா என்ற சந்தேகமும் வந்தது.

வெறுமனே நடந்து போய்க் கொண்டிருக்கிறவனை இப்படி நிறுத்தி உடம்பு கூச எதையாவது ஏன் செய்யவேண்டும்? கால்களை மாற்றி மாற்றி நிலத்தில் உதைத்தான். தார்ரோட்டின் சிதைந்த சரளைகள் சிதறி விலகின. கால்களில் ஒருவித வலி ஆரம்பித்தது. இன்னும் உக்கிரமாய் கால்களை உதைத்து ரத்தம் கசிவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என நினைத்தான்.

தன் உடம்பிலிருந்து ரத்தம் கசிவதைப் பார்த்து ரொம்ப நாட்கள் ஆகி விட்டது என்றிருந்தது. ரத்தம் கசிய நடமாடும் மனிதனாய் ஒரு நாள் இருந்து பார்த்தால் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்ப்பவன் போல் நடந்து கொண்டிருந்தான்.

அந்தக்கட்டிடம் பிரமாண்டமானதாய் அவன் முன் நின்றிருந்தது. பல முறை அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்திருக்கிறான். பல மாடிகளைக் கொண்டக் கட்டிடம். ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் போய் யாரையோ தேடுவது மாதிரி அலைந்திருக்கிறான். அப்படித் தேடுகையில் அவர்களின் பரபரப்பு அவனுக்குச் சந்தோஷம் தந்திருக்கிறது அவர்களுள் அவன் அமிழ்ந்து போனமாதிரியும் இருந்திருக்கிறது. ஏதாவது பிரிவில் பெண்கள் இருந்து விட்டால் சற்று நேரம் அங்கு நின்றபடி இருப்பான். பலமுறை அந்தக் கட்டிடப் பிரிவுகளுக்குள் அலைந்தாயிற்று. அலுப்புத் தென்பட்டதில்லை. கட்டிடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மாடிப்படிகளில் ஏறினான். பிரிவுகள் மூடப்பட்டிருந்தன. மாடிப்படிகளைத் தொடர்ந்து சென்றால் உச்சிக்குப் போய் விடலாம். இவ்வளவு தூரம் ஏறியும் யாரும் எதுவும் கேட்காதது ஆச்சர்யமாகவே இருந்தது. காவல் காப்பதற்குக் கூட யாருமில்லாதக் கட்டிடம் அல்லது அவனுக்குக் கூட அலுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். வெறுமனே பார்த்துக் கொண்டு, விசில் ஊதிக் கொண்டு, வருகிறவர்களை விசாரித்துக் கொண்டு......ஒரு நாள் வேலை என்றால் அலுப்பு இருக்காது. தினப்படி இதுதான் என்றாகிவிட்ட போது

அலுப்பு மிஞ்சும். அந்த அலுப்பில்தான் காவல்காரனும் எங்காவது ஒளிந்து போயிருப்பான். இப்படி ஒளிந்து போகிற வேலையாவது தனக்குக் கிடைத்தால் நன்றாக இருக்கும் என நினைத்தான்.

மூச்சிரைத்தது. வாயை அகலத் திறந்து மூச்சு விட்டுக் கொண்டான். உச்சிக்கு வந்துவிட்டோம் என்பதை அவனின் உடல் தனித்து விடப்பட்டிருப்பதிலிருந்து தனக்குத் தோன்று வதாய் சொல்லிக் கொண்டான்.

சுற்றிலும் இருப்பவை அதனளவில் சிறுத்துக் கொண் டுத் தெரிந்தன. போலீஸ்காரர்களைத் தேடினான். கீற் றாய் தென்படும் தெருக்களில் நடமாடுபவர்கள் போலீஸ் காரர்களாய்தான் இருக்க வேண்டும் என நினைத்தான். ஓவெனக் கத்திக் கொண்டு இங்கிருந்து விழுவது எவ்வளவு சுலபமானது, தப்பித்தலானது என்ற எண்ணம் மனதில் வந்தது. தான் எவ்வளவு சுருங்கிப் போயிருக்கிறோம் என்று தெரியாமலேயே தன் இருப்பையும் நிரூபித்து விட லாம் என்றுபட்டது.

# (10)

மெகபூப் காலேஜ் ஸ்டாபில் ஏறிய வெங்கிட்டய்யாவிற்கு சீட்டில் கிடப்பவன் தாமோதரன் என்று தெரிந்து கொள் வதற்கு கொஞ்ச நேரம் பிடித்தது. உருண்டு கொண்டிருந்த தலை சட்டென வலப்புறத்தில் சாய்ந்த போது தாமோதர னின் முகம் தெரிந்தது. நெரிசல் இருந்தது. தாமோதரன் கிடந்த இடத்திலிருந்து கொஞ்ச தூரத்திற்கு ஆட்கள் யாரும் நெருங்காமல் தள்ளியே இருந்தார்கள். தோள்

களுக்கு மத்தியில் கிடைத்த இடைவெளியில் தாமோதரனின் முகம் தெரிந்தது. திக்கென்றது. பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

இந்த மனிதனுக்கு எப்படி காசு கிடைக்கிறதோ என்ற நினைப்பு வந்தது வெங்கிட்டய்யாவிற்கு. எப்படியோ கிடைத்துவிடுகிறது. மிச்சம் வைக்கிற எண்ணமோ, கவனிப்போ இன்றி எல்லாவற்றையும் குடித்து செலவழித்து விட்டு எங்காவது வீட்டு வாசலில் உட்கார்ந்திருப்பான். அவனுக்கென்று சிலர் வீடுகளில் வேலைகள் காத்துக் கொண்டுதான் இருந்தன. அவன்மேல் பரிவாய் பார்க்க சிலருக்கு அவகாசம் இருந்து கொண்டு இருப்பது அவருக்கு எப்போதும் ஆச்சர்யமே தந்திருக்கிறது.

இப்படி ஒரு வாழ்க்கை எவ்வளவு சுலபமானது. தளைகள் அற்றது. வானத்துப் பறவையின் சுதந்திரம் பற்றி அவர் பல சமயங்களில் நினைப்பதுண்டு. இந்த மனிதனுக்குக் கிடைத்திருப்பது அப்படியொரு சுதந்திரம்தான். இது தனக்கு வாய்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அல்லது எல்லா மனிதர்களுக்கும் இது வாய்த்தால் இன்னும் நன்றாகத் தான் இருக்கும். இந்த நாடோடி வாழ்க்கை எல்லாருக்கும் வாய்க்க வேண்டியது தான். நாடோடி வாழ்க்கையை அனுபவிக்காதவர்கள் மனிதர்களாய் இருக்க முடியுமா? இப்படியொரு வாழ்க்கை அமையாமல் போய் விட துரதிர்ஷ்டம் சில சமயம் மனதிற்குள் வரும். ஆனால் அதன் மறுபக்கம் எப்போதும் அவரைப் பயமுறுத்திக் கொண்டே இருக்கும். மறுபக்கம் அவமானம், தனிமை என்றெல்லாம். அதெல்லாம் வாய்க்கிறபோது தற்கொலைக்குச் சுலபமாகக் கொண்டுபோய் விடும். இருப்பது போதும் என்ற எண்ணம் அவருக்கு நிலைத்து விடுவதுண்டு.

ஸ்டேஷனில் பஸ் நின்றது. வெங்கிட்டய்யா கூட்டத்திலிருந்து தப்பித்து வந்தவர் போல் மெல்ல படிகளில் இறங்கினார். ஏறுவதற்குக் காத்துக் கொண்டிருந்த கூட்டம்

இறங்குபவர்களுக்கு வழி விடாமல் நெருக்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொருவராக இறங்க இடம் விட்டு படிகளின் இரு புறங்களிலும் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். கைகளை அகலவிரித்துக் கொண்டு இறங்குவது சுலபம், உடம்பு இடிபடாமல் இறங்கலாம். கைகள் பிறரின் முகங்களில் பட்டு விலகிக் கொள்ளச் செய்துவிடும். வெங்கிட்டய்யா இறங்கி முடித்ததும் ஆசுவாசப்படுத்திக் கொண்டார். கசங்கி இருந்த சட்டையை நீவி விட்டுக் கொண்டார்.

நீண்ட கொடிபோன்ற ஒழுங்கமைப்புடன் பஸ் படிக் கட்டுகள் நிரம்பி இருந்தன. மனிதத் தலைகளுக்கு இடையிலான இடைவெளி சீராக இருப்பதாகப்பட்டது. உயரும் கைகள் பிசிறாகப்பட்டது. பஸ் அடைப்பட்டுக் கொள்வதைப் பார்க்க ஏனோ சந்தோஷம் ஏற்பட்டது சட்டென தாமோதரன் நினைவு வந்தது. குதிகால்களைத் தரையில் அழுத்திக் கொண்டு எட்டிப் பார்த்தார். ஜன்னல் கண்ணாடியின் வழியே கடைசிச் சீட்டு நிரப்பப் படாமல் ஆட்கள் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. நெருங்கப் பயப்பட்டு நிற்பது போலப்பட்டது. பஸ்ஸின் பின்புறம் வந்து நின்றார் நின்று கொண்டிருந்தவர்களின் முகக்கோபம் தெறித்துக் கொண்டிருப்பது போல் பட்டது ஒருவன் தாமோதரனை எழுப்ப முயல்வது போல் கைகளால் அசைத்துக் கொண்டிருந்தான். முகத்தில் படபடவெனத் தட்டிப் பார்த்தான். பிறகு பின் பக்கம் கைகளைக் கொடுத்து உடம்பை அசைத்தான். முகத்தில் வெறுப்பைத் தேக்கியபடி நின்று கொண்டான்.

தாமோதரனை உள்ளே போய் எழுப்பி அழைத்து வந்து விட வேண்டும் என்றிருந்தது அவருக்கு. படிகளில் நிறைத்துக் கொண்டிருக்கும் கூட்டம். சாகவாசமாய் அழைத்துக் கொண்டுவர இடைவெளி கூட இல்லை. யாராவது எழுப்பி விட்டால் கைத்தாங்கலாக அழைத்து வரலாம். வேறு என்ன செய்வது என்று தெரியாதவர் மாதிரி கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

கண்டக்டரும் டிரைவரும் பின்புற சீட்டருகில் வந்தார்கள்.

''மாமா...இன்னமும் சுத்தனுமா. நீ குடுத்த காசுக்கு... எறங்கிப் போ'' எந்த வித அசைவும் இல்லாததால் உடம்பை புரட்டினான் கண்டக்டர். விசையுடன் தள்ளினதில் தாமோதரன் உடம்பு சீட்டிலிருந்து நழுவி கீழே விழும் சப்தம் கேட்டது. ஒரு வித முனகல் வந்தது. ''எத்தனை தரம் உலகைச் சுத்துவே...எந்திரிடா...சாலா.'' கண்டக்டரும், டிரைவரும் உடம்பின் இருபக்கங்ளைப் பிடித்துக் கொண்டனர். படிகளில் நின்ற கூட்டம் சரேலெனப் பின் வாங்கி இறங்கியது. வழி விட்டது. கூட்டத்தை விலக்கிவிட்டு நிழற்குடையின் கீழ் அவன் உடம்பைக் கிடத்தினார்கள். ''இதே பொழப்பா போச்சு. சாலா.'' டிரைவர் தாமோதரனை ஒரு உதை விட்டார். மெல்லிய முனகல் அவனிடமிருந்து வந்தது.

உடம்பு ஒரு வித பரபரப்பு அசைவுடன் வலப்பக்கம் சாய்ந்தது.

வெங்கிட்டய்யா நின்ற இடத்திலேயே இருந்தார். பரபரத்துக் கொண்டிருந்த கூட்டம் தாமோதரன் கிடக்க இடைவெளியை ஏற்படுத்தி இருந்தது. அவனின் உடம்பைப் பார்த்தபடி இருந்தனர். பேசுவதற்கு எதுவும் இல்லை என்பது போல நின்றிருந்தனர். போய் எப்படியாவது எழுப்பி கொண்டு போய்விடலாமா? கொண்டு போய் எங்கேபோட? வீட்டிற்குள் லட்சுமி அனுமதிக்க மாட்டாள். திண்ணையில் கிடத்தலாம். அல்லது தெருவில் எங்காவது. அதற்கு இங்கேயே கிடந்துவிட்டுப் போகட்டும் என்று இருந்தது வெங்கிட்டய்யாவிற்கு.

மெல்ல ஈக்கள் மொய்க்க ஆரம்பித்தன. உடம்பொன்று கிடப்பதை மறந்தவர்கள் போல நெருங்கி நிற்க ஆரம்பித்தார்கள். கோணலாய் கோடு இழுத்ததைப் போல உடம்பும் கிடந்தது.

தினமும் இப்படி குடித்தோ, பசியால் செத்தோ, உடல் விறைத்தபடியோ சில உடம்புகளை அவர் பார்க்க நேரிடு கிறது. உடம்புகள் தென்படாத தினம் ஏறக்குறைய இல்லை. அவர் கண்களில் படுவதற்கென்றே அமைந்து விடுவது போல அவர் நினைப்பதுண்டு. அனுதாபமாய் உச் கொட்டி பார்வையைத் திருப்பி நடந்து போவது மட்டும் நடந்திருக்கிறது. தாமோதரன் தெரிந்தவன் என்பதால் கொஞ்ச நேரம் நின்று எதையாவது யோசிக்க வைத்திருக் கிறது. தெரிந்தவர், தினமும் எங்காவது தென்படும் முகம் என்றல் கூட இந்த அக்கறை வந்திருக்காதுதான். அவன் பேசும் பாஷைதான் மிகவும் தனக்கு நெருக்கமாக இருந் திருக்கிறது. இந்த நெருக்கமே அவரை தூரத்தள்ளி நின்றா வது பார்க்கச் செய்கிறது என நினைத்தார்.

சற்று நெருங்கிச் சென்றவர் நின்றவாக்கிலேயே தாமோதரனின் முகத்தைப் பார்க்கத் தொடங்கினார்.

# (11)

''எதுக்கு இவ்வளவு லேட்டா வர்ரே''

கதவைத் திறந்தபடியே வெங்கிட்டய்யா கேட்டார்.

''வந்து என்ன பண்றதாம்''

''வீட்ல இருக்கறது''

''எப்பவும் வீட்லதா இருக்கறமே'' மகேந்திரனின் தள்ளாட்டம் அவருக்கு அதிர்ச்சி தந்தது.

''உன்னை நீயே பாத்துக்கறது நல்லது''

''பாத்துக்கறேன்...சமெச்சு வெச்சுட்டுதானே வெளியில போனன்.''

''எங்காச்சும் போயிட்டு வரக் கூடாதா ?''

''போலாம் வர்லாம். எல்லாத்துக்கும் நேரம் இருக்கு. நான் சமெச்சு வெச்சுட்டுதானே போனன். அதுக்கு மேல என்னைக் கேட்கறது அநியாயம்.''

லட்சுமி போர்வையிலிருந்து முகத்தை விலக்கியபடிப் பார்த்தாள். பிணத்தைப் போர்வை போட்டு மூடிவிட்டது போல உடம்பைச் சுற்றிக் கொள்வாள். அத்தியாவாசியங்களுக்கு மட்டுமே போர்வை மெல்ல விலகி மீண்டும் மூடிக் கொள்ளும்.

''நான் எல்லாம் பண்ணிட்டுதானே வெளிய போறன்...''

''எல்லாத்துக்கும் ஒரு ஒழுங்கு இருக்குது...''

''ஒழுங்கை வெச்சுட்டு பெரிசா என்ன சாதிச்சுட்டம்...''

''இந்தத் தள்ளாட்டம் எனக்குச் சுத்தமாப் புடிக்கலே. நீயே உன்னெக் காப்பாத்திக்க...''

லட்சுமி சரேலென எழுந்து உட்கார்ந்தாள்.

''என்னாச்சுடா... தள்ளாடறயே. வேண்டாடா...''

''எல்லாம் பண்ணிட்டுதானே நான் வெளிய போறன்''

''இதையேத்தா இன்னிக்கு ராத்திரி முழுசும் சொல்லப் போறபோலஇருக்கு'' வெங்கிட்டய்யா சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். தலையைக் கவிழ்த்தினார். புறங்கையால் முகத்தைத் திரும்பத் திரும்பத் துடைத்துக் கொண்டார். லட்சுமி அவரையேப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னைச் சாவு கொண்டு போக மாட்டீங்குதே... கொண்டு போக மாட்டீங்குதே'' மகேந்திரனின் குரல்

இவ்வளவு கிழத்தன்மை ஆகிவிட்டதா என்று ஆச்சர்யமாக இருந்தது வெங்கிட்டய்யாவிற்கு. அல்லது அழுகையில் தோய்ந்து இப்படி வருகிறதா? இல்லையெனில் எதற்கு இவ்வளவு மாற்றம்? கூர்ந்து கவனித்தபோது திண்ணைப் பக்கமிருந்து அது தாமோதரனின் குரலாக இருப்பது தெரிந்தது.

## (12)

பள்ளத்தாக்கில் உருட்டி விட்டுப் பாதியில் எங்கோ பிடித்துக் கொண்டு உருண்டு வந்த சரிவை பார்ப்பது போல இருந்தது வெங்கிட்டய்யாவிற்கு. மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தது. சுற்றிலும் செடிகளும், மரங்களும், வானமும் இருப்பதை மனம் துய்த்துணர்ந்து கொண்டிருக்கையில் உருட்டி விட்ட மாதிரிதான் இருந்தது. அவர் யாரிடமும் கடுமையாகப் பேசியதில்லை, ஆனால் அவரை வந்து சேரும் வார்த்தைகள் எப்போதும் அவரைச் சங்கடப் படுத்துபவையாக இருப்பது இயல்பாகவே இருந்தது ஞாபகம் வந்தது. தலையில் அடித்துக் கொண்டு சுவற்றைப் பார்த்தார்.

எதிர்த்த வீட்டில் இருப்பவருடன் இயல்பாக இருக்க முடியாது என்ற எண்ணம்தான் அவரை நிலைகுலையச் செய்தது. எப்போதும் கதவு ஜன்னல்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. எதிர்த்த வீட்டு முகம் தென்பட்டாலே முகம் சுருங்கிவிடும். மனம் பேதலித்த மாதிரிக் குலுங்கும். கண்ணில் படாமல் இருப்பது நல்லது என்று

தோன்றும். இனி கைகுலுக்கிக் கொண்டு சமாதானம் செய்து கொள்ள முடியாது என்றுதான் அவருக்குத் தோன்றியது.

எதையும் கண்டு கொள்ளாமல் வீதியின் ஓரத்தில் அவரின் கால்கள் நடக்குமளவிற்குஇடம்இருந்தால் போதும். நிம்மதியுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்து விடுவார் வெங்கட் டய்யா. மழை காலத்தில் நாய் பரப்பிப்போன எச்சில் மாதிரிதான் வீதி இருந்தது. அதுவும் மெயின்ரோட்டி லிருந்து கிளைவிடும் இடம் குப்பைத் தொட்டியாகவே மாறி யாயிற்று. உள் தெருவில் நடக்க கால்கள் ஏதோ ஒட்டிக் கொள்வது போலத்தான் பிசுபிசுக்கும். யாராவது வீட்டு முன் நீரைத் தேக்கி விட்டால் போதும் ஊரின் மொத்தக் கொசுக்களும் அங்கேயே வந்து விட்டது போலிருக்கும்.

கொஞ்ச நாட்களாகவே சீனிவாஸ் வீட்டு முன்பு இப்படி நீர் தேங்கியிருப்பது வழக்கமாகிவிட்டது. அவனின் வாட கைக்கு விடப்பட்ட போர்ஷன்கள் அவனின் சாம்ராஜ்யத்தை விரிவாக்கிக் கொண்டே இருந்தன. ஒரு வாடகைப் போர் ஷனின் சமையலறை தண்ணீர்தான் அப்படி தேங்கி சிரமப் படுத்திக் கொண்டிருந்தது. கொசுக்களும் பரவ ஆரம்பித்தி ருந்தது.

சீனிவாஸிற்குப் பருத்த மீசை. தனியார் கம்பனி யொன்றில் வாட்ச்மேனாக வேலைபார்த்து வந்தான். அவனைப்பார்க்கிறபோதெல்லாம் அவன் சல்யூட் அடித்தபடி நிற்கும் காட்சிதான் எப்போதும் மனதிற்கு வரும் அவருக்கு. நடத்தையிலும், பேச்சிலும் அவன் அந்தத் தனியார் கம்பனியின் முக்யஸ்தர் மாதிரித் தட்டுப்படுவான். அந்த வீதியின் தாதா மாதிரி சப்தமிட்டுக் கொண்டிருப்பான்.

சீனிவாஸ் சாய்வு நாற்காலியை உள் தெருவின் மத்தி யில் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனின் கால் நீட்டிய பக்கம் இருந்த இடைவெளியில்தான் மற்றவர்

கள் போக வேண்டும். உடம்பைக் குறுக்கிக் கொண்டு சென்று கொண்டிருப்பதாக வெங்கட்டய்யாவிற்குப்பட்டது.

வெங்கட்டய்யா அவனை நெருங்கினபோது அவன் தீர்க்கமாய் அவரை அளந்து விடுவது போல பார்த்தான். அவன் இப்படி உட்கார்ந்து கொண்டிருப்பதை பற்றி ஒரு வார்த்தை சொல்லலாமா என நினைத்தார். ஆனால் சின்னச் சாக்கடைக்கு முன் இது பெரிய விஷயமல்ல என்பது ஞாபகம் வந்தது. அதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி வைக்கலாம் என்றும்பட்டது.

''என்ன சீனிவாஸ்...இந்த தண்ணி இப்படி தேங்கி நிக்குதே''

''உம்...''

''வேறே ஏதாச்சும் ஏற்பாடு பண்றது''

''பண்ணனும்''

''கொசு வர ஆரம்பிச்சிருச்சு''

''முனிசிபாலிட்டிக்குச் சொல்றன். வந்து மருந்து அடிச்சிட்டுப் போவான்''

''அதில்லெ. தண்ணி தங்காமெ பாத்துட்டா கொசு வராது''

''அதுவும் எனக்குத் தெரியும்''

''ரீசண்டா கொசுத் தொல்லை ரொம்பவும் அதிகமாப் போச்சு.''

''தெரியும்னு சொல்றனே.''

''ஏதாச்சு பண்ணு...''

இதுவரை அவரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தவன் வானத்தைப் பார்க்க ஆரம்பித்தான்.

''பண்ணத் தெரியும். சொந்த வூட்டுக்காரங்களுக்கு இல்லாத அக்கறை வேற ஆளுகளுக்குத் தேவையில்ல...''

''வீதி நாறுதுன்னு சொன்னன்.''

''நாறுதுன்னா ஒம் மூக்கைப் பொத்தி வெச்சுக்கோ போ.''

''என்ன இப்பிடித்தா பேசறதா,''

''ஆமா இப்பிடித்தா பேசுவன். நான் வூட்டுக்காரன். நீ பக்கத்து வூட்லே வாடகைக்கு இருக்கறவன். உனக்கு இதெல்லாம் சொல்ல அதிகாரம் கெடையாது.''

''இதெல்லெ எதுக்கு அதிகாரம். சின்ன விஷயம்தா''

''நான் இங்க பொறந்து வளர்ந்தவன். எங்கிருந்தோ வந்து வாடகைக்குக் குடியிருக்கற உனக்கு இந்த அதிகாரமெல்லா வேண்டியது இல்லே.''

இதற்கு மேல் அவனிடம் பேச வேண்டாம் என்றுபட்டது. தீர்க்கமாய் இந்த எண்ணம் அவனுள் இருக்கையில் அவனின் வார்த்தைகள் இதைச் சார்ந்தே இருக்கும். இனி பேசிக் கொண்டிருப்பது இந்த வார்த்தைகளையேத் திரும்பக் கேட்டுக் கொண்டிருப்பது போல என நினைத்தார்.

அவன் சொன்னது எங்கெங்கோ தன்னைத் தள்ளி விட்டிருப்பதாய் உணர்ந்தார். எங்கிருந்தோ வந்தவன்—என்றால்...வரக்கூடாதா? இன்னொரு பிரதேசத்திலிருந்து இங்கு வந்து முப்பது வருஷங்களாய் வாழ்க்கை நடத்திக் கொண்டிடிருப்பதை இப்போது தவறு என்று சொல்கிறானா இவன். அப்படி சொல்ல அவன் சமீபமாகத்தான் கற்றுக் கொண்டிருக்கிறனா? இப்படி கற்பித்தலும், அதன் எதிர்வினையையும் சமீப வருடங்களாய் எதிர் கொள்ள வேண்டி இருப்பதை அவரும் உணர்ந்திருந்தார். இப்படி அவன் சொன்னபின் அவனுடன் பேசும் எந்த வார்த்தையும் அவனின் எண்ணத்தை தீவிரமாக்கிவிடும் என்ற பயம்தான் மெல்ல அவருள் ஊர்ந்து கொண்டிருந்தது.

# (13)

மகேந்திரன் ஒருவகை பயத்தை கண்களில் மிளிர வைத்துக் கொண்டிருக்கிற மாதிரிப்பட்டது. முகம் நன்கு வியர்த்திருந்தது. கண்களை உருட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். வெங்கிட்டய்யா அவனையேப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்னாச்சுடா...என்னாச்சு'' திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார்? லட்சுமி உடம்பிலிருந்து போர்வையை ரொம்ப நாளைக்கப்புறம் உதறிவிட்டவள் போல் இருந்தாள். அவளின் கண்கள் சிவந்திருந்தன. எதை எதையோ சொல்ல முயன்று முடியாதவள் போல் இருந்தாள்.

''என்னாச்சு உனக்கு...தினமும் இதே ரோதனையாப் போச்சு. ரொம்ப லேட்டா வர்றே...தடுமாறுறே...நிலை கொள்ளாம தவிக்கிறே...''

''நான் என்ன பண்ணா உங்களுக்கென்ன...''

''நீ என்ன பண்றன்னு கேக்கதா நாங்க இருக்கம்...''

''கேளுங்க...கேட்டு கேட்டு குட்டிச்சுவர் பண்ணுங்க. கேள்வி கேட்கறதுக்குன்னுதா உங்கத் தலை முறையே இருக்குது. பதில் சொல்லாம இருக்கறதுக்குதா நாங்க இருக்கம்.''

''நான் கேக்றெதுக்கு பதில் சொல்லாட்டி பரவாயில்லே, நீ என்ன சொல்றங்கறதேத்தா சொல்லே...''

''நான் என்ன சொல்ல...''

அவனின் வார்த்தைகள் குழறிக் கொண்டிருந்தாலும் சரியாகவே சொல்வதாகப்பட்டது. நிதானத்துடன் வார்த்தைகளை சொல்ல முயன்று கொண்டிருந்தான்.

லட்சுமியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். கட்டிலின் ஓரத்தில் கால்களுக்குள் முகத்தைப் பொத்தி வைத்துக் கொண்டாள். நீண்ட பரவின புல்வெளியின் ஓரத்தில் ஒரு உருவத்தை வரைந்த மாதிரி குறுகி இருந்தாள்.

''ஏதாச்சும் சொல்லு மகேந்திரா...தினமும் இதே மாதிரி உனக்காகக் காத்திருந்து, நீ வர்லன்னு நாலு தெருக்கள்ல சுத்திட்டு, உம் பிரண்ட்ஸ் வீட்லே கேட்டு விசாரிச்சு எல்லாம் அலுத்துப் போச்சு. தினமும் போலீஸ்லே கம்ப்ளெயிண்ட் பண்ணாததுதா பாக்கி...''

''அதுவும் பண்ணிடு.''

''திடீர்னு என்னாச்சு...அதுதா...''

''வேலையில்லாதவன், வெட்டி சோத்துக்கு உக்காந்திட்டிருக்கறவன், வீட்லே சமையல் வேலை பண்றவன்... என்ன சொல்ல இருக்கு.,.''

கண்களில் நீர் வழிய உரத்த குரலில் அழ ஆரம்பித்தான். உதடுகள் கோணின. முகத்து சிவப்பு ஒரு வகையில் கோரமாகிவிட்டது. வெங்கட்டய்யாவிற்கு அவனை எப்படி சமாதானப் படுத்துவது என்பது தெரியவில்லை. எழுந்து அவன் அருகில் சென்றவர் அவனைத் தொட நினைத்தார். அவனின் அழுகை அவரைச் சற்று தள்ளியே நிற்கச் செய்தது. சட்டென கட்டிலில் விழுந்தான். அதன் மிருதுத் தன்மையை உடம்போடு உறிஞ்சிக் கொள்பவன் போல இறுக்கிக்கொண்டு கிடந்தான். கட்டில் அசைந்து நின்றது. அவனின் அழுகை மெத்தையை ஈரமாக்கி விடும் போலிருந்தது. மெத்தை துணி அவனின் கைவிரல்களில் கசங்கிக் கொண்டிருந்தது. முதுகின் குலுங்கல் தொடர்ந்து கொண்டிருந்தது.

''எனக்கு சாவு வர்லே...இன்னம் சாவு வர்ல...''

வெங்கிட்டய்யா அவனை நெருங்கித் தொட்டார். மகேந்திரன் இதற்கெனக் காத்திருந்தவன் போல எழுந்து அவரைத் தழுவிக் கொண்டான். அவரின் சற்று உப்பின வயிற்றில் அவனின் முகம் அழுகையுடன் தோய்ந்து கொண்டிருந்தது. அவனின் தலையைப் பிடித்துக் கொண்டிருந்தார் அவர்.

இப்படி அவனைத் தொட்டு எவ்வளவு நாட்கள் இருக்கும். பல வருடங்கள் அவனின் கைகளைக்குலுக்கி பாராட்டு சொல்வதற்கான சந்தர்ப்பங்களே இல்லாமல் போய்விட்டது. அவனின் தலையைக் கோதி முகம் பார்க்க நேரமில்லாமல் போய் விட்டது. பேசும் போது கூட முழுமையாக முகம் பார்த்து பல வருடங்களாகி விட்டன இரண்டு பேருக்கும். இடைவெளி என்பது விரிந்து கொண்டே இருப்பதாக அவர் நினைத்ததுண்டு. இந்த அழுகை அவரைத் தொடச் செய்தது. தொடுகையின் மூலம் அவனைச் சொஸ்தப்படுத்தி இருக்கலாம். அவனை இந்த நிலைக்குக் கொண்டுபோக விட்டிருக்கத் தேவையில்லை. ஆனாலும் ரொம்பவும் தாமதமாகிவிடவில்லை என்பது ஞாபகம் வந்தது. அவன் அழுது ஓயட்டும் என்று காத்திருந்தவர் போல இருந்தார்.

சட்டென விழிப்பு வந்தபோது அம்மாவின் கட்டிலில் கிடப்பதை உணர்ந்தான் மகேந்திரன். மெத்தைத் தாறுமாறய் இருந்தது. சமையலறைப்பக்கமிருந்து பாத்திரங்கள் அசையும் சப்தம் வந்தது. திக்கென்றது. நேரம் தெரியாமல் தூங்கிப் போய்விட்டோம் என்பதை மட்டும் நினைத்துக் கொண்டான்.

லட்சுமி பாத்திரங்களைக் கழுவி, ஓரத்தில் கிடத்தியிருந்தாள். ஸ்டவ் மீது குக்கர் வைக்கப்பட்டிருந்தது. அவனைப் பார்த்து மெல்லப் புன்னகைத்தாள். ''நீ போய் தூங்கு''. அவன் சமையலறை ஈரம் உடம்பு முழுக்க பரவும்

வரை நிற்கத் தீர்மானித்தவன் போல் நின்றிருந்தான். ஏனோ சந்தோஷமாக உணர்ந்தான். புதிய உற்சாகம் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் நிறைத்துக் கொண்டிருப் பது போல இருந்தது. குக்கர் விடும் நீராவியின் லயத்தை ரசித்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான்.

# (14)

அவர்களின் கைகளில் கோர்க்கப்பட்ட அந்தத் தாள்கள் இருந்தன. மகேந்திரன் தாள்களைப் படபடவென விசிறி விட்டு முகர்ந்து பார்த்தான். புதிய தாளின் மணம் இன்னும் கொஞ்சம் மிச்சமிருந்தது. எழுத்துக்கள் நழுவி கடைசிப் பக்கத்திற்குச் சென்று முடிந்து விடுவது போலிருந்தது. வெங்கிட்டய்யா பக்கமிருந்த நாற்காலியில் தாள்களை வைத்து விட்டு 'பானை' எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். சாறு வாயின் ஓரங்களில் ததும்புமளவுக்குக் குதப்பினார். தாள்களைக் கையிலெடுத்தார்.

''இது எத்தனையாவது தடவையான ஒத்திகை. நூத்தி யொம்பது, ஆயிரத்திப்பத்து, இருக்கும். பேசினதையே பேசிட்டு இருக்கம். இன்னம் பத்தாயிரம் தடவை பேசினா லும் இதே தா பேசுவம்.''

தாள்களைத் திருப்பிப் பார்த்து விட்டு நாற்காலியில் வைக்கிறார். இன்னுமொரு 'பானை' எடுத்து வாயில் போட்டுக் கொள்கிறார்.

''ஜாடியிலெ வெக்கறதுக்காகத்தா பூக்கள் இருக்குது. ஆனா நமக்கு கெடைக்கமாட்டீங்குது. ஜாடி எப்பவும்

காலியா இருந்தா நல்லாத்தான் இருக்கும். காலியா இருக்கற ஜாடியை இங்க வெக்க வேண்டியதில்லெ. அது வைக்கறதுக்கு மேஜையோ, நாற்காலியோ தேவையில்லை. வீட்டின் மூலையிலெ எங்காச்சும் வெக்கலாம்'' மகேந்திரன் தாள்களைத் திருப்புகிறான்.

''எனக்குள்ள என்னன்னமோ சப்தங்கள். கடல் இரைச்சல், பறவைகளோட கத்தல், டிரெயின் சப்தம். அதுவும் டிராம். அதெ நான் பாத்தது கூட இல்லெ. ஆனா அது என் மேலே ஏறி தடக்தடக்குன்னு ஓடுது, வுழுது. சுவர் கோழிக போற சப்தம் மாதிரி ச்ச்ச்ச்ன்னு டிராம் சப்தம் கேட்டுகிட்டே இருக்குது...''

''ஒரு சிலை மாதிரி. கிளியோபாட்ரா மாதிரின்னும் சொல்லலாம். ரெண்டு பேர்த்துக்கும் இடைப்பட்ட ஒரு பெண் உருவம். அது எதையோ வாயிலெ வெச்சு உறிஞ்சி கிட்டிருக்கு. விஷமா பறவையோட முகமா...ஏதோவொன்று அதிலெ அமிழ்ந்து போயி கெடக்கறா. அந்த மொகத்திலெ ஒருவகையான சொரூபம். அழகு. ஆனா ஆளை முழுங்கற மாதிரி வெறித்தனம் கூட...''

தாள்களைப் படபடவென பிரித்தபடி பேசுகிறார் வெங்கிட்டய்யா. அவரின் கைகளில் தாள்கள் பிரிந்து இறகுகளினால் வருடி விட்டுக் கொள்வது போல தடவிக் கொள்கின்றன. அவை அவருக்கு ஒரு வகையான ஸ்பரிச உணர்வைக் கொடுத்தது போலத் தெரிகிறது.

''இந்த மாடிபடிக ஒழுங்காத்தா இருக்கு. அழகாவும் சிவப்புத் துணி பரவி இருக்குது. இது மேல நடக்கறது சுலபந்தா. நடக்கவும் முடியும். ஆனால் அழுக்காகு மேன்னு இருக்கு. இப்படி ஒவ்வொருபடியா அழுக்காகாமெ நடக்கறதுக்கு பதிலா ஒரே தாவுலே மாடிக்குப் போயிட்டா நல்லா இருக்கும். அப்பிடி போயிடறதுதா எவ்வளவு நல்லா இருக்கும். இதைப் பல தரம் நெனச்சுப் பாத்துட்டேன். கற்பனையிலெ சொகமாத்தா இருக்கு. மாடியிலெ இருந்து

கீழே வர்ரதும் அப்பிடித்தா. சுலபமா முடிஞ்சிருக்கு. ஒரு நொடியிலெ பல தரம் இதைச் சுலபமா செஞ்சிருக்கேன்''

தாள்களைத் தூரத்து மூலைக்கு வீசினான். அவை சிதறிக் கொண்டு பிரிந்தன. தாள்களின் குவியலின் மேல் உட்கார்வது போல உட்கார்ந்து கொண்டான்.

''இந்தத்தரம் இதையெல்லாம் பாக்காமெ சொல்லிட்டனுன்னு நெனைக்கறேன். ரொம்பவும் சரியாத்தா இருக்கும்.''

வெங்கிட்டய்யாவின் வாயில் புகைந்து கொண்டிருந்தது சிகரெட். சாம்பல் மெல்ல பூத்து சட்டென நழுவியது. ஒரு வினாடிக்கொருதரம் சாம்பல் நழுவக் காத்திருப்பது போல சிகரெட்டின் நுனியில் நிற்க ஆரம்பித்தது. தாள் ஒன்றை உருவி சாம்பலைத் தட்டினார். மண் புழு விட்டுச் செல்லும் தடயங்கள் போல அவை இருந்தன.

''இதெல்லாம் வேண்டியதில்லை.'' மகேந்திரன் தாள் களைப் பரப்பி விசிறினான். அவை வானிலிருந்து இறங்கும் நட்சத்திரங்களின் கூட்டம் போல் தாறுமாறாய் விழ ஆரம் பித்தன. ''இதெல்லாம் இல்லாமெ கூட பேசமுடியும். பெரிசா வேற என்ன பேசிடப் போறம். திரும்பத் திரும்ப இதையேத்தா பேசறம். திரும்பத் திரும்ப பேசற அலுப்பு இன்னமும் வர்லே அப்பிடி அலுப்புத் தட்ட ஆரம்பிச்சிடுச் சுன்னா பேசவே முடியாமெ போயிரும். வெறும் வாய், உதடு அசைவை மட்டும் காட்டிகிட்டே இருக்கலாம். இப்ப இது போதும். அப்புறமா பேசறதுக்கு ஏதாச்சும் இருந்ததுன்னா பேசுவம். பேசலின்னா பேசறது பழைய விஷயம்ன்னுநெனச் சுக்குவம்...''

தன் தலையில் இருந்த கிரீடத்தைக் கழற்றி வைத்தார் வெங்கிட்டய்யா. அதிலிருந்து ஒரு ஜரிகையை உருவினார். ஒற்றை ஜரிகை இழையைத் தலையில் மீண்டும் சுற்றிக் கொண்டார். நரை மயிர்களின் மத்தியில் அது மினு மினுத்தது.

''எனக்கு இன்னமும் இதைப் பார்த்துப் படிக்கக் கூட நெறைய மேட்டர் இருக்கிறது. தொடரும் போட்டுத்தா ரொம்ப நாளா பேசிக்கிட்டிருக்கம். இன்னும் முடிஞ்ச பாடில்லே. தோ...இந்தப் பக்கத்திலெ எழுதியிருக்கிறது பிரமிப்பா இருக்கு. இதென்ன புல்லாங்குழலா, வெறகுக் கட்டையா? நல்ல இசையும் வருது.அப்புறம் இதென்ன புகை மாதிரி. இந்தப் புகை மனிஷங்களெ மயக்கி விழ வெச்சிடுமா இல்லெ மூச்சுத் திணற வெக்குமா. ஊதஊத புகையா வந்திட்டிருக்கு. எப்படி இருந்தாலும் ஊதறதுக்குன்னு ஒண்ணு இருக்குதே பெரிய விஷயம். புகை வந்தாக் கூட ஊதலாம். வந்து முடிஞ்சப்புறம் ஜரிகை எழை ஜிலுஜிலுப்பு மாதிரி ஏதாச்சும் மனசுக்குள்ள ஊர்றமாதிரி வராமலாப் போகும். ஊதுவம் ..''

லட்சுமி தலையணைக்கடியில் இருந்த தாள்களை எடுத்தாள். திரும்பத் திரும்பப் புரட்டினாள். மீண்டும் தலையணைக்கடியில் வைத்து விட்டு போர்வையால் முகத்தை மூடிக்கொண்டாள்.

மகேந்திரன் அந்தத் தாள்களை உருவினான். பரபரவென்று பிரித்தான். ''இதிலெ ஏதாச்சும் சுவாரஸ்யமா இருக்கும். சுவாரஸ்யந்தா முக்கியம். என்ன இருக்கும் கறது பெரிசில்லெ. சுவாரஸ்யம் முக்கியம். சுவாரஸ்யம் இல்லாமெ மனுஷ வாழ்க்கையைக் கடத்திட முடியுமா?

சுவகரஸ்யத்துக்கு ஏதாச்சம் சேத்துக்கடனும். எதையெ சேர்த்து கிட்டாலும் சரி. கொஞ்சம் சுவாரஸ்யமாச்சும் கெடச்சா செரி.''

தாள்கள் பரபரவென பிரிந்து சிதறின. கட்டிலின் மேல் ஒவ்வொன்றாய் விசிறினான். தாள் விமானம் செய்து பறக்கவிட்டான். ஒன்று லட்சுமியின் தலைமயிரில் போய் குத்திட்டு நின்றது.

# (15)

காற்று அவனைத் தழுவி நகர்ந்தது. உடம்பு சற்று ஜில் விட்டது. குளிர்ந்த பூக்களின் மத்தியில் கிடத்தி விட்டுப் போனது போல இருந்தது. இந்த நடு இரவில் யார் யாரையோ தழுவிக் கொள்ள வேண்டும் போல்பட்டது. தழுவிக்கொள்ள கைகள் நீண்டிருந்தாலும் எதிரில் தென் படுபவர் எவரும் இல்லாமல் போய் விட்டது குறித்து வருத்தமாகவே இருந்தது மகேந்திரனுக்கு.

வீதியில் ஜனங்களின் நடமாட்டம் குறைந்து போயிற்று. ஓடிக் கொண்டிருந்த வாகனங்களின் இரைச்சல் நகரையே குலுக்கிவிடும் போலிருந்தது. பல மிருகங்களின் உறுமலை ஒன்று சேர்த்த மாதிரி இரைச்சல். இந்த இரைச்சல் மட்டும் இல்லாமல் இருந்தால் நகரம் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் தினசரி இயக்கத்துடன் இந்த இரைச்சல் இயைந்து விட்டது போல இருந்தது. யார்யாரையோ காறித்துப்பிக் கொண்டிருக்கிறார்கள். தலைமுறைக் கோபங்களை வாய் வார்த்தைகள் வழியே திட்டித் தீர்த்தும் மிச்சம் இருப்பது போல, மிச்சம் இருப்பதை இப்படித்தான் காறித்துப்பிக் கழிக்கவேண்டும் என்பது போல எல்லாம் நடந்து கொண்டிருப்பதாக மகேந்திரனுக்குத் தோன்றியது.

அவனின் எதிரில் வந்த வாகனம் பீச்சிய வெளிச்சம் கண்களைக் கூச வைத்தது. அவன் கண்களை மறைத்துக் கொண்டு கை விரல்களின் வழியே அந்த வாகனத்தைப் பார்த்தான். அவனை விழுங்கக் காத்திருக்கும் ஒரு பல சாலியான மிருகம் போல அந்த வாகனம் அவன் முன்

நின்றிருந்தது. அவன் தடுமாற்றத்துடன்தான் நடந்து கொண்டிருந்ததாய் பட்டது. அல்லது வாகனம் தடுமாறி அவன் முன் வந்து நின்று விட்டதுபோல இருந்தது.

இந்தத் தடுமாற்றம் அவனை நிலைகுலையச் செய்தது. ஓவென்று கத்தினான். வாகனத்திலிருந்து இறங்கின இருவர் அவனை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு பக்கமிருந்த ஹோட்டல் பக்கம் நடந்தனர். தன்னை ஏதாவது வகையில் அவர்கள் அடையாளம் கண்டிருக்கக் கூடும். குறைந்த பட்சம் தடுமாறுபவனாக. இந்தத் தடுமாற்றம் அவர்களைச் சற்று பயம் கொள்ள வைத்திருக்க வேண்டும். அப்பாவும். அம்மாவும் அவனின் இந்தத் தடுமாற்றத்தைப் பார்த்து நடுங்குவதை நினைத்தான். ஓவென மீண்டும் நட்சத்திரங்களுடன் மினுங்கிக் கொண்டிருந்த வானத்தைப் பார்த்துக் கத்தினான். அவர்களை இப்படி நடுங்கவைக்கவேண்டும் என்பது அவனின் நெடுநாள் கனவு போல இருந்து கொண்டிருந்தது. ஒருவகையில் அவர்களின் நடுக்கம் அவனுக்குச் சந்தோஷமே அளித்தது அவனுக்குத் தெரிந்தது. ஆனால் அம்மாவின் கண்களில் தெரியும் ஒருவகையான மிரட்சியை நினைத்துப் பார்க்கிறபோது அவர்களை எந்த வகையிலும் பயமுறுத்தி விடக் கூடாது என்றுதான் எண்ணியிருந்தான்.

வாகனம் நெருங்கி அவன் மேல் மோதிவிடும் அபாயம் தான் அவனை அலற வைத்தது. தானும் இப்படியொரு அபாய வாகனம் ஆகிவிட்டோம் என்றிருந்தது. அலறக் கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுதான் போகும். அலற அலற அவர்கள் விலகிக் கொண்டுதான் போவார்கள். இந்தத் தடுமாற்றத்தையும், அலறலையும் விட்டு விட்டால் அவனை இன்னும் நேசிக்கக் கூடியவர்கள் சிலர் இருக்கக் கூடும் என நினைத்தான்.

தடுமாற்றத்துடன் இல்லாமல்இருந்த பத்துநாட்களுக்கு முன், பஸ் அப்படி அவனை நெருக்கி இருக்க வேண்டாம் என்றுபட்டது. மெகப்பூப் காலேஜ் பக்கத்தில் அவன் நடந்து கொண்டிருந்தான். வளைவில் வந்து கொண்டிருந்த பஸ் ஊர்ந்து திரும்புவதற்குள் பான் பஜார் முக்கைக் கடந்து விடலாம் என்றுதான் அவன் நினைத்தான். கடப் பதற்குள் அவனின் கால்களைத் தட்டின. ஒரு கல்தடுமாறச் செய்து விட்டது. அவன் விழுந்தான். இன்று ஏதோ விப ரீதமாய் நடக்கப் போகிறது என்பது கூட அவனின் மூளை யில் தட்டியது. பஸ்ஸின் சக்கரங்களுக்கடியில் தன் உடம்பு கிடக்கப் போகிறது என நினைத்தான். பஸ் ஒரு அடி இடைவெளி விட்டு நின்றது. பஸ் டிரைவர் சமயோசிதமாய் பிரேக் போட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இடை வெளி சாத்தியமாயிராது. அவன் எழுந்து கால்களை நீட்டி, எதுவும் விபரீதமாய் நடந்து விடவில்லை என்பதை யூகித் துக் கொண்டான். பஸ் டிரைவர் வசவாய் எதுவும் உதிர்க் காதது ஆச்சர்யமே தந்தது. அவன் ஒதுங்கி நின்று கொள்ள பஸ் நகர்ந்தது. டிரைவர் ஏதாவதும் திட்டி இருந்தால் அவமானமாகப் போயிருக்கும் என நினைத்தான்.

அதற்கப்புறம் இரண்டு நாள் கழித்து அது நடந்தது. வெங்கட்ராமனைப் பார்ப்பதற்காக அவன் கோகுலே நகர் ஸ்டாப்பில் இறங்க வேண்டியிருந்தது. பஸ் வேகம் குறை கிறது என்று நினைத்து மகேந்திரன் இறங்க முயல சட் டென அதன் வேகம் அதிகரித்துவிட்டது. விழப் போகிற றோம் என்பது மட்டும் அவனுக்கு நிச்சயமாகிவிட்டது. அவன் குப்புற விழுந்தான். ஒரு அடிக்கு அவன் உடம்பு நகர்ந்து சென்றமாதிரியும் பட்டது. ஏதாவது எலும்பு நொறுங்கி இருக்கும் என நினைத்தான். மெல்ல எழுந்து கொள்ள முடிந்தது ஏனோ ஆச்சர்யமான விஷயமாகவே த் தோன்றியது.

சட்டையில் ரோட்டு மண் அப்பிக்கிடந்தது. கைக்கடி காரம் எதுவுமாகாமல் அப்படியே இருந்தது. முட்டிகளில்

நல்ல வலி இருந்தது. வெங்கட்ராமன் வீட்டு வரைக்கும் இந்த வலியுடனேயே போய்விடுவது கஷ்டமானக் காரிய மாகத்தான் அவனுக்குத் தோன்றியது. கரும்பு ஜூஸ் வண்டிக்காரப் பையன் அவனை நோக்கி ஓடி வந்தான். 'என்னாச்சு' என்றான். வலியை மீறி ஒன்றுமில்லை என்றான். கரும்பு ஜூஸ் வண்டி கண்ணில் பட்டது. கோடை போய் குளிர் காலம் கூட ஆரம்பித்தாயிற்று. இன்னும் இந்த வண்டி உபயோகத்தில் இருப்பதையே நினைத்துப் பார்த்தான். முட்டியின் மேல் பகுதி பாண்ட் துணி கிழிந்து போயிருந்தது. ஒரு விதமான நசிவுடன், மண் கலந்து தென்பட்டது. நடந்து போய்விட முடியும் என்று தோன்ற வில்லை. மீண்டும் பஸ் ஸ்டாப் தேடிப் போய்விட வேண்டிய யதுதான். நொண்டிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான்.

வெகு சமீபமாய் இந்த இரு சிறு விபத்துகள். பஸ்ஸோ, ஏதாவது வாகனமோதான் தனக்குச் சாவைக் கொண்டு வரப் போகிறது என்பதை பின்னர் தீர்மானமாய் நம்பு வதாய் தனக்குள் அவன் சொல்லிக் கொண்டான். ஆனாலும் இவ்வளவு சீக்கிரமாய் சாக வேண்டாமே. ஒரு வேலை கிடைக்கட்டும். கொஞ்ச நாளாவது பிரம்மச்சரிய வாழ்க் கையில் நிம்மதியாகக் கழிப்போமே. கல்யாணத் தகுதிகள் பின் தானாக வந்து சேர்ந்துவிடும். கல்யாணம் என்று ஒன்று கூட வேண்டாம். ஆனால் அதற்குப் பின் இதற்கெல் லாம் தயாராகி விடுவோமே. பிறகு ஏதாவது வாகனத்தின் நெருக்கத்தைச் சுலபமாக ஏற்றுக் கொள்ளலாம். அது வரைக் கும் கொஞ்ச நாள் இந்தத் தடுமாற்றத்துடனே வாழ்க்கைக் கழிந்து விட வேண்டும் என்பது அவனின் மனதிலிருந்தது.

மீண்டும் வாகனம் ஒளியைப் பாய்ச்சியது. புறப்படு வதற்கான ஆயத்தம் என்று தெரிந்தது. தான் அசைவற்று இறுக்கமாகக் காலத்தை மறந்து விட்டிருப்பது தெரிந்தது. காலம் கட்டப்பட்டு எங்காவது மரணப் படுக்கையில் கிடக்கும். எல்லோருக்கும் காலம் நகர்ந்து எதை எதையோ

திகழ்த்திக காட்டிப் போகிறது. தன்னை மட்டும் அப்படியே விட்டுவிட்டிருக்கிறது. ஒரு அடி கூட நகர விடவில்லை. வாகனத்தின் வெளிச்ச ஒளிக்குள் அமிழ்ந்து விட வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

# (16)

துணி மூட்டைகளைக் கட்டி கட்டிலின் ஓரங்களில் வைத்தது போல அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். எண்ணெய் பிசுக்காய் அழுக்கை முகங்களில் தேய்த்துவிட்டுக் கொண்ட மாதிரி முகங்கள் இருண்டிருந்தன. மேஜையின் மீது இந்த அலாரம் டைம்பீஸின் சப்தம் துல்லியமாய் கேட்டுக் கொண்டிருந்தது. பரபரவென இந்த முட்கள் ஓடிக் கொண்டிருந்தால் சுவாரஸ்யமாக இருக்கும் என நினைத்தார் வெங்கிட்டய்யா.

''மகேந்திரனை இங்க வெச்சிட்டிருந்து பிரயோஜன மில்லெ. எங்காச்சம் அனுப்பிடணும்ன்னு பாக்கறேன்''

''எனக்குந்தா. ஒரு வேலை கெடச்சு எங்காச்சும் போனா நல்லா இருக்கும். நாமளாத் தொரத்திர மாதிரி இருக்கும் இப்ப...''

''எதுமே அவனுக்கு அமஞ்சு வர மாட்டீங்குது. தினம் தினம் வேதனையா இருக்கு. நடுராத்திரிக்கு வர்றான். அவனோட தள்ளாட்டந்தா பயமா இருக்கு. புதுசா இருக்கு அதெல்லா. இது எங்க கொண்டுபோயி வுடுமோ தெரியலே. எப்படியோ சீரழிஞ்சு போறதுக்கு முன்னயெ அவனெ எடம் மாத்திர்ரணும்.''

''எங்க கொண்டு போயி வுடுவீங்க..''

''எந்தம்பி பாஸ்கரன் கிட்டதா அனுப்பலாமுன்னு இருக்கன்''

லட்சுமி எதுவும் சொல்லாமல் சுவற்றோடு தன்னைச் சேர்த்திருந்தாள். சுலபமாக ஒரு குழந்தையிடம் வர்ண பென்சிலைக் கொடுத்து அவளின் வெளிக் கோட்டுருவத்தை வரையச் சொன்னால் வரைந்து விடுமளவிற்கு சுவரோடு ஒட்டி இருந்தாள். வெங்கிட்டய்யா அவளின் உருவம் வரையப்பட்டால் பூதகரமாகத்தான் இருக்கும் என நினைத்தார். முகத்தில் ஒருவகை இறுக்கம். தளர்ந்திருந்த உடம்பின் பரவல். கால்களை அகல விரித்து உட்கார்கையில் அவள் பூதம் போன்றே தெரிவதாய் நினைத்தார். சில சமயம் அறை முழுவதற்குமாக அவள் உடம்பு பரவி அவரைப் பயமுறுத்துவதாய் அவர் நினைத்துப் பார்த்ததுண்டு.

''அவ்வளவு தூரம் கொண்டு போய் வுடணுமா...''

வெங்கிட்டய்யாவிற்கு ஊருக்குப் போகிற சந்தர்ப்பங்கள் இல்லாமற் போயிற்று. அப்பா, அம்மா இறந்தபின் முழுமையாய் உறவு இல்லாமற் போய்விட்டது போல ஆகிவிட்டது. கயிறு அறுந்த பட்டம்போல் ஒருவகையானத் தத்தளிப்பை எப்போதும் உணர்ந்திருக்கிறார். இருக்கிற சொத்தைப் பிரித்துக் கொண்டு வந்த பின் கடிதங்களும் ரொம்பவும் குறைந்து போயிற்று. சொத்தை விற்றுப் பணம் வாங்க சென்ற போது பாஸ்கரன் சொன்னான்: ''சொத்தெ விக்கறதெப் பத்தி அடிக்கடி கடிதாசிலே எழுதுவே. இனி எழுதறதுக்கு விஷயமே இல்லாதமாதிரிதா. யாராச்சும் சாவைப் பத்திதா இனி கடிதம் எழுத வேண்டியிருக்கும். ஆயிரத்து ஐநூறு மைல். உறவுன்னு மனசு நெனச்சாலும் எந்த ஒட்டுதலும் இல்லாமத்தா. நெனச்சுப் பாத்தா வருத்தமாத்தா இருக்கு.''

லட்சுமிக்கு எந்தப் பிடிப்பும் ஏற்படாதுதான் அவர் இங்கேயே நிரந்தரமாயி விட்டதற்கு முக்கியமான காரணம் என்பது வெங்கிட்டையாவிற்கு மனதில் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கும்.

''அவ்வளவு தூரம் கொண்டு போயி வுடணுமா.''

''வுட்டுத்தா ஆகணும். அவனெ இந்த எடத்திலிருந்து பிரிக்கணும். முந்நூறு ரூபா சம்பளம்னாலும் எங்காச்சும் போடணும். ஊர்ல நெறைய பனியன் கம்பனிக ஆயிப் போச்சு. வேலைக்கு ஆள் வேணும்ன்னு சாதாரணமா போர்டைப் பாக்கலாம். பாஸ்கரன் எங்காச்சும் பனியன் கம்பனியிலெ வேலை வாங்கிக் குடுத்கிடுவான். இது நிரந்தரமான்னு கேள்வி மனசிலெ நின்னுட்டே இருக்கு. ஆனா அவனெ எங்காச்சும் அனுப்பியே தீரணும். அதுதா அவனுக்கே நல்லது.

''ஒரு கடிதாசி எழுதிப் போடுங்க...''

''போட்டா வான்னுதா எழுதுவான். இவ்வளவு தூரம் எதுக்கு அனுப்பறாங்கன்னு ஒரு நிமிஷம் பயப்படுவான். ஆனா ஏதோ பிரச்னை இருக்குதுன்னு புரிஞ்சிக்குவான். டிகிரி படிச்சவனுக்கு அங்க வேலை கெடைக்கறது பெரிசில்லே.''

''இருக்கற ஒரே பையனை வுட்டுட்டு இருக்க வேண்டியிருக்கும்.''

''வேற என்ன பண்றது. அவன் சீரழியறதெ பாத்துட்டு இருக்க முடியுமா? அவனுக்கு எந்தெந்த மாதிரி சினேகம் இப்ப இருக்குன்னே தெரியலே, சட்டுன்னு ஒடுங்கி வீட்டோட இருந்தவனுக்கு என்னாச்சுனனு புரியலே. ஆனா ரொம்பவும் மோசமாயிட்டு இருக்குங்கறது மட்டும் தெரியும். அனுப்பிடறது நல்லது.''

''தமிழ் ஏதோ பேசுவாங்கறது சரி. எழுத படிக்க வராதே. சிரமமா இருக்காதே.''

''நிரந்தரம்ன்னு நெனக்காதே. தற்சமயத்து இருக்கட்டுமே.''

தண்ணீர் பிரச்சினை சம்பந்தமாய் தொடர்ந்த பந்த், பத்திரிகைச் செய்திகள் வெங்கிட்டய்யாவைப் பயமுறுத்திக் கொண்டுதான் இருந்தன. இந்தச் சமயத்தில் அனுப்புவதா என்ற கேள்வியும் பிரமாண்டமானதாய் அவர் முன் நின்றது. அந்தப் பிரச்னை இதுவரை பெரிதாய் சிரமப் படுத்தவில்லை. சின்ன ஆறாத புண் போல அது இருந்து கொண்டே இருக்கட்டும். அதற்காய் எல்லாவற்றையும் தள்ளி வைத்து விட முடியாது. இது நிரந்தரமல்லவே என்பது மட்டுமே ஆறுதலாக இருந்தது அவருக்கு.

மகேந்திரனுக்கு ஊர் பிடித்துப் போய்விடவேண்டும். பாஸ்கரனும் நிச்சயம் உதவுவான். அதிர்ஷ்டம் அவன் மேல் கவிழ்ந்து அவனை வெகு உயரத்திற்குக் கொண்டு சொல்ல வேண்டும். அப்படி மட்டும் நிறைவேறினால் திரும்ப ஊர் போய்விடலாம். வேர்களைத் தழுவிக் கொள்வது எவ்வளவு குளுமையானது. உறவுகள் எப்படியெல்லாம் ஆகிப்போனார்கள் என்று தேடுவது கூட சுவாரஸ்யமானதுதான். இந்த சுவாரஸ்யங்களுக்காகவே ஊர் போக வேண்டும். இங்கு தக்க வைத்திருக்கும் கான்கிரீட் நாற்றுகளைப் பிடுங்கிக் கொண்டு போய் அங்கு நிஜமான வேர்களை நடவேண்டும். இதற்கு லட்சுமி உடன்படுவாளா. அவளின் துர்குணம் இந்த விஷயத்தில் மட்டும் விசுவரூபிக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும். ஊருக்குப் போகிறக்கனவு இப்படி பல வருஷங்களுக்கப்புறம் தன்னுள் கிளைவிடுவது ஆச்சர்யமாகவே இருந்தது. இந்தக் கனவின் துளி மட்டும் எங்காவது படர்ந்தால் கூட நன்றாக இருக்கும் என நினைத்தார். ''இதுவரைக்கும் படர்ந்திருக்கிறதைப் பெயர்த்துக் கொண்டு போவது சிரமம்தான் என்றாலும், நம் மண்ணில் புதுசாய் முளை விடுவது சந்தோஷம்தானே''

# (17)

தலைகளைக் குச்சிகளில் கோர்த்து பரப்பினமாதிரி ஜனங்கள் நின்றிருந்தனர். விதவிதமானத் தலைகள். வெட்டி ஒழுங்காக்கப்பட்டத் தலைகள். வாசனை திரவியங் களுடன் மணம் வீசும் தலைகள். விதவிதமானச் சிந்தனை களைத் தேக்கினபடி. ரயில்வே ஸ்டேஷனில் எப்போதும் இப்படித்தான் பரபரத்துக்கொண்டிருக்கிற மாதிரிப்பட்டது வெங்கிட்டய்யாவிற்கு. இன்றையக் கூட்டம் அபரிமிதமான தாகத் தான் இருந்தது. நேற்றைக்கு அந்த ரயில் ரத்து செய்யப்பட்டிருந்தது. இரண்டுநாள் கூட்டம் பெருகிவிட் டது போல ஜனங்கள் நெருக்கினபடி இருந்தார்கள்.

மகேந்திரன் சோகத்தை முகத்திலிருந்து வழித்தெடுத்து தூர வீசிவிட்ட மாதிரி பொலிவுடன் இருந்தான். சேவ் செய்யப்பட்டு முகத்தை நன்கு வழித்திருந்தான். தலைமயி ரின் ஒதுக்கல் முகத்திற்கு அழகு சேர்த்தது. புதிய இடங் களை ரசித்துப் பார்ப்பதற்காகப் போகிற உற்சாகத்துடன் இருந்தான். இந்த சூழலை உடம்பின் வேண்டாத சதையை அறுத்தெடுத்துத் தூர போட்டுவிட்ட மாதிரி உத் றிப் போவதாய் வெங்கிட்டய்யாவும் நினைத்தார்.

நேற்றைய அந்த ரயில் ரத்தாகியிருந்தது. தண்ணீர் பிரச்னை எங்கோ சிறு பொறியைக் கிளப்பிப் போக ரயி லொன்றை தடம் புரள வைத்திருந்தார்கள். அடுத்த வாரத் தில் நடக்கவிருக்கும் பந்த்தின் முன்ஏற்பாடு போல அது நிகழ்ந்திருந்தது. இனி பிரச்னை இங்கிருந்து இப்படியே

தொடர்ந்து பெரிய பொறியாகலாம் என்பது போலவும் இருந்தது.

இந்த ஜனங்களெல்லாம் இந்தத் தண்ணீர் பிரச்னைக்குப் பயந்து கொண்டு ஓடுவதாய் தோன்றியது வெங்கிட்டய்யாவிற்கு. தினமும் இத்தனை ஜனங்கள் இப்படி ஓடினால், ஒரு வகையில் பிரச்னை தீர்ந்துவிடும்தான். இவர்களுடன் கலந்து இப்படி இருப்பதுதான் பலரை உறுத்திக் கொண்டிருக்கிற விஷயம். நான் வேறு நீ வேறு என்று பிரித்தெறிந்து விட்டால் இந்தப்பிரச்னைகூட வந்திருக்காதுதான். ஆனால் ஒட்டிப் பிறந்துவிட்டபின்பு பிரிந்து ரயிலேறி போய் விடுவது கஷ்டம்தான் என்றிருந்தது வெங்கிட்டய்யாவிற்கு.

ஜனங்கள் பரபரத்தும், அவர்களுக்குள்ளும் இருந்தார்கள். டி. வி. பெட்டிகளின் விரைசலான பிம்பங்கள் பலரை நகர விடாமல் நிற்கச் செய்தது. பிம்பங்கள் ஏதேதோ வேடிக்கை காட்டின. மறைந்துபோய் கண்ணாமூச்சி காட்டின. மரங்களிலும், புல்வெளிகளிலும் புரண்டன. அழுது கண்ணீர் வெள்ளத்தில் எல்லோரையும் கரை சேர்த்தன. வெள்ளத்தில் புரண்டு கரை சேர்ந்த சந்தோஷத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கண்கள் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. மகேந்திரனும் பிம்பங்களுக்குள் அமிழ்ந்து கிடந்தான். அவற்றின் அசைவில் தன்னை மறந்தவன் போல பார்த்துக் கொண்டிருந்தாள்.

லட்சுமியும், வெங்கிட்டய்யாவும் அவனின் கண்கள் அசைவையும், முகத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் எல்லா வக்கிரங்களையும் களைந்து விட்ட சின்னப் பையனாகிவிட்டான் போலிருந்தது. அவனின் குதூகலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நாட்களை எண்ணிப் பார்ப்பவர்கள் போல நின்றிருந்தனர். சீக்கிரம் குதூ

கலம் அவர்களையும் ஒட்டிக் கொள்ளும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வந்துவிட்டது போல இருந்தது.

''இந்த எடத்தை வுட்டு கொஞ்சநாள் எங்காச்சும் போயி வெளிய இருந்தா போதும். அவனுக்கும் ஒரு மாறுதலா இருக்கும். சம்பாரிக்காட்டியும் போகுது. நாமளாச்சும் அவன் செலவுக்குப் பணம் அனுப்பலாம். ஆனால் அவன் மனசு மாறணும். நடவடிக்கை மாறணும். அது போதும்.''

''மாறும்ன்னு தோணுது. வேலைக்குங்கறது பெரிசா இல்லின்னாலும் போன்னு சொன்னதும் கிளம்பிட்டான். அவனுக்கும் இதெல்லாம் அலுப்பாத்தா இருந்திருக்கும். இல்லாட்டி எல்லாத்தையும் சட்டுன்னு வுட்டுட்டு போறன்னு கௌம்புவானா. எப்பிடியும் பாஸ்கரன் பனியன் கம்பனியிலெ ஒரு வேலை வாங்கிக் குடுத்துருவான். பனியன் கம்பனி லேபர்ஸ் அதிகம் படிக்காதவங்க. அவங்ககிட்ட மொதல்ல பழகறது சிரமம். பழக ஆரம்பிச்சா சொந்த உறவுக மாதிரி ஆயிருவாங்க. எப்பிடியும் பழகிக்குவான். பேசற கொச்சையானத் தமிழும் சீக்கிரம் மாறிடும்...''

''தண்ணிப் பிரச்னை வேற.''

''அது அது பாட்டுக்கு இருந்திட்டு போகுது. அங்க சம்பந்தப்பட்டிருந்தாலும், பெரிசா பாதிப்பு இதுவரைக்கும் இருந்ததில்லை இருக்காது.''

வெங்கட்டய்யா அப்படி திடமாய்த் சொன்னார். ஆனால் சில தினங்களுக்குள் பிரச்னை விசுவரூபம் எடுத்து அவர் நினைத்துப் பார்காதபடி ஏதேதோ நிகழ்ந்து விட்டது.

# (18)

போஜராஜன் எப்படியாவது பணம் புரட்டி விட வேண்டும் என்பதைத் திரும்பத் திரும்ப வெங்கட்டய்யா விடம் சொல்லியிருந்தான். அவனின் மகனுக்கு வேலை வாங்க லஞ்சம் கொடுக்க பணம் தேவைப்பட்டது. ஜி.பி.எப், சிட் என்று எல்லாம் எடுத்தது போக, இன்னும் பத்தாயிர மாவது தேவை என்றுபட்டது. யாராவது ஆட்கள் இருந் தால் சொல்லும்படி வெங்கிட்டய்யாவிடம் சொல்லியிருந் தான். ஆளுங்கட்சியினரைப் பிடித்திருப்பதாகவும், அவர்கள் மூலம் பணம் கொடுத்துவிட்டால் போதும் வேலை கிடை த்த மாதிரிதான் என்றும் சொல்லியிருந்தான்.

மகேந்திரனுக்கும் இப்படியொரு வேலை வாய்ப்பு அமைந்தால் எப்படி இருக்கும். எப்படியாவது பணம் புரட்டி வாங்கி விடலாம். தலையை வைத்தாவது வாங்கி விட வேண்டும் என்றெல்லாம் நினைத்திருந்தார் வெங் கிட்டய்யா. இண்டர்வியூக்கள் வந்தே ரொம்பவும் நாளாகி விட்டன. இண்டர்வியூவே இல்லாதபோது எங்கு முட்டி மோதி என்ன செய்ய என்பதும் முக்யமாகப்பட்டது. போஜராஜன் மேல் வெங்கிட்டய்யாவிற்குச் சற்றுப் பொறா மையாகத்தான் இருந்தது.

கந்தசாமியைப் பார்த்து பண உதவி கேட்கலாம் என்று தான் சொல்லியிருந்தார். ''ஆனா வட்டி ஆளைக் கொன்னுபோடுமே''

''மூணு வட்டியோ நாலு வட்டியோ வாங்கித்தானே ஆகணும். ஒரு வருஷ சம்பளத்தெ லஞ்சமா குடுக்கறதெத் தவிர வழியொன்னும் தெரியலே. வட்டிக்கு வாங்கி யாச்சும் குடுத்தர்லாமுன்னு இருக்கேன்.''

''காசு குடுத்தும் முடியலேன்னு வெச்சுக்க அப்ப...''

''நம்ம தலவிதின்னு இருக்கவேண்டியதுதா. ரெண்டு நாள் அழுதுட்டு முடிச்சிட வேண்டியதுதா.''

''எப்பிடியும் கந்தசாமி குடுப்பான்னுதா நம்பிக்கை யிருக்கு...'' கந்தசாமியை அலுவலகத்தில் பார்க்க முடிய வில்லை. அவனின் செக்ஷனுக்குப் போன் செய்த போது அவன் அகப்படவில்லை. அலுவலகத்திற்குப் பெயரளவில் வந்துவிட்டு தன் சொந்தக் காரியங்களுக்கென்று சுத்திக் கொண்டிருப்பான். அப்படித்தான் அகப்படாமல் இருக் கிறான் என்று நினைத்தார் வெங்கிட்டய்யா. அவனின் செக்ஷனுக்குப் போனபோது அடிபட்டு சிகிச்சையில் வீட்டில் இருப்பதாய் சொன்னார்கள். அடுத்த நாள் காலை நேரத்தில் போஜராஜனைக் கூட்டிக் கொண்டு கந்த சாமி வீட்டிற்குச் சென்றார்.

கந்தசாமியின் வீடு வசீகரமாக இருந்தது. முகப்பில் வளர்ந்திருந்த மரங்கள் பக்கத்துப் போர்ஷன்களுக்கும் பரவி இருந்தது. சொல்லி வெட்டி விட்ட மாதிரி இருந்தன. நாயின் குரைப்பு பயமளித்தது. அவனின் வசதியை மாடி களாய் உயர்ந்து நின்றக்கட்டிடம் காட்டியது.

கேட்டைத் திறந்தவன் 'யார்' என்றான். அலுவலகப் பெயரைச் சொன்னார் வெங்கிட்டய்யா.

''என்ன விஷயம்...''

''பணம் சம்பந்தமா''

''ஒடம்பு சொகமில்லாமெ படுத்திருக்கார். யாரையும் பாக்கறதில்லெ''

''எம் பேரைச் சொல்லுங்க''

''இல்லே யாரா இருந்தாலும் பார்க்கறதில்லே''

போஜராஜனைப் பார்த்தார். அவர் முகம் இருண்டிருந்தது. தன் மகனின் வேலையை யாரோ பறித்துக் கொண்டு போய்விட்ட மாதிரி இருந்தது அவருக்கு. என்ன செய்வது என்றார். ப்ச் ப்ச் என்றபடி வருத்தத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். இவர்களின் பேச்சு தமிழில் இருப்பதைக் கேட்டைத் திறந்தவன் கவனித்துக் கொண்டிருந்தான்.

''கண்டிப்பா பாக்கணுமா''என்றான் அவனே தமிழில்.

''ஆமாங்க. அவசரந்தான்னு சொல்லுங்க''

அவன் கேட்டைத் திறந்து விட்டான். அவர்கள் நுழைகையில் வெங்கிட்டய்யா சொன்னார்:

''நாம தமிழ் பேசனது உபகாரமாஇருக்குப் பாரேன்''. சற்று சந்தோஷமாகவே இருந்தது அவருக்கு.

கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான் கந்தசாமி. வீடியோவில் ஏதோ படம் ஓடிக்கொண்டிருந்தது. படத்தின் ஒலி அளவு குறைக்கப்பட்டது. அவனின் தலையில் கட்டு போடப்பட்டிருந்தது. இடது கையின் நடுமுனையிலும்.

''என்ன ஏக்சிடெண்டா''

''ஆயிடுச்சு...''

''ஆபிஸ்லே வர்ரதில்லைன்று சொன்னாங்க. ஆனா இது மாதிரி எதுவும் தகவல் இல்லே''

''யாருக்கும் சொல்லலே. விரும்பலே. நம்ம கெட்ட நேரம். துரதிஷ்டம்''

''ஏக்சிடண்ட்தான''

''இல்லே''

சப்தமின்றி ஓடிக் கொண்டிருந்த வீடியோபடத்தை பார்க்க ஆரம்பித்தான் கந்தசாமி. சட்டென அவன் முகம்

இயல்பிலிருந்து மாறிவிட்டது தெரிந்தது. தன்னைத் தவிர்ப்பதற்காக பார்வையைத் திருப்பி விட்டான் என்று நினைக்க தோன்றவில்லை வெங்கிட்டய்யாவிற்கு.

''இவர் .போஜராஜன். சிநேகிதர். எங்க ஊர்காரர்'' அறிமுகப்படுத்தினார். கந்தசாமி வீடியோவிலிருந்து முகத்தைத் திருப்பினான்.

''பண விஷயமாவா''

''ஆமாங்க. எம்பையனுக்கு ஒரு வேலை கெடைக்கறப்பலே இருக்கு. அதுக்குதா''

காலை நேரத்து நடையை காபி ஓரளவு அலுப்பிலிருந்து தவிர்த்துவிட்ட மாதிரி இருந்தது. கந்தசாமி சற்று இயல்பாகிவிட்டான் என்றதும், வெங்கிட்டயாவிற்கு ஆறுதலாக இருந்தது.

''பண்றேன். புரோநோட்டு. ஸ்டாம்புன்னு எழுதி வைக்கறேன். ரெண்டு நாள் கழிச்சு வாங்க வெங்கிட்டய்யா சொல்றார்கறது மொதல் காரணம். நீங்களும்ஜாக்கிரதையா வட்டியோட மாசாமாசம் தந்துடுங்க.''

கிளம்பும்போது இந்தக் கட்டுகள் எதற்காக என்று மறுபடியும் கேட்டுவிட நினைத்தார் வெங்கிட்டய்யா. சொல்ல மறுக்கிற போது கேட்பது சங்கடமாகவேபட்டது. அவனின் முகத்து இரண்டு மூன்று நாளின் அடர்ந்த மயிர்களைப்பையேத் தருவதாக இருந்தது. ஸ்கூட்டர் மீது விரைவாய் சென்று கொண்டிருக்கிற பிம்பம்தான் கந்தசாமியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் மனசில் வரும். இப்போது கட்டிலின் மூலையில் அவன் இருப்பது ஸ்கூட்டர் அவனை எங்கேயோ தூக்கியெறிந்து போய்விட்ட மாதிரி இருந்தது.

''யாராச்சும் கேட்டா ஏக்சிடண்டாகி படுத்திருக்கார்ன்னு சொல்லட்டுமா''

மெல்லிசாய் புன்னகை வந்தது கந்தசாமி முகத்திலிருந்து.

''மூணு நாளாத்தா ஆபிஸ் போகலே. இப்பிடி ரெண்டு மூணுநாள் ஆபிஸ் போகாமெ இருக்கறது சகஜம். இல்லின்னா யாராச்சும் வந்திருவாங்க. இதெ வெளியிலெ சொல்ல வேண்டாமுன்னுதா நெனச்சிருந்தேன். ஆனா சொல்லாமலே இருந்திர முடியற விஷயமில்லெ. யாராச்சுக்கும் தெரிஞ்சிடப் போற விஷயந்தா.''

சுவாரஸ்யமாக எதையோ சொல்லப் போகிறான் கந்தசாமி என்று நினைத்தார் வெங்கிட்டய்யா. கதை கேட்கிற சுவாரஸ்யத்தை வரவழைத்துக் கொண்டவர் மாதிரி ஆவலுடன் அவனைப் பார்த்தார். சுவற்றில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

''முந்தா நாள் பந்த் இருந்தது பாரு. அன்னிக்கு காலையிலெ வழக்கம்போல வசூலுக்குன்னு போயிட்டிருக்கேன். எலிபெண்ட் பிரிட்ஜ் பக்கம் நாலஞ்சு பேர் நின்னுகிட்டிருந்தாங்க. எல்லாரும் நம்மகிட்ட பணம் வாங்கறவங்கதா. என்னெ ஒரு மாதிரி பார்த்தானுக. வண்டி ஆஸ்பத்திரி முக்குக்கு போனப்போ விர்ர்னு ஏதோ சத்தம் வந்தது. திரும்பி பாக்கற மாதிரி வண்டியெத் திருப்புனா தலையைத் தொட்டுட்டு ஒரு பாட்டல் பறந்து வந்து வுழுகுது. பாதி ஒடஞ்ச பாட்டல். வண்டியெத் திருப்பாமெ இருந்திருந்தா செரியா பட்டிருக்கும். காது ஓரத்திலெ நல்ல காயம். வண்டியெத் திருப்பி ஆஸ்பத்திரிக்குள்ள போயிட்டன். திரும்பிப் பார்த்தா அந்த கும்பல் கலஞ்சி ஓடிட்டிருக்கு. நம்மகிட்ட பணம் வாங்கி தின்னவங்கதா. பணம் தடுக்க லேட் ஆனப்போ அவங்க சட்டையைப் புடுச்சிருக்கேன். இந்த பந்த் ஒரு சாதகமா போச்சு அவங்களுக்கு. பந்த்லே என்னென்னமோ நடக்குது. நம்ம மேலெ இருக்கற எரிச்சல் இப்பிடி மாறியிருக்கு. நாம ஜாக்கிரதையா இருக்க வேண்டியதுதா. நாம இந்த ஊர்

காரங்க இல்லே; வேற ஆட்கள்ன்னு ஒவ்வொரு விஷயத்திலியும் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு. அந்தபாட்டல் படாமெ இருந்திருந்தா, இன்னொரு நாள் முயற்சி பண்ணுவாங்க. இப்பவும் மறுபடியும் முயற்சி பண்ணமாட்டாங்கன்னு இல்லே...''

சட்டென தலையில் ஏதோவொருவகையான வலியை உணர்ந்தவன் போல கந்தசாமி தலையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அவன் முகம் இருளிலேயே அமிழ்ந்து விட்டதாகத் தோன்றியது. பிம்பங்கள் மாறிக் கொண்டிருந்த வீடியோவைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

''எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாத்தா இருக்கணும். அதுவும் இந்தத் தண்ணி பிரச்னை வந்தப்புறம் நம்மள யாரோன்னு பிரிச்சு காட்ட ஆரம்பிச்சிட்டாங்க. வெளியிலெ கூட தமிழ் பேசறதெ வுட்டுருங்க. லோக்கல் லேங்வேஸ்லே பேசிட்டு இருக்கறது நல்லது. இதுக்கு பயந்துட்டு ஊரை விட்டுப் போறதில்லே. போபோன்னு துரத்த ஆரம்பிச்சாங்கன்னா போகாமெ இருக்க முடியாது. உசிரெக் காப்பாத்திக்க வாச்சும் போய்த்தா ஆகணும்.''

வீதி பரபரத்துக் கொண்டுதான் இருந்தது. சட்டென மனிதமுகங்களில் ஏதேதோ வேறுபாடு தெரிவது போலிருந்தது. பந்த் அமைதியாகத்தான் நடைபெற்றது என்ற செய்தி இருந்தாலும், சின்ன சின்ன மோசமானச் செய்திகளும் தெரிந்திருந்தன. தூரம் இருப்பவர்களை அடிக்கையில் மனது காயப்படுவது, பக்கமிருப்பவர்களின் அழுகையை விட அதிகம் பாதிக்கவில்லை என நினைத்தார். ஆனால் கந்தசாமியின் தலைக்காயம் சற்று பயமளித்தது. வந்து சேராத செய்திகள் போல, குறிவைக்கப்பட்டு எங்கெங்கோ நடந்திருக்கலாம். மெல்ல வந்து சேரும். சற்று பயமளிப்பதாகவே இருந்தது வெங்கிட்டய்யாவிற்கு.

''நம்மாளுக நெலமை கொஞ்சம் மோசந்தா.''

''ஆமா. கேட்க கஷ்டமா இருக்கு...''

''வந்து பல வருஷங்களாச்சு. பசங்களையும் படிக்க வெச்சாச்சு. இங்கெயே அவங்க வேலை கெடைக்கணும்ன்னு இப்பிடி அலையறோம். ஆனா என்னமரியாதை நமக்குன்னு சட்டுன்னு பயம் வருது.''

''எனக்குந்தா வெங்கிட்டய்யா.''

''பயத்தெ மறச்சு வெச்சிட்டு பொழைக்கணும்.''

எலிபெண்ட் பிரிட்ஜ் எல்லாவற்றுக்கும் சாட்சியாக நின்றிருந்தது. பிரிட்ஜின் சுரங்கப்பாதையில் எப்போதும் விளக்கு இருக்காது. விளக்கு பொருத்துவது சிரமமான காரியம் இல்லை. ஆனால் விளக்கில்லாமல் இருக்கவே பழகிவிட்டது போல ஆகிவிட்டது. இருட்டாக இருந்தது. முன்னால் நடக்கும் போஜராஜனின் உருவம் இருட்டுத் துண்டாகவே இருந்தது.

# (19)

வெங்கிட்டையா அவர் முன் இருந்த தட்டை விசித்திரப் பிராணியைப் பார்ப்பது போல பார்த்தார். சாதம். தக்காளி கூட கலக்காமல் பருப்பு. தக்காளி, காய்கறிகளைப் பார்த்து நாலைந்து நாட்களாகிவிட்டன. தக்காளி சேர்க்காத எதுவும் அவருக்குப்பிடிக்காது. பழுத்த தக்காளிகள் பருப்புடன் கலந்து துவர்ப்புடன் இருப்பதாக அவருக்குப் பிடிக்கும். ஆனால் வேறு வழியில்லாமல் நாலைந்து நாட்களாய் இதைத்தான் சாப்பிட வேண்டி இருக்கிறது. மார்க்கெட்

பக்கம் போய் நாளாகிறது. லட்சுமி வழக்கம்போல் வீட்டு வேலைகள் செய்யும் நேரம் தவிர படுத்துக் கிடந்தாள். மார்கெட்டிற்குப் போய் வரும்படி அவளிடமும் சொல்ல முடியவில்லை அவரால்.

எங்காவது நடந்து கொண்டிருக்கும் அடிதடிகள் செய்திகளாய் பரவிக் கொண்டிருந்தது. செய்திகள் பத்திரி கைகளின் மூலைகளில் வந்து கொண்டிருந்தன. பல பத்திரிக்கைகளில் அச்செய்திகள் நிராகரிக்கப்பட்டிருந் தாலும், பத்திரிகைகளில் வெளிவந்தபின்பு எப்படியாவது நிருபணமானமாதிரி யாராவது அதைப் பற்றி விரிவாகவும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நகரம் இவ்வளவு மோச மான நிலைக்குப் போய்விட வேண்டாம் என்பதைத்தான் திரும்பத் திரும்ப வெங்கிட்டய்யா தனக்குள் சொல்லிக் கொண்டார்.

''என்ன சாப்புடாமெ உக்கார்ந்திருக்கிங்க.''

''சாப்புடணும்.''

''வெறுமனே வெந்ததைக் கொட்டிக்கறது இன்னும் எத்தனை நாளைக்குன்னு பாக்கறீங்களா.''

''உம்.''

''இன்னிக்கு பக்கத்துவூட்டு டெய்ஸி போறதா சொன்னா மார்கெட்டுக்கு. கொஞ்சம் தக்காளியாச்சும் வாங்கிட்டு வான்னு சொல்றன்.''

''வாங்கிட்டு வருவாங்களா.''

''அவங்களுக்கு என்ன? நம்ம ஜனங்க நடமாடற துன்னாதா கஷ்டம். நம்ம ஜனங்கன்னு சுலபமா கண்டு பிடிச்சர்றாங்க. சிரமம். டெய்ஸி கிட்ட சொல்லி விடறன்.''

ஒன்பது மணிவரை உடம்பைக் குறுக்கிக் கொண்டு வீட்டில் உட்கார்ந்திருப்பார் வெங்கிட்டய்யா. பஸ் பிடிக்கிற அவசரத்தை வீட்டில் காட்டுவார். ஆபீஸ் போய் உட்

கார்ந்தபின் நிலை கொள்ளாது. எப்போது வீட்டுக்குப் போவோம் என்றிருக்கும். மூன்று மணிக்கு மேல் நிலை கொள்ளாமல் தவிப்பார். தினமும் உடம்பைக்காரணம் சொல்லி ஆபிஸை விட்டு வெளியில் சென்றுவிட முடியாது. இருக்கும் நிலைமையில் தான் பயந்து கொண்டுதான் ஓடு வதாய் மற்றவர்களுக்குத் தெரியும். அந்தப்பயம் மற்றவர் களுக்குத் தன்னை முழுமையாய் காட்டி விடக்கூடாது என்றும் இருந்தது. இப்படியே பயத்துடன் எத்தனை நாட்களுக்குக் கழிப்பது என்ற கேள்வியும் விசுவரூபித்து நின்றது. இந்த நாலைந்து நாட்கள் தொடர்நாட்களாய் போய்விடக்கூடாதே என்ற பயமும் இருந்து கொண்டே இருந்தது,

காய்கறி மார்க்கெட்டுக்கு கூட போவதில்பயம். யாரோ ஒருவன் காய்கறியைப் பொறுக்கி எடுத்துக் கொள்வதில் வந்த சச்சரவில் உள்ளூர் பாஷையைத் தாறுமாறாய் பேசிக் கொண்டிருந்து விட்டு சட்டென இயல்பாய் தமிழுக்குச் சென்று விட, எதிராளி அவனைப் பார்த்து சிரித்து கேவலமாக மேலும் திட்டிவிட்டு அடித்திருக்கிறான். சின்னச் சின்ன விஷயங்களெல்லாம் பயமுறுத்திக் கொண்டேதான் இருந்தது அவரை. சுற்றிலும் நடக்கும் மனிதர்கள் தன்னை வேவு பார்த்தே நகர்வதாய் அவர் பல சமயங்களில் நினைத் தார்.

''என்னமோ புது ஆட்களோட நடமாட்டம் கொஞ்சம் அதிகமா இருக்குன்னு தோணுது''

''நீ எதை வெச்சுச் சொல்றே! பெரிய நகரத்திலெ புதுசா யார்யாரோ நடமாடறது சகஜம்ன்னு தெரியாதா.''

''பெரிய ஊர்ல சகஜம்தா. ஆனா ரெண்டு மூணு நாளா ஜன்னலே பார்க்கறேன். புது ஆளுக நடமாடுற மாதிரித்தா தோணுது. எங்கெங்கியோ ரகளை நடக்குதுங்கறது வேற பயத்தெக் கௌப்புது. இரக்கமில்லாம ரகளை பண்றவன் பக்கத்து வூட்டுக்காரனா, பழகுன ஆளா

இருக்க மாட்டான். புது ஆளுக, யாராச்சும் ஏவி விட்ட ஆளுகளாத்தா இருப்பான்.''

''உன்னோட பிரமையா கூட இருக்கலாம்.''

லட்சுமியிடம் அவர் அப்படி சொல்ல முடிந்தாலும், அந்தப்பயம் அவருள் வலுத்துக் கொண்டேதான் வந்தது. எதிர் வீட்டுக்காரன் பெரிதாய் சண்டை எதுவுமில்லாமல் போனமாதம் ''நான் இங்கேயே பெறந்து வளர்ந்தவன்'' என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

''சாப்பிடுங்க.''

சாதம் வாயினுள் இறங்கவில்லை. உப்பைச் சற்று சேர்த்துக் கொண்டார். சுவையென்று எதுவும் கூடி விட வில்லை. வேறு வழியில்லாமல் சாப்பிடத்தான் வேண்டும் என்றிருந்தது. விழுங்க விழுங்க ஒரு வகையானத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்வது போலிருந்தது. தொண்டையில் சோற்று உருண்டைகள் அப்படியே நின்று விஷத்தை விழுங்குவது போல செய்து விடும் போலிருந்தது. அரிசியைக் கொஞ்சம் அதிகமாய் வாங்கிப் போட்டுவிட வேண்டும். துவரம் பருப்பு கூட. ரகளையெல்லாம் பின்னால் பெரிதாகி விட்டால் சிரமம்தான். அரிசிகூட கிடைப்பது அரிதாகிவிடும். விநாயகர் சதுர்த்தியும், ரம்ஜா னும் வரும்போது நகரம் இப்படி களேபரப்படும். சில உயிர் களைப் பலி கொண்டு ஓய்ந்து விடும். இப்போது இன்னு மொரு காரணம் கிடைத்திருக்கிறது. புதுக் காரணம் களே பரம் நிரந்தரமாகி விடுவதற்கு அனுகூலங்களையும் கொண் டிருக்கிறது. எப்படித் தீரும் என்றும் தெரியவில்லை. நினைக்க அவருள் பதற்றம் இருந்து கொண்டே இருந்தது.

''போஜராஜன் ஊடு போலாமுன்னு சொன்னன்.''

''சொன்னிங்க செரி. ஊட்டை வுட்டு வெளியே போற துன்னா சித்ரவதையா இருக்குது...''

''சாவுக்குக் கூட போகாட்டி எப்பிடி...''

''போகனும்தா. ஆனா வெளிய போக ஒடம்பு நடுங்குது.''

போஜராஜன் அம்மா இறந்து போயிருந்தாள். அவளின் சாவைப் பற்றி வெங்கிட்டய்யா கேள்விப்பட்டதும் இந்த ரகளையால் அவளது சாவு நிகழ்ந்திருக்குமா என்பதைத் தான் முதலில் நினைத்தார். ஆனால் தள்ளாத வயது என்பது ஞாபகம் வந்தது. ஆறுதலாக இருந்தது. சாவு என்று சமீபமாய் கேள்விப்படுகிற போதெல்லாம், ரகளை யால் வந்த சாவு என்று தான் மனது நினைப்பது சங்கடமே தந்தது அவருக்கு. போஜராஜன் அவனின் மகன் வேலைக் கென்று கந்தசாமியிடம் வாங்கியிருந்த பணத்தில் கணிச மாய் இப்படி அம்மாவின் சாவுச் செலவிற்கென்றும் ஆகி யிருக்கும் என்பது மனதில் வந்தது. சாவிற்கு அவர் சென்று வந்தார். லட்சுமிக்கு உடம்பு சரியில்லை என்று ஆறுதலாய் ஒருவார்த்தை, வரமுடியாததற்கானக் காரணம் என்பதாய் சொல்லியிருந்தார். ஆனாலும் லட்சுமியுடன் ஒருதரம் போய் வருவது ஆறுதலாக இருக்கும் என நினைத்தார்.

''போலாம். எப்ப போலாமுன்னு நீயே சொல்லு''

''சாவுக்குக்கூட போகாமெ இருக்கறது நல்லது இல்லதா. ஆனா பயமாயிருக்கே''

தெய்வமணி சொன்ன விஷயம் அவளை மிகவும் சிரமப் படுத்திக் கொண்டிருந்தது. மஞ்சள் தாலி அணிந்த பெண் கள் என்றாலே இனம் கண்டு கொள்கிறார்களாம். தாலியை அறுத்தெறிந்த சம்பவங்களும் நடக்கத் தொடங்கிவிட்டன. வெளியில் செல்லும் போது தாலியைக் கழட்டி வைத்து விட்டுப் போவதோ, தாலியை மறைத்து வைத்துக் கொண்டு செல்வதோதான் நல்லதென்றும் தெய்வமணி சொல்லி யிருந்தாள். அவள் கூட கறுப்பு மணிகள் கோர்த்த சங்கிலியொன்றை வாங்கி இருந்தாள். அதை வெளியில் தெரியும்படி போட்டுக் கொண்டிருந்தாள். அதுதான் பாது

காப்பானது என்றும் சொல்லியிருந்தாள். மஞ்சள் தாலி பலரை உறுத்திக் கொண்டிருக்கிறது என்ற விஷயம் சாவு பற்றின செய்திகளைப் போன்று லட்சுமியை நிலை குலைய வைத்திருந்தது.

லட்சுமி கண்கள் கலங்கின. லேசாய் நீர் கன்னத்தில் வழிந்தது. வெங்கிட்டய்யாவிற்குச் சட்டென கீழே யாரோ தள்ளி விட்டது போலிருந்தது.

''என்னாச்சு...''

''தாலியைக் கழட்டி வெச்சிட்டுதா வெளிய போகணுமா...''

அவர் பேசாமல் கழுவி வைத்த சோற்றுத் தட்டைப் பார்த்தார்.

கலங்கியிருந்த நீர் தட்டின் அசைவால் அலைகளைப் பரப்பிக் கொண்டிருக்கிற மாதிரிபட்டது. தட்டின் ஓரம் ஒருவகை அழுக்கை வெளிக்காட்டிக் கொண்டிருப்பது போல இருந்தது.

''ரொம்பக் கொடுமையாத்தா ஆயிட்டிருக்கு...''

பற்களை நறநறவென்று கடித்துக் கொள்வது போல இருந்தது அவருக்கு. சுவற்றில் உதைத்து கூரை தலைமேல் விழுந்து நசுக்குகிறவரைக்கும் எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும். மூச்சுத்தவிப்பில் உயிர் வாழ ஆசைப்படுபவன் போல எல்லாவற்றையும் புதிதாய் பார்க்க வேண்டும். கசகசத்தது கண்கள் வெங்கிட்டய்யாவிற்கு.

''தாமோதரனுக்கு என்னாச்சு...மார்கெட்டுக்கு அனுப்பக் கூட ஆளில்லாமெ போச்சு''

''எங்க போனான்னு தெரியலே காணம்...''

சாவு வராதா என்றபடி வீதியில் அலையும் தாமோதரனைப் போலவே தானும் அலைந்து பார்க்க வேண்டும் போலிருந்தது.

# (20)

ராஜ்பவன் ரோடு பச்சையால் நிறைந்திருந்தது. வாகனங்கள் ஓடும் இடம் தவிர மற்றதெல்லாம் பசுமையின் நிழல் பட்டு குளுமையாகிவிட்டமாதிரி பட்டது கந்தசாமிக்கு. நீண்ட ரோட்டின் இருபுறங்களிலும் புல்வெளிகள். பச்சையை விரித்துக் கொண்டிருக்கிற மரங்கள். அந்த வழியாய் போகிற போதெல்லாம் வண்டியை நிறுத்திவிட்டு எங்காவது மரத்தடியில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டுச் செல்வான் கந்தசாமி.

இன்றைக்கும் எங்காவது உட்கார்ந்து இளைப்பாறி விட்டுச் செல்லலாம் என நினைத்தான். சாலிவாகனன் சிலை அருகிலான மரம் ஒற்றையாய் நின்றிருந்தது. பையைத் தலைக்கு வைத்துக் கொண்டு கொஞ்ச நேரம் சாய்ந்தால் நல்ல தூக்கம் வந்து விடும். யாராவது எழுப்பி ஏதாவது சொன்னால்தான் விழிப்பு வரும். அப்படிப் பல தரம் நடந்திருக்கிறது. வேகமாய் சென்று கொண்டிருந்த வாகனம் ஜில்லென்ற காற்றை ஊடுருவச் செய்தது. வாகனத்தின் வேகத்தைக் குறைத்து காற்றைப் பூரணமாய் உணரவேண்டும் போலிருந்தது.

காற்றின் குளுமை அவனின் உடம்பைத் தாக்கிக் கொண்டே இருந்தது. அவரை நிற்க வைத்திருந்தார்கள். யாரோ விறுவிறுவென்ள வைக்கோலைச் சுற்றினார்கள். வைக்கோல் பெரிதாகிக் கொண்டே வந்தது. தலையும் கால்களையும் மூழ்கடித்தனர். பெரிய வைக்கோல் போருக்குள் தன்னை நுழைத்து விட்ட மாதிரி இருந்தது. கைகளை

நீட்டியபோது வைக்கோலின் சொரசொரப்பை உணர முடிந்தது. பல கைகளை இணைக்கும் தூரத்திற்கு வைக்கோலின் அடர்த்தி இருக்கிற மாதிரிபட்டது, அடர்த்தி வளர்ந்து கொண்டே இருந்தது.

எங்கோ ஒரு முனையில் தீப்பற்றியிருந்தார்கள். மெல்ல கருகும் வாசம். தீயின் ஜுவாலை மெல்லப் பரவிக் கொண்டிருந்தது. காலின் பக்கம் பரவுகிறதா? தலைமயிர் கருகுகிறதா? எந்தத் தோள் சூடாய் உணர்கிறது. நாலாப்புறமும் ஜுவாலை எரிந்து கொண்டிருப்பதாய் பட்டது. சீக்கிரம், தன்னை மூழ்கடித்துவிடும். தீயினுள் கருகி எரியும் அனுபவம். வலியில்லாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் என நினைத்தார். தீச்ஜுவாலைகள் மூக்குக் குழாயினுள் சுவாசம் போல் பரவியது.

அலை வந்துஅடித்துச் சென்றது போல ஏதோவொன்று உடம்பை அதிரச் செய்தது. வாகனத்தை நிறுத்திவிட்டு இந்த அதிரலைச் சமன்படுத்திக் கொள்ள வேண்டும். சிவந்திருக்கும் முகத்தைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும். பச்சைப் புல்வெளிகளைக்கடந்து ரொம்பதூரம் வந்தாயிற்று. இப்போது தெரிவது பாறைகள். விதம்விதமானப் பாறைகள் பாறைகளை இப்படி குவித்துவிட்டு யார் போயிருப்பார்கள். அதன் குவியலில் வெவ்வேறு உருவங்கள் இருக்கும்படி யாரோ வித்தை செய்துவிட்டுப் போனது போல இருந்தது. இந்தப் பாறைகள் என்றைக்கும் பார்க்கச் சலிப்பு தந்ததே இல்லை. மிருதுவாய் குழந்தைகளின் தொடை போல மழையும், காற்றும் நீரும் பட்டு சொரசொரப்பில்லாமல். ஒரு புள்ளிதான் ஒவ்வொரு பாறைக்குமான இணைப்பு என்பதுபோல் நுனியில் தொட்டுக் கொண்டு நிற்பவை. பாறைகளின் இடுக்குகள் போதும் ஓடி ஒளிந்து கொள்ள. இந்த மனிதர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள. மெல்ல தடவி பாறைகளை ரசிக்கலாம். தூரமிருந்து பார்த்த பார்வையில் நளினம் மறைந்து போய் சொரசொரப்பை உடம்பு முழுக்க ஒட்டிக் கொள்ளலாம். வெவ்வேறு உருவங்

களைப் பாறைகளில் கண்டு மனதில் பதித்து வைத்துக் கொள்ளலாம். தூரப் பாறைகளைப் பார்த்தபடியே நின்றிருந்தான் கந்தசாமி.

தலைக்காயம் சற்றுவலிப்பது போலிருந்தது. இன்றைக் குத்தான் கட்டை அவிழ்ந்திருந்தான். வெறுமனே உட் கார்ந்து கொண்டிருப்பது மலையிலிருந்து உருட்டி விட்ட மாதிரி இம்சித்தது. வர்மாராவ்விடமிருந்து தொகை வர வேண்டியிருந்தது. எதற்கும் ஒருநடை போய்வந்து விடலாம் என்று கிளம்பினான். அங்கங்கே ஏதாவது நடந்து கொண்டு இருக்கிறது. வேண்டாம் என்றார்கள். பகல் நேரத்தில் இன்னொரு மனிதன் மேல் கைகளை நீட்டி இம்சிக்கிற அளவு இன்னும் மோசமாகவில்லை என்று ஆறுதல் சொல்லிக் கொண்டான். அப்படி சொல்லிக் கொள்வது ஒரு வகையில் ஆறுதலாக இருந்தது.

சர்ரென்று பூதரூபமாய் ஏதோ சுமந்து சென்றது. தூரப் பார்வைக்கு கூட தப்பி அந்தலாரி அவனைக் கடந்து சென்றது ஆச்சர்யம் தந்தது. லாரியின் பின்பக்கம் திறந்த அமைப்பாக இருந்தது. நிறையப் பேர் நின்றிருந்தார்கள். கைகளில் குச்சிகள் போன்று தென்பட்டது. லாரியின் வேகம் நினைக்கையில் பயம் தந்தது. சட்டென திசை மாறி தன்மேல் பாய்ந்திருந்தால் இப்படி நின்று பேசிக் கொண்டி ருக்க வேண்டியதில்லை என்று பட்டது.

வாகனத்தைக் கிளப்ப யத்தனித்துக் குனிந்தான். தடித்தக் கம்புகள் உயர்ந்து வருவது தெரிந்தது. கம்புகளின் பின்புலமாய் மனிதர்கள் தென்பட்டார்கள். அவர்கள் ஆவேசத்துடன் நடந்து வருவது போலத் தோன்றியது.

அவர்கள் எந்த திக்கைப் பார்த்து வருகிறார்கள் என்பதைக் கணிக்க முடியவில்லை. அவர்களின் வேகம் தான் திரும்ப கண்ணில்பட்டது. வாகனத்தைப் பிடித்திருந்த கைகள் நழுவின. வாகனம் நழுவின வேகத்தில் சரேலென்று சப்தமுண்டாக்கி ரோட்டில் விழுந்தது.

கண்ணாடி, உடைபடும் சப்தம் போல தொடர்ந்து கேட்டது. வருகிறவர்களைப் பார்த்துக் கொண்டு நிற்பதற்கு பதில் ஓடுவது நல்லது என்று பட்டது. நல்ல வேலை கையில் பை இருந்தது. சௌகரியமாக இருந்தது. இல்லையென்றால் பையைத் தேடி இன்னொரு தரம் வாகனத்தின் அருகில் செல்ல வேண்டும். இப்படி ஓடுவதற்காய் ரொம்ப நாட்களாய் காத்திருந்தவன் மாதிரி ஓட ஆரம்பித்தான்.

அது ஒரு தோட்டம் போல் பட்டது. கம்பி வேலி தகர்ந்திருந்தது. அங்கங்கே பலர் வந்து போவதற்கென்று கம்பிகளைத் தகர்த்துவிட்ட மாதிரி இருந்தது. குட்டையான இரும்பு கேட். தொடவும் வினோதமானக் குரலில் கிறீச்சிட்டது. கடப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள். என்ற எச்சரிக்கை மூன்று மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. வெங்கிட்டய்யா இப்படித்தான் பல சமயங்களில் ஒரே விஷயத்தை மூன்று மொழிகளில் பேசிக்காட்டுவார் என்பது ஞாபகம் வந்தது. அதில் கிண்டல் இருக்கும். வெங்கிட்டய்யா எதற்கு இந்த சமயத்தில் ஞாபகம் வருகிறார். அவர் நண்பருக்காய் வாங்கிச் சென்ற கடன் தொகைதான் வெகு சமீபத்தியது. இனி கொடுக்கவே தேவையில்லை, கொடுத்தாலும் வட்டியும், முதலும் வசூல் செய்வது சிரமம். வேண்டாம் என்று தீர்மானித்து விட்டிருந்தான். வெங்கிட்டயாவின் மீதான நம்பிக்கையில் கொடுத்தாகிவிட்டது. நம்பிக்கையை எல்லாம் சிதைத்து வருவதாகப்பட்டது. கேட்டின் கிறீச்சிடல் நாரசமாய் காதில் தொடர்ந்து கொண்டிருந்தது.

அந்த கும்பல் எந்த திசையில் சென்றது என்று தெரியவில்லை. கேட் ஏறி குதித்தான். செருப்பு பிரித்து தூரம் போய் விழுந்தது. கேட்டின் சிதைந்த பகுதி வழியே பார்த்தான். கும்பல் தூரமாய் கடந்து கொண்டிருந்தது. அவர்களின் வேகம் இன்னும் தணியவில்லை. கூக்குரல்களுடன் ரத்தம் வழிவதைப் பார்த்தபின்பே அந்த வேகம் குறையக் கூடும். கம்புகளின் மேல் ஏற்பட்ட விசை தளரும்.

அவர்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தவென்று பிரமாண்ட மாய் ஏதோவென்று அவர்கள் முன் நின்றால் நன்றாக இருக்கும் என நினைத்தான். கும்பல் தன்னை நோக்கியே வருவதாய் நினைத்து ரொம்ப தூரம் ஓடி வந்து விட்டோம் என்றிருந்தது. வாகனம் கிடக்கும் திக்கினைப் பற்றி யோசித்து தலையைச் சுழற்றினான்.

சட்டென வாகனத்தை யாரோ மறைத்துவிட்ட மாதிரி இருந்தது. அல்லது அபகரித்து போயிருப்பார்களா? பருந்து பறக்கும் போது குஞ்சுகளை வெளியே விடுகிற தப்பு மாதிரிபட்டது. அல்லது தன் பார்வைக்குத் தப்பின இடத் தில் வாகனம் கிடக்குமோ. இந்த எண்ணம் ஆறுதல் தந்தது.

கேட் ஓரம் இருந்த கல் ஒன்றின் மேல் உட்கார்ந்தான். கேட் சடசடவென அதிர்ந்து நின்றது. அதைத் தொட்ட இடங்களில் அடர்ந்திருந்த ஈரம் ஒரு வகை அழுக்காய் கை களில் ஒட்டிக் கொண்டது. அதை எதில் பூசி அழுக்கைப் போக்கிக் கொள்வது என்று தெரியவில்லை. பரபரவென்று தரையில் படர்ந்திருந்த புற்களில் பூசிக்கொண்டான். அழுந்த தேய்ந்தான். புல்லின் ஈரம் கைகளில் பட்டது. அழுக்கும், ஈரமும் கலந்து ஒருவித திரவமாய் மாறி நின்றது. ஒருவித மான அருவருப்பைத் தந்தது.

பார்வையை மெல்ல உயர்த்தினபோது நான்கு கண்கள் அவனையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கண் களில் தெரிந்த மிரட்சி பயம் தந்தது. விலங்கின் இரைக்கு முன் நின்றிருக்கிற பலிகள் போல இருந்தனர். உடம்பி லிருந்த சதையை முழுக்க அறுத்து எறிந்து விட்ட மாதிரி இருந்தனர். ஒளியிழந்த கண்கள் என்றாலும் இவ்வளவு மிரட்சியைக் கொண்டிருக்க வேண்டாம் என்றுபட்டது. சுல பமாய் கிழவன் கிழவி என்று சொல்லிவிடலாம். கைகளை பிணைந்திருந்தனர். பக்கமிருந்த கீற்று கொட்டகை அவர் களின் உடலமைப்பை ஞாபகமூட்டியது. மெல்ல நகர்ந்து அவர்களைத் தூரமாக்கினான். ஆறுதலுடன் அவர்கள்

பார்க்க ஆரம்பித்தனர். கும்பல் தென்படுகிறதா என்று பார்த்தபடி ரோட்டின் ஓரத்தில் பதுங்கி நடக்க ஆரம்பித்தான் கந்தசாமி.

# (21)

பொங்கல் என்பது வெங்கிட்டய்யாவிற்கு எப்போதும் சந்தோஷம் தரும். ஒரு மாதம் முன்பிருந்தே வாழ்த்து அட்டைகளை வாங்க ஆரம்பிப்பார். வெவ்வேறு கடைகளில் ஒன்று இரண்டாக தேர்வு செய்வார். முப்பதாவது தேறிவிடும். தூரத்தில் இருக்கும் உறவினர்களுக்கென்று தொடர்பு என்பது ஏகதேசம் பொங்கல் வாழ்த்து அனுப்புவதுதான். பெரும்பான்மையோரிடமிருந்து எந்த பதிலும் வராது. நன்றி கார்டு சில வந்தால் சந்தோஷப்பட்டுக் கொள்வார். ஊர் போகிறபோது சௌக்யமா என்று கேட்பதோடு, என்ன என்னோட பொங்கல் வாழ்த்தும் கெடச்சுதா என்று இன்னொரு விசாரிப்பை முன் வைக்க முடியும்.

இயற்கை காட்சிகள், பொங்கலிடும் காட்சிகள், குழந்தைகளின் படங்களை அவர் தேர்ந்தெடுப்பார். சின்னக் கவிதையிருப்பது பிடிக்கும். கவிதைகள் சந்தோஷத்துடன் வாழ்த்துக்களைச் சொல்லியபடி இருக்கும். இயற்கைக் காட்சிகள் அடடா இங்கேயெல்லாம் போய் பார்க்கமுடியுமா, இப்படியொரு இடத்தில் போய் குடியிருக்கமுடியுமா என்ற ஆசைகளை அவருள் கிளப்பும். குழந்தைகள் தத்தி தவழ்ந்து மழலை பேசி வயதாகிவிட்டதை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். வாழ்த்து அட்டைகளைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருப்பார்.

இந்த ஆண்டு பொங்கல் வாழ்த்துக் கடைகள் எவரும் போடவில்லை. போட்டக் கடையொன்று தீயிடப்பட்டது. பிறகு யாரும் முயற்சி எடுக்கவில்லை. லாட்டரி சீட்டு விற்பனை இடங்களிலும், வீதியின் முக்குகளிலும் சுலபமாய் பொங்கல் வாழ்த்துக்களைப் பரப்பின மேஜைகள் இருக்கும். இப்போது எதுவுமற்றபடி தெரு முக்குகள் சாதாரணமாகவே இருந்தன. தெரு முக்குகளை இப்படி பார்ப்பது அவருக்கு ஏதோ துக்கம் தருகிற விஷயாகவே இருந்தது. வெளியூர் போகும் நண்பர்களிடம் சொல்லி வாங்கி வரலாமா என்றும் நினைத்தார் வெங்கிட்டய்யா. அவர்கள் ரசனை எப்படியிருக்குமோ, சினிமா நடிக நடிகையர்களின் படங்களைப் பொறுக்கி வந்துவிடலாம். இல்லையென்றால் அரசியல் தலைவர்கள். குழந்தைகளின் படங்களைத் தேர்வு செய்வதிலும் கவனம் வேண்டும். குண்டு குண்டானக் குழந்தைகளை அவருக்குப் பிடிக்காது. பொக்கைவாய் சிரிப்புடன் இருக்கும் குழந்தைகளை பிடிக்கும். இவற்றைக் கவனமுடன் யார் தேர்வு செய்வார்கள் என்றும் விட்டு விட்டார். பொங்கல் வாழ்த்துக்கள் இல்லாமல் பொங்கலை நினைத்துப் பார்ப்பது என்பது அவருக்குச் சங்கடம் தருவதாகவே இருந்தது. தேடிப்பிடித்து மகேந்திரனுக்கு ஒரு வாழ்த்து வாங்கிவிடவேண்டும் என்பது மனதிலிருந்தது.

வழக்கமான பொதுவான வாழ்த்துக்கள் விற்கும் கடையில் கடைசியில் ஒரு வாழ்த்து வாங்கினார் பொங்கல் வாழ்த்தென்று கையில்தான் எழுதவேண்டும். கையில் எழுதுவது ஒரு வகையில் சந்தோஷம் என்றாலும், பொங்கல் வாழ்த்து என்று பிரத்யேகமாய் இல்லாமல் சாதாரண வாழ்த்தில் இப்படி எழுதுவது அவருக்குச் சற்று சங்கடமே தருவதாக இருந்தது. ஆனாலும் மகேந்திரனுக்கு அனுப்பாமல் இருக்கமுடியும் என்று தோன்றவில்லை அவருக்கு.

என்ன ஆகிவிட்டது அவனுக்கு என்றிருந்தது வெங்கிட்டய்யாவிற்கு. போய் சேர்ந்த பின் பாஸ்கர் அவன் வந்து

விட்டதாக கடிதம் எழுதி இருந்தான். அடுத்து மகேந்திர னின் கடிதமும் வந்தது. பிறகு எந்தத் தகவலும் இல்லை.

''இது பெரிய நகரமில்லை. ஆனால் பெரிய நகரத்திற் கான பரபரப்புத் தன்மை இருக்கிறது. மனிதர்கள் பணம் பணம் என்று பறக்கிறார்கள். தெரு முக்குகளிலும் கூட பனியன் கம்பனிகள் இருக்கின்றன. குடிசைத் தொழில் என்று சற்று கிண்டலாகச் சொல்லிவிடலாம் போலிருக் கிறது. பிரமாண்டமான இயந்திரங்கள் உறுமலுடன் அலறு வதைப் பார்க்கும் போது சற்று பயமே தருகிறது. பிசிர் வெட்ட, மிஷின் தைக்க, லேபிள் வைக்க ஆட்கள் தேவை என்று தினமும் போர்டுகள் தொங்கும் கம்பனிகளைப் பார்க் கிறேன். சித்தப்பா அக்கவுண்டாக ஏதாவது கம்பனியில் சேர்த்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார். நிறைய எக்ஸ் போர்ட் கம்பனிகள் தென்படுகின்றன. வியாபார உலகம் நான் இயங்கி வந்த உலகத்திலிருந்து மிகவும் மாறுபட்ட தாக இருக்கிறது. என் குளறுபடிகள்தான் இவ்வளவு தூரம் என்னைத் தூரத்திவிட்டது என்பதும் தெரிகிறது. எனக்கு மட்டும் ஒரு வேலை கிடைத்திருந்தால் என் குளறு படிகள் தான் நீண்டிருக்குமா? இவ்வளவு தூரம் ஓடி வந்திருக்கவேண்டுமா என்றக் கேள்விகளைத் தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''என்னை இவ்வளவு தூரத்திற்கு ஏன் துரத்திவிட்டீர் கள் என்றக் கேள்வியை நான் உங்களை கேட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு இங்கு வேலை கிடைத்து, செட்டிலாகிவிட்டால் நீங்களும் இங்கு வந்து சேர்ந்து விடலாம் என்ற ஆசை. வேர்களைத் தேடிச் சென்று அடைந்து விடுகிற ஆசை உங்களை என்னை துரத்த முக்யமானக் காரணம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இதெல்லாம் ஈடேருமா என்பது தெரியவில்லை,''

''எப்படி இருந்தாலும் என்னை நானே பரிசீலித்துக் கொள்ள இது நல்ல சந்தர்ப்பம் என்று தோன்றுகிறது.

இந்த மனிதர்கள் சுலபமாகப் பழகுகிறார்கள். பழகாத வரைக்கும் தூரம் நின்று வினோதமாய் பார்க்கிறார்கள். பழகிவிட்டால் நெருங்கிய உறவு போல ஆகிவிடுவதைச் சுலபமாக உணர்ந்திருக்கிறேன். என் தமிழ்தான் இவர்களுக்கு கேலிக்குரியதாக இருக்கிறது. கொச்சையாக நான் பேசுவதாய் நினைக்கிறார்கள். இவர்களின் தமிழும் அப்படிக் கொச்சையாகத்தான் இன்னொரு வகையில் இருக்கிறது. இவர்களின் கொச்சையை நான் சுலபமாகக் கற்றுக்கொண்டு விடுவேன் என்று தெரிகிறது. இப்போது பேசும் கொச்சைத்தனம் என்னை வேறொரு பிரதேச மனிதனாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. இது ஒரு வகை உறுத்தலாகவும், சிரமம் தருவதாகவும் இருக்கிறது. நான் அந்நியன் என்று சொல்லிக் கொள்கிறேன். நம் ஊரில் பல வருஷங்களாய் நாம் இருந்தாலும் இந்த அந்நியத் தன்மையை உணர்வதாய் பலமுறை தாங்கள் சொல்வதுண்டு. இப்போது இங்கு நானும் அந்நியனாகத்தான் தென்படுகிறேன். இங்கு பிறந்து வளர்ந்து, இந்த பாஷையுடனேயே வாழ்ந்து வருபவனுக்கு மட்டும்தான் இந்த மண்ணுக்குரியவன் என்ற பெருமை இருக்கும் என்று தோன்றுகிறது. இது உறுத்தலாகவும் இருக்கிறது.''

''அடுத்த முறை உங்களைச் சந்திக்கையில் நான் பேசும் தமிழ் உங்களை ஆச்சர்யப்படுத்தலாம். சந்தோஷமும் கூட. ஆனால் சந்திப்பது எப்போது என்ற கேள்வியும் இருக்கிறது. சித்தப்பாவிற்கு என்னால் எந்தவித இடைஞ்சலும், பயமும் இருந்துவிடக்கூடாது என்று ஜாக்கிரதையாக இருக்கிறேன். இந்த ஜாக்கிரதையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது.''

பின் பாஸ்கர் எழுதியிருந்த கடிதத்தில் மகேந்திரன் ஒரு எக்ஸ்போர்ட் கம்பனியில் வேலைக்குச் சேர்ந்து விட்டதாக எழுதியிருந்தான். தமிழும் மெல்ல கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையும் மகேந்திரனுக்கு வந்து விட்டது என்று குறிப்பிட்டிருந்தான். ''படித்தவர்கள் பெரிய

நகரங்களுக்கு இங்கிருந்து வேலைதேடி அங்கெல்லாம் செல்லும்போது அங்கிருந்து மகேந்திரன் வேலை தேடி இங்கு வந்திருப்பது பலருக்கு ஆச்சர்யமான விஷயமாக இருக்கிறது. அவன் தீவிரவாதியாக இருப்பானோ, போலீசுக்குப் பயந்து இவ்வளவு தூரம் வந்திருப்பானோ, அல்லது வேறு குற்றங்களைச் செய்துவிட்டு இவ்வளவு தூரம் மறைந்து கொள்ள வந்திருப்பானோ என்று காதுபடவே பேசுகிறார்கள். வருத்தமே தந்தாலும், இது இயற்கை என்றே படுகிறது. எனக்கும்கூட இந்தக் கேள்வி எழுகிறது. அப்படி அவன் என்ன தவறு செய்தான். இவ்வளவு தூரம் துரத்துவதற்கு? அவன் பழைய சூழலில் இருந்தால் நிலைமை இன்னும் மோசமாகலாம் என்று நினைத்திருப்பீர்கள். புது சூழல் அவனைப்பல விதங்களில் பரிசீலிக்க வைக்கும் என நினைத்திருக்கலாம். இதுவும் சரிதான்.''

''ஆனால் இந்தத் தண்ணீர் பிரச்னைதான் பயமுறுத்திகொண்டிருக்கிறது. இது உங்கள் ஊரில் வெடிக்கிறபோதெல்லாம் இங்கேயும் பிரதிபலிப்புகள் இல்லாமல் இல்லை. உங்கள் ஊரில் ஏதாவது சிரமம் வருகிறபோது, இங்கிருக்கும் அந்த பிரதேசத்துக்காரர்களுக்கு சிலர் சிரமம் இருக்கிறது. இந்த வகைக் குரோதம் சமீப காலமாய் அதிர்ச்சி தருகிறது. மற்றபடி எல்லா இடங்களிலும் இருக்கும் அசாதாரணங்கள் இங்கேயும் இருக்கின்றன.''

பாஸ்கரனிடமிருந்து பின்னர் கடிதங்கள் இல்லை. மகேந்திரனுக்கும் வேலைக்குச் சேர்ந்தபின் நேரம் கிடைக்காமல் இருக்கலாம். எட்டுமணிக்குப் பனியன் கம்பனிக்குள் நுழைந்தால் ஆறு மணி வரை இருந்தே தீர வேண்டும். எட்டுமணி, பத்து மணி என்று அது நீண்டு கொண்டே போகும். இந்த கதியில் மகேந்திரனுக்குச் சம்பிரதாயக் கதியில் கடிதம் போடுவது கூட இயலாமல் போயிருக்கும் என்று ஆறுதல் பட்டுக் கொண்டிருந்தார் வெங்கிட்டய்யா.

ஆனால் சமீபத்திய பிரச்னைகள் அவனிடமிருந்து கடிதங்கள் இல்லாதது பற்றின பயத்தைக் கிளப்பிக் கொண்டே இருந்தது. லட்சுமி கூட கேட்டாள். ''ஒரு தரம் போயிட்டு வர்றதுதானே''

''லகுவா சொல்லிட்டே. ஆயிரத்து முந்நூறு மைல் தூரம். ஒரு மணி நேரப் பிரயாண ஊருக்குப் போயிட்டு வான்னு சொல்ற மாதிரி சொல்லிட்டே., பாக்கலாம்''

''என்னமோ பயமா இருக்குங்க''

''எனக்குந்தா''

மகேந்திரனுக்குப் பொங்கல் வாழ்த்து அனுப்பும்போது நீண்டதாய் கடிதமொன்றும் எழுத வேண்டும் என நினைத்தார். பொங்கல் வாழ்த்தை மட்டும் தனியாக அனுப்புவது என்பது அவரின் மனதிற்கு உகந்ததாகப்பட வில்லை.

பொங்கல் வாழ்த்தை போஸ்ட் செய்துவிட அவசரமாய் போய்க்கொண்டிருந்தார் வெங்கிட்டய்யா. போஜராஜன் பஸ் ஸ்டாப் ஓர பீடாக் கடையிலிருந்து சப்தம் போட்டபடி வந்தார். கையிலிருந்ததைப் பார்த்துக் கொண்டார்.

''என்ன பொங்கல் வாழ்த்தா''

''ஆமா.''

''வெறும் வெள்ளைக் கவரா இருக்குது.''

''இந்த வருஷந்தா பொங்கல் வாழ்த்துக் கடைக எவனும் போடலியே அதுதா சாதாரண வாழ்த்தை வாங்கி பொங்கல் வாழ்த்துன்னு எழுதி அனுப்பறன்.''

''அனுப்புனா பரவாயில்லே. அங்கிருந்து யாரையும் பொங்கல் வாழ்த்துன்னு அனுப்ப வேண்டாம்ன்னு உடனே எல்லார்க்கும் எழுதிரு.''

வெங்கிட்டயாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. போஜ ராஜன் எதையும் கவனத்துடன்தான் சொல்வார். இந்த வார்த்தைகளும் கவனத்திற்குரியவை என்பது ஞாபகம் வந்தது.

''என்ன புதுசா என்னென்னமோ சொல்றே''

''அங்கிருந்து நமக்கெல்லாம் பொங்கல் வாழ்த் தெல்லாம் வராமெ இருக்கறது நல்லதுன்னு தோணுது. இங்கவங்க பொங்கல் வாழ்த்துக்களை வெச்சிட்டு, போஸ்ட் ஆபீஸ்லே இதையெல்லாம் வெச்சு நம்மாளுக யார்யார்ன்னு சுலபமா கண்டுபிடிக்க போறாங்கன்னு ஒரு வதந்தி இருக்கு. எதாவது பிரச்னைன்னு வந்தா இந்த அட்ரஸ்களெ வெச்சுட்டு நம்மாள அடிக்கவோ ஒதைக்கவோ முடியும் அவங்களாலே. இது ஒரு வதந்தின்னா செரிதா. வதந்தி எந்த வகையிலும் நிஜமாயிட்டா கஷ்டம்.''

கையிலிருந்த வாழ்த்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார் வெங்கிட்டய்யா. எவ்வளவு சந்தோஷங்களைக் கொட்டிக்குவிக்க வேண்டும் இந்த வாழ்த்து. தபால்பையி லிருந்து கடிதங்களைக் கொட்டுவது போல இவை தரும் நினைவுகளும் இருக்கும் என்று நினைத்திருந்தது சட் டெனத் தவறிவிடுவது போலிருந்தது. பொங்கல் என்று கொண்டாடுவது எதுவும் இல்லை என்றாலும் பொங்கலைப் பற்றின எண்ணங்களை இந்த வாழ்த்துக்கள் கிளறிவிடுவது நிச்சயம். இந்தமுறை தவறிவிடும் என்ற எண்ணம் சங்கடப் படுத்தியது. பிரச்னைகள் எப்படியெல்லாமோ வடிவம் எடுப்பது பஸ்ஸை விட்டு பரபரப்பாய் பிரிந்து செல்லும் மனிதர்களின் ரூபங்களைப் போலாகிவிட்டது போலிருந்தது அவருக்கு.

# (22)

அவன் இளைஞனாக இருந்தான். அவனின் முகத்தில் ஒரு விதமான வெற்றிக்களை. சந்தோஷத்தை அவன் முகம் வெளிக்காட்டிக் கொண்டிருந்தது. வார்த்தைகளை வெகு ஜாக்கிரதையாக உச்சரித்துக் கொண்டிருந்தான். அவன் முன் உடைகள் பரவிக் கிடந்தன. பிளாஸ்டிக் பாய் ஒன்றினை விரித்து உடைகளைப் பரப்பி இருந்தான். இரத்தக் கறை படிந்த உடைகள். ரத்தம் திட்டுத் திட்டாய், கொட்டினபடி, தெளித்தபடி. எங்கிருந்தோ வழிந்தது சட்டென நிறுத்தின மாதிரி. வகைவகையான ரத்தத் தெளிப்பு உடைகள்.

அவன் அந்த உடைகளைக் காட்டி கூவி விற்றுக் கொண்டிருந்தான். ஒவ்வொரு உடையாக எடுத்து விரித்தான், பின் வலது கையில் உயர்த்திப் பிடித்துக் கொண்டு அந்த உடையின் மருத்துவம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான் கத்திக் குத்து பட்டதால் ரத்தம், கோடாரி வைத்து பிளந்ததால் ரத்தம். சைக்கிள் செயின் வீச்சில் தெறித்தத் துளிகள். அவன் ஒவ்வொரு உடைக்கும் பின்புலமாய் ஒவ்வொரு கதை இருப்பதாய் சொன்னான். ஒவ்வொரு கதையிலும் வரும் கதாபாத்திரங்கள் யார்யார் என்று கேட்டான்.

வேடிக்கை பார்க்கிறவர்களை நீதான் நிதான் என்றான் விரல் சுட்டிக் காட்டியவர்களெல்லாம் சட்டென அங்கிருந்து நகர்ந்தனர். பலசாலிகளாய் இருந்த சிலர் அவனின் உடைகளில் அக்கறை கொண்டதுபோல அவற்றையேப் பார்த்துக்

கொண்டிருந்தனர். அவை தங்களுக்குப் பொருந்தி வருகி ; தா என்று வாங்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர். உதட்டைப் பிதுக்கியபடி இருந்தனர் சிலர். சிலர் உடைகள் பொருந்தியதால் அணிந்து கொண்டனர்.

சட்டென வீதி முழுக்க ரத்தக்கறைகள் படிந்தன. வெள்ளை சட்டைகளை முக்கி எடுத்து அவற்றில் தெரியும் ரூபங்களைக் கவனித்தனர் சிலர்.

உடைகளை விற்றுக் கொண்டிருந்தவனின் கூவல் உயர்ந்து கொண்டே சென்றது. கூட்டமும் பெருகிக் கொண்டே இருந்தது. சட்டென எல்லாம் கரைந்து போன பின்பும் ரத்தக்கறை உடைகள் தெருவெங்கும் விரவி இருந்தன.

வெங்கிட்டய்யா நிலை குலைந்து போயிருந்தார். இவ்வளவு சீக்கிரம் என்னவெல்லாமோ நடந்துவிட்டது போலிருந்தது. இத்தனை நாளும் பந்த் சின்ன சின்ன எதிர்ப்புகளாய் இருந்து வந்தது விசுவரூபித்து விட்டது. உச்ச கட்டம் இதுதான் என்றிருந்தது. தண்ணீர் விட வேண்டும் என்று கோர்ட் அளித்தத் தீர்ப்பு வெளிவந்த நாள்தான் ரகளை விசுவரூபித்தது. தொடர்ந்து நகரம் களேபரமாகிவிட்டது. நொறுக்கப்பட்ட சொத்துக்கள், தீ வைத்து எரிக்கப்பட்ட வீடுகள், கடைகள். கொலை செய்யப் பட்டவர்கள். தொடர்ந்து கொண்டே இருந்தது.

தாமோதரன் செத்துப் போனான். ரகளை ஆரம்பித்த முதல் நாளே அவனின் பிணம் ரோட்டோரத்தில் கிடந்தது. ''என்னை சாவு கொண்டு போக மாட்டிங்குதே'' என்று ஒலித்துக் கொண்டிருந்த குரலின் நெறிகள் ரத்தமாகி இருந்தது. தெருவில் படுத்துக் கிடந்தவர்கள் படுத்த வாக்கிலேயே பிணங்களாகி இருந்தனர். தாமேதரனின் உடம்பில் பல குத்துக் காயங்கள். விறைத்த உடம்பை வெங்கிட்டய்யா பார்த்தார்.

பல நாட்களாகவே வெங்கிட்டய்யா வீட்டுக் கதவு உள் தாளிடப்பட்டு, உள்ளே அடைபட்டுக் கிடந்தார். கலவரத்தின் தன்மை பற்றி கேள்விப்பட்டதிலிருந்து வீட்டினுள்ளேயே இருந்தார்கள். கர்ப்பியூ பற்றினச் செய்திகளை ரேடியோ வும், டி.வி.யும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மூடிக் கிடந்தக் கதவின் அந்தப்புறமிருந்து வந்த குரல் அவரை உலுக்கியெடுத்தது. ''தாமோதரனைக் கொன்னுட் டாங்க.''

மூலையில் சுவற்றோடு சேர்ந்து படுத்துக் கொண்டிருந்த வெங்கிட்டய்யா சரேலென எழுந்தார். கதவைத் திறக்க அவரின் கைகள் நீண்டன. லட்சுமி எழுந்த வேகத்திலேயே கதவருகில் வந்து நின்றாள்.

''தெறக்காதிங்க.''

''தாமோதரன் செத்துப்போயிட்டான்னு யாரோ சொல் றாங்க.'' அடைத்த கதவின் பக்கமிருந்து அடையாளம் தெரியாதபடி அந்தக்குரல் மீண்டும் வந்தது. ''பேக்கரி ஓரத்திலெ தாமோதரன் பொணமாக் கெடக்கறான்.''

''வெளிய...போகாதிங்க.''

''ஒண்ணுமில்லெ. யார் சொல்றதுன்னு பாத்து விவ ரமா ஒரு வார்த்தைக் கேட்டுடறேன்.''

''வேண்டாங்க. போகாதிங்க.''

லட்சுமியின் கண்களில் மிரட்சி இருந்தது. அவரின் கை களைப் பிடித்துக் கொண்டாள். அடிபட்டக் குழந்தையின் பயத்தையும், அழுகையையும் அவள் முகம் காட்டிக் கொண் டிருந்தது. அவளை இவ்வளவு நெருக்கமாய், கலங்கும் கண் களுடன் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது என்ற எண்ணம் வெங்கிட்டய்யாவிற்கு வந்தது. ஜன்னலை மெல்லத் திறந்து

பார்த்தார். வீட்டு வாசலில் யாரும் தென்படவில்லை. லட்சுமி ஜன்னலைப் படாரென்று மூடினாள்.

''நமக்கு வம்பு எதுக்குங்க. வீட்டுக்குள்ளியே இருப்பம். யாராச்சும் வெளி ஆளுக உங்களெ வெளிய கூப்புடற துக்கு இப்பிடியொரு பொய் கூடச் சொல்லலாம். போக வேண்டாங்க.''

''போகல...நீ ரொம்ப பயப்படாதே.''

''அப்பிடியே தாமோதரன் செத்துப் போயிருந்தாலும் நாம என்ன பண்ண முடியும்?''

''ஒண்ணும் பண்ண முடியாதுதா. ஒரு தரம் பாத்தர் லாம்.''

''வேணாங்க.'' அவர் அருகில் அவள் உட்கார்ந்து கைகளை நெருக்கினாள்.

''செரி. போகலே.''

போர்வையைப் போர்த்திக் கொண்டு படுக்க ஆரம்பித் தார். சற்று மேக மூட்டமாய் இருந்தது வீட்டுக்குள்ளேயே கதகதப்பாக இருக்கச் செய்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. மிகவும் தெரிந்த ஒருவரின் சாவுச் செய்தியைக் கேட்டாயிற்று. இனி இந்தவகைச் செய்திகள் தொடரலாம். அடுத்து யார் என்ற கேள்வி எங்கேயோ தொக்கி நின்று கொண்டிருப்பதாகத் தோன்றியது.

சட்டெனத் தூக்கம் விடுபட்டுவிட்டது. லட்சுமியைக் கவனித்தார். ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த மாதிரிப்பட்டது. கலவரச் செய்திகளைக் கேட்டபின்பும் இப்படித் தூக்கம்வந்து விடுவது ஆச்சர்யமாகவே இருந்தது. உறுத்தலாகவும் பேக் கரி வரைக்கும் போய் வந்துவிடலாமா எழுந்தார். வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டு விறுவிறுவென நடந்தார்.

எல்லா வீட்டுக் கதவுகளும் ஜன்னல்களும் அடைபட்டு வீதி நீண்டு கிடந்தது. இப்படி வீதியைப் பார்ப்பதுதான் எவ்வளவு அழகானது என நினைத்தார். டி.வி. செய்தி ஏகதேசமாய் எல்லா வீடுகளிலிருந்தும் கேட்டுக் கொண்டிருந்தது. வீட்டிற்குச் சென்று கர்ப்பியூ இன்று அமுல்படுத்தப்பட்டிருக்கும் பகுதிகள் பற்றிக் கேட்கவேண்டும் போலிருந்தது. இப்பகுதி இன்னும் கர்ப்பியூவில் அடைபடவில்லை என்றே நினைத்தார். எதற்கும் பேக்கரி வரை சென்று வந்துவிடலாம் என்று விரைசலாக நடந்தார். கோலம்மா வீட்டு ஜன்னல் சட்டென மூடிக் கொண்டது. ஆட்களில்லாத தெருவை இப்படிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டதுண்டு. ஆனால் இவ்வளவு பயத்துடன் பார்க்க வேண்டாமே என்றும் பட்டது.

முக்குத் திருப்பத்தில் நின்றார். தலையை மட்டும் நீட்டுபவர் போல நின்றவாக்கிலேயே பார்த்தார். பேக்கரி முகப்பு தெரிந்தது. ரத்தம் உறைந்து ஈக்கள் மொய்க்கத் துவங்கி இருந்தன. ரத்தத்தை தெளித்த மாதிரி பரவி இருந்தது. தாமோதரனின் உடம்பு விறைத்துக் கிடந்தது. வெங்கிட்டய்யாவிற்குக் கண்கள் கலங்கின. இன்னும் கொஞ்சம் அருகில் செல்லலாமா என நினைத்தார். சர்தார் முட்டைக் கடையருகில் உட்கார்ந்திருந்த போலீஸ் அவரைப் பார்த்ததும் மெல்ல எழுந்தான்.

உடம்பு படபடவென்றாகிவிட்டது அவருக்கு. சற்றே வியர்த்தது. நடுநிசி நேரத்தில் வீதியில் நடப்பது போலிருந்தது. பரபரப்புடன் கதவைத் திறந்தார். லட்சுமி அழுகையுடன் எழுந்து வந்தாள்.

''எங்கெங்க போயிட்டீங்க.''

''பேக்கரி வரைக்கும்.''

''இந்த ஏரியா கூட கர்ப்பியூவாமா.'' டி.வி.செய்தி தொடர்ந்து கொண்டிருந்தது. கர்ப்பியூ நேரத்தில் தான் வெளியில் சென்றிருக்கிறோம் என்ற விஷயம் உடம்பைக்

குலுக்கியது. டி.வி. திரையையே பார்த்துக் கொண்டிருந் தார்.

''தாமோதரன் பொணத்தை பாத்துட்டு வந்துட்டன்."

''போலீஸ் நிறைய இருக்கா.''

''மெயின் ரோட்டுக்குப் போகலெ. பேக்கரி வரைக் கும்.

''கர்ப்பியூ நம்ம ஏரியாவும்.''

''வூட்டுக்குள்ளியே கெடக்க வேண்டியதுதா.''

படபடவென சதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. முன் அறையிலிருந்து உள் அறைக்குச் சென்றார். லட்சுமியும் தயங்கினபடி சென்றாள்.

''யாரு.''

கதவு தட்டப்படும் சப்தம் பயம் கொள்ள வைத்தது. முகம் வெளிறியது அவருக்கு.

''தெறக்க வேண்டாம்.''

சிறிது நேரம் மீண்டும் சப்தம் கேட்டு பின் இன்னொரு வீட்டுக் கதவு பக்கம் நகர்ந்து விட்டது தெரிந்தது. யாரா வது ஏதாவது உதவி கேட்டு தட்டியிருப்பார்களோ என்ற சந் தேகத்தில் மனம் முழுக்க உறுத்தல் ஆக்கிரமித்தது.

# (23)

ஒருதரம் புரட்டிக் கீழே தள்ளிவிட்டு மறுபடியும் நிமிர்ந்து பாரேன் என்று சொல்லும் விதமாய் உட்கா

வைத்த மாதிரி அதற்குள் என்னென்னமோ நடந்துவிட்டது என்றிருந்தது வெங்கிட்டய்யாவிற்கு. எவ்வளவு உயிர்கள் பலி. எவ்வளவு சொத்து சேதம். தன் உயிரும், தன் சொத்தும் இன்னும் பத்திரமாகவே இருக்கவே எல்லாம் நிதானமாகவே இருப்பதாய் நினைப்பவர்கள் மத்தியில் வெங்கிட்டய்யாவிற்குத் தவிப்பாய் இருந்தது. எத்தனை நாளைக்கு இந்தத் தவிப்பை மனதுள் வைத்திருப்பது என்று மிருந்தது.

கர்ப்பியூ இரவில் மட்டும் என்றாகியிருந்தது. கரியாக்கப் பட்ட இடங்கள் உடம்பின் மச்சங்களைப் போல் நிரடிக் கொண்டிருந்தன. லட்சுமி வேறு மகேந்திரனைப் பற்றியேக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அவன்கிட்ட இருந்து ரொம்ப நாளாவே கடிதாசி எதுவுமில்ல. என்ன செய்யலாம்.''

''பாஸ்கரனுக்குத் திரும்பத் திரும்ப எழுதிட்டுதான் இருக்கேன். பதிலே இல்லை.''

''போய் பாத்துட்டுதா வாங்களேன்.''

''பக்கமா விசுக்குன்னு போயிட்டு வர்ரதுக்கு.''

இனிமேலும் உயிர் பிழைப்பது கஷ்டம் என்றுணர்ந்த வர்கள். இருக்கிறதை மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தனர். வெங்கிட்டய்யாவிற்குத் தன் போன்றவர் கள் என்ன செய்வதென்று விளங்கவில்லை. இருக்கிற வேலையை விட்டுவிடமுடியாது. எல்லாம் போதும் கௌம்ப றேன் என்று ராஜினாமா செய்துவிட்டு கிளம்புவதற்கும் சில மாதங்களாகிவிடும். பந்த் தினங்களில் பஸ்ஸிற்க்குக் காத்தி ருக்காமல் நடப்பது போலத்தான் என நினைத்தார்.

''எதுக்கும் ஒரு தரம் போயிட்டு வாங்க.''

''போகணும். ரகளையிலெ இங்கிருந்து ஆயிரக் கணக் கிலெ ஜனங்க அங்க கௌம்பிட்டாங்க. அங்கியும் இதே

ரகளை. அங்கிருந்தும் தினம் தினம் இந்தப் பக்கம் வந்ந்தி கிட்டுதா இருக்காங்க.''

''மகேந்திரன் பேசற கொச்சையான பாஷை அங்க இருக்கறவங்களுக்கு இவன் வேற மனுஷன்னு சுலபமா காட்டிரும். இந்த ரகளையிலெ அது முக்யமா போயிடும். எதுக்கும் ஒரு தரம் போயிட்டு வந்துருங்க.''

''பேசற பாஷைதா இன்னிக்கு பெரிய விஷயமாயிட்டப்போ, அவனைப் பத்தி நெனைக்கறப்போ பயம்மாத்தா இருக்கு.

கடிதங்களே வராமல் போய்விட்டது. போஸ்ட் மேனைப் பார்த்து கேட்டுமாயிற்று. அவன் ''யாருக்குத்தா இப்ப வெல்லா கடிதாசிக வருது.'' என்று கேட்டான். ரயில்கள் தடங்கலில்லாமல் இன்னும் ஓடவில்லை. வாரம் ஒரு முறை இருக்கும் நேரடி டிரெயினுக்காக காத்திருப்பது கஷ்டம் என்று பட்டது. அன்றைக்குப் பார்த்து அதுவும் ரத்தாகி விட்டால் சிரமம்தான். தனியாக போய் எங்காவது மாட்டிக் கொள்ளக் கூடாது என்ற பயமும் வந்துவிட்டது. தொலை பேசி எண்ணும் அவரிடம் இல்லை. யாரிடம் விசாரிப்பது, என்னவென்று விசாரிப்பது தன் தவிப்பை யாரிடம் வெளிக் காட்டிக் கொள்வது என்றும் தெரியாமல் போய்விட்டது.

''இதுவரைக்கும் பிளைட்ல போனதே இல்லை. இப்ப போய் பாக்கலாமுன்னு தோணுது... காசு செலவானாலும் ஒரு தரமாச்சும் போய்தா பாக்கலாமே. காசு போனாப் போகுது. இது ஒரு சந்தர்ப்பம்ன்னு இருக்கட்டும். வேற என்ன பெரிய அவசரம் வந்துடப் போகுது.

லட்சுமியும் அவளே விமானத்தில் பயணம் செய்வது போன்ற பரபரப்பு, சந்தோஷத்துடன் சரி சரி என்றாள். வெங்கிட்டய்யாவும் பரபரப்பாகத்தான் இருந்தார். இப்படி வானத்தில் பறப்பதைப் பற்றி யாரிடமாவது சொல்லிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. மேகங்களுக்கு மத்தியில் பறப்பது, மேகங்களின் குளுமையையும், வெண்மையையும்

துய்த்துணர்ந்தபடி, வீரிடும் பறவையின் கூக்குரல் போன்ற விமானத்தின் உறுமலைச் சுமந்தபடி. அடுத்த வினாடியில் எங்கோ குதித்து விடுகிற உற்சாகத்துடன் பறக்க வேண்டும். இறகுகளை வெட்டிவிட்ட பின்னும் இயல்பாய் பறக்கும் பறவை ஏதாவது இருந்தால், அதன் ரூபம் தனக்குக் கிடைத்துவிட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் திரும்ப திரும்ப நினைத்துக் கொண்டிருந்தார்.

மகேந்திரனைப் பற்றின எண்ணங்கள் அவரை சங்கடப்படுத்திக் கொண்டே இருந்தன. இறகுகளை வெட்டி விட்ட பறவையின் தத்தளிப்பு அவரின் மனதுள் வந்து விட்டது.

# (24)

பஸ்கள் மாறி மாறி பயணம் செய்வதை வெங்கிட்டய்யா அலுப்பாக உணரவில்லை. உற்சாகமாக இருந்தது. எவ்வளவு நாளாயிற்று இப்படி பிரயாணம் செய்து. ஓடும் தண்டவாளங்கள், சட்டென மறையும் மலைகள், மரங்கள், வெட்டவெளியாய் தரிசு நிலங்கள், குளுமையாய் தோட்டங்கள் இவற்றையெல்லாம் கடக்க கால்நடையாகவே அவற்றுள் திரிந்த மாதிரி இருந்தது. ஆனால் எல்லாவற்றையும் கலைத்துப் போட்ட மாதிரியும், தலைகீழாக நிறுத்தி விட்ட மாதிரி, கரிகளைப் பூசிவிட்ட மாதிரியும் குலைந்திருந்தன.

வெட்டப்பட்ட மரங்களைப் போல பல கட்டிடங்களை நிறுத்தி இருந்தன. மனிதனின் உடம்பின் ஒரு பகுதியில் மட்டும் ஏதோ வியாதி வந்து செயலிழந்து போனது போல

கட்டிடங்கள் கரியாகி நின்றன. தீக்குள் குளித்து தன்னை உருக்கிக் கொண்ட வாகனங்கள். எவை எவையோ கரியாகக் கிடந்ததன் அடையாளங்கள். பார்க்க பதற்றமாயிருந்தது அவருக்கு.

வானத்தில் பறப்பது பற்றிதான் தீவிரமாக நினைத்துக் கொண்டிருந்தார். பேங்கில் இருந்த பணத்தையும் சேர்த்து எடுத்து வைத்துக் கொண்டார். தகவல் எதுவுமே இல்லாததால் மகேந்திரனின் நிலைமை தினமும் பயம் தந்தது. அவசர கதியாய் செல்ல இது ஒரு சந்தர்ப்பம் என நினைப்பு. பிறகு என்னவாகிவிட்டது. இந்த பரபரப்பை உள்ளுக்குள் ஏன் வீணாய் வாங்கிக் கொள்ள வேண்டும். நிதானமாக்கிக் கொள்ள வேண்டும். விபரீதமாய் எல்லாம் நிகழ்வதாய் நினைத்துக் கொண்டிருப்பதால் இந்த பரபரப்பு. பரபரப்பைக் குறைத்துக் கொண்டபோது சட்டென தூசியுடன் பறந்த பறவையின் ஒற்றை சிறகு தரையில் படிந்தது போல மனம் ஆனது. ரயில்கள் இன்னும் சரியாக வருவதில்லை. பஸ்கள் பரவாயில்லை என்று கிளம்பி விட்டார். இரண்டாவது பஸ்ஸை விட்டு இறங்கியாயிற்று. அடுத்த பஸ் பிரயாணம் பிரதேச எல்லையைக் கடந்து கொண்டு போய் விடும். பிறகு கடைசியான பஸ்ஸில் பஞ்சுத் துகள்கள் பறக்கும் ஊரில் மகேந்திரனைப் பார்த்து விடலாம். அவன் முகம் பார்த்து விட்டால் போதும் ஆறுதல் வந்து விடும். லட்சுமி அவனைத் துரத்தி விட்டதன் காரணம் மகேந்திரனுக்கு நகைப்புக்குரியதாக இருக்கலாம். மகேந்திரன் அப்படி புன்னகை காட்டி உள்ளூரச் சிரித்துக் கொள்வான் என்பது வெங்கிட்டய்யாவிற்கு ஆறுதல் தந்தது.

அடுத்த பஸ் ஏற வேண்டிய இடம் எது என்பது தெரியவில்லை அவருக்கு. கேட்டபோது புது பஸ் ஸ்டேண்ட் போ என்றார்கள். ஒன்றரை பர்லாங் இருக்குமாம். பழைய பஸ் ஸ்டேண்டில் இறக்கி விட்டிருந்தார்கள். சகதியும், அழுக்குமான இடத்தில் மனிதர்களை அடைத்து விட்ட மாதிரி இருந்தது. மனிதர்களின் முகங்களில் இருந்த சோர்வு

பயணச் சந்தோஷத்தைக் கரைத்தது. இவர்களிடமிருந்து மீண்டு போவது பெரிய விஷயமாகப்பட்டது. மனிதர்களை மிதித்துக் கொண்டுதான் நடக்க வேண்டும. குழந்தைகளின் கதறல் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்த மாதிரிப் பட்டது. புது பஸ் ஸ்டேண்ட் வழியைக் கேட்டு மெல்ல நடக்க ஆரம்பித்தார்.

வெளியே வந்ததும் நிறைய போலீஸ்கள் தென் பட்டனர். ஏதோ வேலைக்காக அவர்களை நிறுத்தி வைத்த மாதிரி இல்லாமல் களைப்பாறுவதற்காக இருக்கிற மாதிரி உடம்பைத் தளர்த்திக் கொண்டிருந்தார்கள். தட்டிகளில் எழுதப்பட்ட வாசகங்கள். கறுப்பு மையில் தட்டிகள் அமிழ்ந்து இருந்தன. அந்த வாசகங்களைச் செய்தித் தாள் களில் தினமும் பார்த்ததுதான். ஆனால் கறுப்புமையின் அழுத்தம் அவரைத் திடுக்கிடவேச் செய்தது.

''நம் பிரதேசத்திற்கு வந்து சேரும் அகதிகள் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நிவாரண முகாமிற்குச் சென்று பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டப் படுகிறார்கள். அகதிகள் புதிய நபர்களிடம் ஏமாற வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.''

கறுத்த முகத்துடன் அந்தத் தட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அகதி என்ற வார்த்தை தன்னை நிலை குலையச் செய்வதாக உணர்ந்தார். தான் இப்போது எந்த பிரதேசத்துக்காரன்? மூன்று மொழிகளை சுலபமாகப் பேசக் கூடியவன். மொழியைப் பேசுவதை வைத்து பிரதேசம் வரை யறுக்கப்படுபவன் என்றால் தன்னை எந்தப் பிரதேசக் காரனாக வரையறுத்துக் கொள்வார்கள். என்னவாயிற்று இவர்களுக்கெல்லாம். அகதி என்ற வார்த்தையை விட்டால் வேறு வார்த்தைக் கிடைக்கவேயில்லையா, அல்லது அந்த வார்த்தைதான் பொருத்தமானது என்று சுலபமாகக் கண்டு கொண்டார்களா? அகதி என்கிற வார்த்தை அவரைக் குமட்டச் செய்தது. இந்த வார்த்தையைப் பிரயோகித்தவன்

யார் என்று ஒவ்வொருவரின் முகங்களிலும் வலி கிளம்ப குத்த வேண்டும் போலிருந்தது.

புதிய பஸ் ஸ்டேண்ட் வழியைத் தட்டியில் குறித்திருந்தார்கள். அந்த பாதையின் இன்னொருபுறம் அகதி முகாமிற்குச் செல்லும் வழி என்று அம்பு குறியிட்ட பலகை இருந்தது. அம்புக் குறியைப் பார்த்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தார்.

பல்வேறு விலங்குகளை ஒரே கொட்டிலில் அடைத்து விட்ட மாதிரி குரல்களின் சேர்க்கை இருந்தது. சுலபமாக யாருக்கோ கட்டுப்பட்டவர்கள் போல அவர்கள் இருந்தார்கள். எல்லோர் முகங்களிலும் சோர்வு. குழந்தைகளின் வீறிடலை முகங்களில் தேக்கி இருந்தார்கள். எதை எதையோ இழந்து விட்டு வந்தது தெரிந்தது. கம்பி வேலி யொன்று நின்றிருந்தது. உள்ளே நீண்ட கொட்டகை. அதனைச் சுற்றிலும் வேயப்பட்ட தென்னை கூரைகள் புதிதானவையாக இருந்தன. முள்முனைக் கம்பிகளை ஒன்றாய் திரட்டி கட்டி வைத்த மாதிரி ஜனங்கள் நெருக்கமாய் இருந்தனர். யேசுநாதரின் தலையில் முட்களின் திரட்டை சூடிவிட்டது போல கம்பிகளுக்கு இடையில் அவர்கள் தென்பட்டனர்.

வேலி அருகில் போய் நின்றார். கம்பியின் கூர்மை கன்னத்தில் பட்டது. சொரசொரப்பான உணர்வு. கன்னத்திலிருந்து உடம்பு முழுவதும் நிறைந்துவிட்டது போலிருந்தது. உடம்பை முள் முனைக்கப்பிகளில் சாய்த்துக் கொண்டு நிற்க வேண்டும் போலிருந்தது. சாய்ந்து கிடக்க வேண்டும். ரத்தம் உடம்பு பூராவும் நனைக்கவேண்டும். கையிலிருக்கும் பெட்டி பிரக்ஞை தவற நழுவி விடவேண்டும். இந்தக் கொட்டிலில் கேட்கும்ஈனக்குரலுக்கு முன் இந்த ரத்தம் சொரிதல் சுலபமானதுதான். எவர் எவர் கையிலோ பட்டு சாவதை விட முள்முனைக்கம்பிகளில் உடம்பைக் கிடத்தலாம். மெல்ல பிரக்ஞை இழந்து போகலாம் என்றிருந்தது அவருக்கு.

கொட்டிலில் உட்கார்ந்திருப்பது யார்? மகேந்திரனா? அவன் முகத்தில் முள் முனைக்கம்பிகள் கீறினது போல ரத்த விளாசல்கள். தீராத வியாதியை உடம்பில் தேக்கி வைத்திருப்பவன் போல இருந்தான். விதவிதமான ஆயுதங்கள் அவன் மேல் தாக்க அதிலிருந்து மீண்டவன் போல் இருந்தான். அவன் முகத்து தாடி எந்தக் காலத்தது? பல வருடங்களாகக் கைகளின் ஸ்பரிசம் கூட இல்லாமல் முரட்டுத்தனமாய் நீண்டிருந்தது தாடி. இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு நீளமாய் வளர்ந்து விட்டதா? இன்னும் கொஞ்சம் நீளமும், அடர்த்தியுமாக வளர்ந்து விட்டால் அடையாளம் கண்டு கொள்வது சிரமம்தான். வேலியின் பக்கமே நகர்ந்து மீண்டும் அந்த முகத்தையேத் தேடிக் கொண்டிருந்தார்.

சட்டென அந்த முகம் மறைந்துவிட்டது போலிருந்தது. ஆனால் தாடியுடனான வெவ்வேறு முகங்கள் முளைத்தன. எல்லோரின் தாடிகளையும் ஒன்றாக இணைத்துக் கட்டி இருந்தார்கள். அவர்களின் அசைவின் போது வேதனையை அவர்கள் முகங்கள் தொனித்தன. ஒரு நொடியில் சடசடவென அவர்களைக் கீழே வீழ்த்தி விட்டு யாரோ சிரிப்பது கேட்டது. தாடிகளைக் களைந்து எறிவதற்காக வரும் ஒருவனுக்காய் அவர்கள் காத்திருக்கிற மாதிரிபட்டது. அது தானாக இருக்கக்கூடாதா என நினைத்தார் வெங்கிட்டய்யா

அவரருகில் வந்து நின்றவன் போலீஸ்காரனாக இருக்கவேண்டும் என நினைத்தார். தலைமுடி சீராகவும் முறையாகவும் வெட்டப்பட்டிருந்தது. வலிமையானக் கைகள் அவனின் பலத்தைக் காட்டியது.

''என்ன அகதியா...பேரை பதிவு பண்ணிக்கப் போ...'' சட்டென விழித்தமாதிரி எதுவும் சொல்லாமல் அவரையேப் பார்த்துக் கொண்டிருந்தான்.

‘‘இங்கிருந்து போறவங்கன்னா அவங்களுக்கு முகாம் இன்னொரு எடத்திலெ இருக்கு. வெளியிருந்து வர்ரவங்க முகாம்தா இது.

நீ எந்த அகதி’’

வெவ்வேறான அகதிகள். வெவ்வேறான முகாம்கள். எங்கு வேண்டுமானாலும் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாமா. தான் யார் என்பதை இனம் கண்டுதான் செய்து கொள்ள வேண்டும். இந்த இரண்டு முகாம்களுக்கு மத்தியில் நிற்க முடியாதா. தன்னை யார் என்று சொல்லிக் கொள்வது என்றும் தெரியவில்லை. சொல்லாவிட்டால் யார் என்று கேட்டு உலுக்கி எதையாவது உளற வைத்து விடுவார்கள் என்றிருந்தது.

கையிலிருந்த பெட்டியைப் பார்த்தார். மேலிருந்து வீசியெறியப்பட்ட பெட்டி திறந்து அதிலிருந்து பொருட்கள் சிதறுவது போலதான் விழுந்து கொண்டிருப்பதாகப்பட்டது.

□ □ □

INDIAN INSTITUTE OF ADVANCED ST...
Acc. No. 89980
Date 15-7-98

தமிழகத்திற்கு வெளியே இருந்து கொண்டு தமிழில் நல்ல கதை எழுதும் நல்ல எழுத்தாளர்களுள் சுப்ரபாரதி மணியனும் ஒருவர் செகந்திராபாத் வாசி. பத்திரிகை, படைப்பு, விமர்சனம் எனக் கிளை பரப்பி வருகிறவர். மனித வாழ்வின் சாரத்தை அதன் நிதர்சனத்தோடு நிறம் மாறாமல் நிஜமாகவே வடித்துக் காட்டுவதில் வல்லவர்.

'சுடுமணல்' இவரது புதிய நாவல். தமிழன் இன்று தமிழனாகத் தமிழகத்திலும் சரிதான், பிற மாநிலங்களிலும் சரிதான் வாழமுடியாமல் வதைபடுவதை இயல்பாக - எதார்த்தமாகச் சித்தரித்திருக்கிறார். சமீபத்தி[illegible] பெற்ற இவரது கை வண்[illegible] பளிச்சென்று எழுதப்பட்டி[illegible] உங்கள் இதயத்தையும் சுடும்.

Library IIAS, Shimla
T 891.481 03 M 314 C
00089980